உதயன்
சுடர்: 29 கதிர்: 244 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 12, திங்கள் 28.07.2014
stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily
பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

28 JUL 2014

தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04



தாக்குதல் ஆரம்பம் 7



படகுகளைக் கூட மீட்க முடியாத மோடி 8



புகழ் பாடிய சுவாமி 14

# பொதுவேட்பாளர் குறித்து ஆராய்கிறது கூட்டமைப்பு

## கள நிலைவரத்தைக் கணிக்க விரைவில் குழு

கொழும்பு, ஜூலை 28
ஜனாதிபதித் தேர்தலை அடுத்த ஆண்டு முற்பகுதியில் நடத்துவதற்கு அரசு உத்தேசித்துள்ள நிலையில், எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் வியூகத்துக்கு ஆதரவு வழங்குவதா, அவ்வாறு ஆதரவு வழங்குவதாயின் பொது வேட்பாளராக எவரது பெயரைப் பரிந்துரைப்பது என்பன தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்பீடம் தீவிரமாக ஆலோசித்து வருகின்றது என்று தெரியவருகின்றது. இந்த விடயங்கள் தொடர்பில் தீர்மானிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விரைவில் குழுவொன்றை நியமிக்கவுள்ளனர் என்றும் தெரியவருகின்றது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், "ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளர் தொடர்பில் எதிர்க் கட்சிகள் இன்னமும் ஒரு மித்த நிலைப்பாட்டுக்கு வரவில்லை. இதனால் யாரை பொது வேட்பாளராக நிறுத்துவதற்கு ஆதரவளிப்பது என்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் முடிவு செய்யவில்லை. எனினும், இதுதொடர்பில் நாம் பரிசீலித்து வருகின் றோம்" - என்றார்.

2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை எதிர்க்கட்சிகள் களத்தில் இறக்கின. இவரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்தது. இந்தத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் மஹிந்த ராஜபக் ஷவையும் விட சரத் பொன்சேகா அமோக வாக்குகளைப் பெற்று முதலிடத்திற்கு வந்தார். எனினும், தெற்கில் மஹிந்தவுக்கு அதிக வாக்குகள் கிடைத்ததால் பொன்சேகா தோல்வியடைந்தார். இந்தத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ 60 இலட்சத்து 15 ஆயிரத்து 934 வாக்குகளையும், சரத் பொன்சேகா 41 இலட்சத்து 73 ஆயிரத்து 185 வாக்குகளையும் பெற்றிருந்தனர். மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் ஐ.நா. குழு எதிர்வரும் மார்ச்சில் ஜெனிவாவில் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ள காலப்பகுதியிலேயே ஜனாதிபதித் தேர்தலை இங்கு நடத்துவதற்கு

22 ஆம் பக்கம் பார்க்க

## அகதிகள் 157 பேரும் கொக்கோஸ் தீவுக்கு

லண்டன், ஜூலை 28
ஆஸ்திரேலிய அதிகாரிகளால் சுமார் ஒரு மாதகாலமாக நடுக்கடலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் 157 பேரும் கொக்கோஸ் தீவுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அவர்கள் தீவுக்கு அழைத்துச் செல்லப்படும் காட்சிகள் அடங்கிய காணொலியை 'தி கார்டியன்' ஊடகம் வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து அந்த ஊடகம் தெரிவித்துள்ளதாவது,

சுங்க அதிகாரிகளும், பொலிஸாரும் 157 தமிழர்களை கரையோரத்தில் வரிசையில் நின்ற பஸ் வண்டிகளுக்கு அழைத்துச் சென்றுள்ளனர். இன்று (நேற்று) நண்பகல் புறப்பட்டுச் சென்றிருக்கின்றன. பின்னர் விமானங்களில் புகலிடக் கோரிக்கையாளர்கள் 157 பேரும் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளனர்.

முதல் விமானம் நண்பகல் 12.40 அளவில் புறப்பட்டுச் சென்றது. இந்த விமானம் மேற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள கேர்ட்டின் தடுப்பு முகாம் நோக்கி சென்றுள்ளது. ஹவர் எயார் லைன்ஸ் இலச்சினையுடன் கூடிய நவுரு விமானச் சேவைகள் நிறுவனத்திற்கு சொந்தமான இரண்டாவது விமானம் 2.25 அளவில் புறப்பட்டுள்ளது. அதில் புகலிடக்கோரிக்கையாளர்கள் 65 பேருடன் ஆஸ்திரேலிய அதிகாரிகளும் சென்றுள்ளனர்.

22 ஆம் பக்கம் பார்க்க



காஸாவில் இஸ்ரேல் தனது இராணுவ தாக்குதல்களை மீண்டும் ஆரம்பித்துள்ளது. காஸாவின் பல பகுதிகளிலும் பெரும் பீரங்கி குண்டுச் சத்தங்களை கேட்கக்கூடியதாக உள்ளது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இருபத்து நான்கு மணி நேரமாக மனிதாபிமான தாக்குதல் இடை நிறுத்தத்தை நீடிக்க இஸ்ரேல் சம்மதித் திருந்த நிலையிலேயே மீண்டும் தாக் குதல்கள் ஆரம்பமாகியுள்ளன. அதேவேளை, இஸ்ரேலிய துருப்பினர் பாலஸ்தீன நிலப்பரப்பில் இருக்கும் வரையில் தாம் தாக்குதல்களை நிறுத்தப்போவதில்லை என்று ஹமாஸ் தெரிவித்துள்ளது. கடந்த ஜூலை 8 ஆம் தேதி ஆரம்பித் திருந்த மோதல்களில் இதுவரை ஆயிரத்துக்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர்.

## அடுத்த மாதம் அதிகரிக்கின்றன தபால் கட்டணங்கள்

கொழும்பு, ஜூலை 28
எதிர்வரும் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தபால் கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளன என்று இலங்கை அஞ்சல் திணைக்களம் அறிவித்துள்ளது.

குறித்த கட்டண அதிகரிப்புக்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது என்றும், அதனடிப்படையிலேயே தபால்கட்டணங்கள் உயர்த்தப்படவுள்ளன என்றும் தெரிவித்துள்ள அஞ்சல் திணைக்களம், உள்ளூர் கடிதம் ஒன்றை அனுப்புவதற்கான முத்திரையின் ஆகக் குறைந்த பெறுமதி 10 ரூபாவாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை தபால் கட்டணங்களில் மாற்றங்கள் கொண்டுவரப்படுவது வழமை. ஆயினும் தற்போது ஆறு ஆண்டுகளுக்குப் பின்னரே தபால் கட்டணங்களில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.(ற)

## தீவிரவாதக் குழுக்களின் தளங்கள் எவையும் இலங்கைக்குள் இல்லை

### பாதுகாப்பு அமைச்சு திட்டவட்டமாகத் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 28
இலங்கையில் அல் - குவைதா அமைப்போ அல்லது ஏனைய பயங்கரவாத அமைப்புகளோ தளங்களைக் கொண்டிருக்கவில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது பாதுகாப்பு அமைச்சு.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ருவான் வணிகசூரிய,

"வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புகள் இலங்கையைத் தமது பயிற்சித் தளமாக வைத்திருக்கின்றன என்று பல சந்தர்ப்பங்களில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அவ்வாறான குழுக்கள் இலங்கைக்குள் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு எந்தச் சந்தர்ப்பங்களையும் வழங்கவில்லை. பயங்கரவாதம் எந்த வடிவமாக இருந்தாலும் பயங்கரவாதமே. முஸ்லிம்களோ, முஸ்லிம் குழுக்களோ இலங்கைக்குள் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கமுயன்றால் அதற்கு இடம் வழங்கப்படாது. விடுதலைப் புலிகள் அமைப்பு எவ்வாறு தோற்கடிக்கப்பட்

22 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி ஆணைக்குழுவிடமும் சாட்சியம் வழங்குவதற்கு தயார்

### எரிக் சொல்ஹெய்ம் கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 28
இலங்கை அரசு அமைத்துள்ள ஆணைக்குழு முன்பாகவும் சாட்சியமளிக்கத் தயாராகவே இருக்கின்றேன் என்று தெரிவித்துள்ளார் நோர்வேயின் முன்னாள் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்.

"என்னிடம் மறைப்பதற்கு எதுவும் இல்லை. எனக்குத் தெரிந்தவற்றை யார் முன்னிலையிலும் தெரிவிப்பதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன்"- என்று அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் நியமிக்கப்பட்டிருக்கும் விசாரணைக் குழு தனது பணிகளை ஆரம்பித்துள்ளது. அந்த விசாரணைக் குழு முன்பாகச் சாட்சியமளிப்பதற்குத் தயார் என்று எரிக் சொல்ஹெய்ம் ஏற்கனவே தெரிவித்திருந்தார். இந்தநிலையில் இலங்கை அரசு காணாமற்போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பணிகளை விரிவுபடுத்தியதுடன்,

22 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



மலையகத்தில் நேற்றுப்பிற்பகல் முதல் கன மழை மற்றும் பனிமூட்டத்துடன் கூடிய சீரற்ற காலநிலை காணப்படுகின்றது. அதனால் பொதுமக்களை அவதானத்துடன் இருக்குமாறு அறிவித்துள்ள பொலிஸார், ஹட்டன் - கொழும்பு பிரதான வீதி மற்றும் ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் பனிமூட்டம் காணப்படுவதன் காரணமாக, அந்த வீதிகளைப் பயன்படுத்தும் வாகன சாரதிகளை வாகனத்தை அவதானத்துடன் செலுத்துமாறும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ற)

# அரசின் புதிய வர்த்தகம் ஹெரோயின் விற்பனை

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 28

ராஜபக்ஷ அரசின் புதிய வர்த்தகம் ஹெரோயின் விற்பனை செய்வதே என்று தெரிவித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க.

மாத்தளை லக்கல பிரதேசத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குச்சாவடி மட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதிகளுக்கு தெளிவுப்படுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"மகிந்த ராஜபக்ஷ அரசு நாட்டின் விவசாயிகளுக்காக எந்த சேவையையும் செய்யவில்லை. நாட்டில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் விவசாயிகளுக்கு தமது உற்பத்தி பொருள்களுக்கு உரிய விலை கிடைப்பதில்லை"- என்றும் அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# பொலிஸாரின் நடவடிக்கை அதிருப்தி ஏற்படுத்துகிறது

## சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 28

பொலிஸ் மா அதிபர் என்.கே. இளங்கக்கோனின் நடவடிக்கைகள் குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ளார் சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் உபுல் ஜயசூரிய.

தமக்கு பாதுகாப்பு வழங்குமாறு அவர் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்திருத்திருக்கும் நிலையிலேயே இவ்வாறு அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

பாதுகாப்பு வழங்குவது குறித்து சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளரிடம் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளபோதும், பொலிஸ் சட்டத்தின் 22ஆம் சர்த்தின் அடிப்படையில் பாதுகாப்பை வழங்க முடியும் என்றும் உபுல் ஜயசூரிய குறிப்பிட்டுள்ளார்.

இனந்தெரியாத மர்ம நபர்கள் தம்மைப் பின்தொடர்வதாக முறைப்பாடு பதிவு செய்துள்ள உபுல் ஜயசூரிய, தமக்கு உயிரச்சுறுத்தல் காணப்படுகின்றது என்றும் அதில் குறிப்பிட்டுள்ளார். (ற)

# தற்போதுள்ள அரசு முழுமையானதல்ல

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கூறுகின்றார்



கொழும்பு, ஜூலை 28

தற்போதைய அரசு நூற்றுக்கு நூறு முழுமை பெற்ற அரசு அல்ல. ஆயினும் இந்த அரசு நாட்டை உயர்ந்த இடத்துக்கு கொண்டு சென்றுள்ளதை மக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்- இவ்வாறு தெரிவித்துள்ளார் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன.

தம்புள்ளையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"அரசு ஒன்றை நடத்தும்போது அது நூற்றுக்கு நூறு முழுமை பெற்ற அரசாக இருக்காது. உலகில் எங்கும் அப்படியான அரசுகள் இல்லை. 10 வருடங்களுக்கு முன்னர் இலங்கை எப்படி இருந்தது? அந்த யுகம் நினைவில் உள்ளதா? 25 வருடங்களுக்கு முன் இப்படியான அபிவிருத்தி நாட்டில் ஏற்பட்டதா?

நாட்டில் இன்றிருக்கும் அமைதி அன்றிருந்ததா?, நாட்டில் ஏதேனும் அரசியல் மறுசீரமைப்பு நடக்க வேண்டுமாயின் அது மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான இந்த அரசிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சுமார் 10 ஆண்டு கால அரசில் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு அமைதி ஏற்படுத்தப்பட்டது. அமைதியை ஏற்படுத்தி முன்னெடுக்கும் அபிவிருத்தியுடன் நாட்டுக்கு தேவையான ஏனைய சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களை மேற்கொண்டு நாம் முன்னோக்கி செல்ல வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஆற்றில் மூழ்கி சிறுவர்கள் இருவர் சாவு

மன்னார், ஜூலை 28

மூதூர் பொலிஸ் பிரிவிலுள்ள சம்பூர் தங்கவேலாயுதபுரம் பகுதியில் ஆற்றில் மூழ்கி இரண்டு சிறுவர்கள் நேற்று உயிரிழந்துள்ளனர்.

மாடு மேய்ப்பதற்காகச் சென்ற ஐந்து சிறுவர்கள் ஆற்றில் மூழ்கினர் என்றும், அவர்களில் மூவர் காப்பற்றப்பட்டுள்ளனர் என்றும் தெரியவருகின்றது. இந்தச் சம்பவத்தில் புதுகுடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 12 மற்றும் 9 வயதான இரண்டு சிறுவர்களே உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. சடலங்கள் தற்போது மூதூர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# அலரி மாளிகை எல்லைக்குள் பறந்த பட்டத்தால் பரபரப்பு

## உடனடியாகக் கீழிறக்கினர் பொலிஸார்

கொழும்பு, ஜூலை 28

கொழும்பு, கொள்ளுப்பிட்டி முகாந்திரம் வீதிக்கு அருகில் வானில் பறந்துகொண்டிருந்த பட்டம் ஒன்றைப் பொலிஸார் தலையிட்டுக் கீழிறக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை நடந்துள்ளது. வானில் பறந்து கொண்டிருந்த பட்டம் அலரி மாளிகையின் எல்லைக்குள் வந்ததையடுத்தே, பதறிப் போன பொலிஸார் பட்டத்தின் உரிமையாளரைக் கண்டு பிடித்து பட்டத்தைக் கீழிறக்கியுள்ளனர்.

அலரி மாளிகையின் எல்லைக்குள் பட்டம் பறப்பது, பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று தெரிவித்தே பொலிஸார் பட்டத்தைக் கீழிறக்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# கடற்குருவி முட்டைகளுடன் நால்வர் கைது



மன்னார், ஜூலை 28

தலைமன்னாரில் 452 கடற்குருவி முட்டைகளைப் படகில் கொண்டு சென்ற 4 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே இராமேஸ்வரத்தில் அமைந்துள்ள மணற் தீவிலிருந்து இந்த முட்டைகள் கொண்டு வரப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மற்றும் தலைமன்னார் பகுதிகளை சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களை மன்னார் நீதவான் முன்னிலையில் முற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# பலப்படுத்தப்பட்டுள்ளது கரையோரப் பாதுகாப்பு

## தமிழக மீனவர் போராட்டத்தால்

கொழும்பு, ஜூலை 28

கரையோரப் பாதுகாப்பு உச்ச அளவில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று கடற்படை அறிவித்துள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி பெரியளவில் போராட்டமொன்றை நடத்த உள்ளதாக தமிழக மீனவர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். ஆயிரக் கணக்கான மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பிற்குள் பிரவேசிக்க உள்ளனர் என்றும், இலங்கையிடம் புகலிடம் கோரவுள்ளனர் என்றும் எச்சரித்திருந்தனர்.

ஆயினும், கரையோரப் பாதுகாப்பு உச்சளவில் உறுதி செய்யப்பட்டுள்ளது என்று கடற்படைப் பேச்சாளா கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார். இலங்கைக் கடற்பரப்பிற்குள் எவரும் பிரவேசிப்பதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது என அவர் குறிப்பிட்டுள்ள அவர், 24 மணி நேரமும் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

**எதிர்வரும் 2ஆம் திகதி பெரியளவில் போராட்டமொன்றை நடத்த உள்ளதாக தமிழக மீனவர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழையவுள்ளோம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.**

# பொது வேட்பாளரை நிறுத்தினால் ஜனாதிபதிக்கே பெரும் அனுகூலம்

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 28

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகள் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கே அது சாதமாக அமையும் என தெரிவித்துள்ள அமைச்சர் பசில் ராஜபக்ஷ, ஒன்றுக்கு மேற்பட்ட எதிர்க்கட்சிகளின் வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட்டால், அது ஜனாதிபதிக்கு பாதிப்பாக அமையும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

"அரசின் மீது அதிருப்தி கொண்டுள்ள வாக்காளர்களை தம் பக்கம் ஈர்த்ததன் காரணமாகவே ஜே.வி.பி மற்றும் சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி ஆகியன கடந்த மாகாண சபைத் தேர்தலில் பெரும் வளர்ச்சியைக் காட்டின. இவ்வாறான நிலையில் எதிர்க்கட்சிகள் இணைந்து பொது வேட்பாளரை நிறுத்துவது குறித்து அச்சமடைய தேவையில்லை.

ஆனால், சிங்கள பௌத்த வாக்குகளை சிதறடிக்கும் வகையில் ஏனைய அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்"- என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

பக்கங்கள்: இருபத்திநான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா யாழ். 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 12 திங்கட்கிழமை (28.07.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 244

# இரண்டு வருடங்களுக்குள் வடக்கில் கல்வி அபிவிருத்தி

## மத்திய கல்வி அமைச்சர் உறுதி

கிளிநொச்சி, ஜூலை 28

**2016 ஆம் ஆண்டுக்குள் வடமாகாண பாடசாலைகளுக்கு சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். கொழும்பு றோயல் கல்லூரிக்கு மேலான வசதி வாய்ப்புகள் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு ஏற்படுத்திக்கொடுக்கப்படும். இவ்வாறு உறுதிமொழி வழங்கினார் மத்திய கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன.**

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் 70 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத் தொகுதி நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மத்திய கல்வி அமைச்சர் கட்டடத்தை நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். இதன் பின்னர் அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடமாகாண சபை உருவாக்கப்பட்ட பின்னர் முதலமைச்சர் என்னை அழைத்து வடமாகாண கல்வி நிலைமைகளை தெளிவு படுத்தினார். மாணவர்களது அடைவு மட்டம், இருக்கக் கூடியவளங்கள், எதிர்கொள்ளும் நெருக்கடிகள் என்பன குறித்து விளக்கிய அவர் இவ்வாறான நெருக்கடிகளை தீர்ப்பதற்கு ஒரு கல்வித் திட்டம் ஒன்றை வடிவமைப்பதற்கு அவர் என்னுடன் ஆலோசித்தார். இது தொடர்பான கலந்தாய்வு மாநாட்டிலும் நான் பங்கு கொண்டிருந்தேன். அதன் மூலம் தயாரிக்கப்பட்ட செயற்றிட்டம் என்னிடம் கிடைத்துள்ளது. அதனைக் கொண்டு 2016 ஆம் ஆண்டுக்குள் வடமாகாண பாடசாலைகளுக்கு சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு

(22 ஆம் பக்கம் பார்க்க)



# ஊடகவியலாளர்களை அச்சுறுத்தி உண்மைகளை மறைக்க முடியாது

## செல்வம் எம்.பி. கண்டனம்

மன்னார், ஜூலை 28

ஊடகவியலாளர்களை அச்சுறுத்தி முடக்குவதால் உண்மைகளை முடக்கி விடலாம் என அரசு கருதக்கூடாது. அவ்வாறு ஊடகக் குரலை நசுக்கினால் அதனால் வரும் ஆபத்து அரசுக்கே பேராபத்தாக மாறும் இவ்வாறு தெரிவித்துள்ளார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்.

ஓமந்தை சோதனைச்சாவடியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஊடகவியலாளர்களை தடுத்து பொலிஸ் நிலையம் அழைத்துச்சென்று அவர்கள் மீது அபாண்டமான பழியைச் சுமத்தி இடையூறு விளைவித்த சம்பவத்தை தான் வன்மையாகக் கண்டிக்கிறார் என்றும் அவர் தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக உண்மையை வெளிப்படுத்தும் ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாக அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர். அந்த வகையில் யாழ்ப்பாணத்திலிருந்து ஊடகப் பயிற்சிப் பட்டறைக்குச் சென்ற ஊடகவியலாளர்களுக்கு அரச தரப்பினர் ஏற்படுத்திய இடையூறு அமைந்துள்ளது.

இலங்கையில் தற்போது ஊடக சுதந்திரம் பூச்சியமாகவே காணப்படுகின்றது.

போர்க் காலத்தில் இருந்ததையும் விட தற்போது ஊடகவியலாளர்களுக்கு நெருக்கடிகள் அதிகரித்துள்ளன. வட பகுதியில் இருந்து உண்மைகளை வெளிக்கொண்டுவர செயற்படும் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர், தாக்கப்படுகின்றனர், தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றனர். இது அவர்களின் சுதந்திரமான பணிக்கு இடையூறாக இருக்கின்றது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை

(22 ஆம் பக்கம் பார்க்க)

# தரமற்ற விமான நிலைய பட்டியலில் கட்டுநாயக்க

கொழும்பு, ஜூலை 28

ஆசியாவில் திறமையற்ற விமான நிலையங்களில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையமும் அடங்குகிறது என்று விமானப் போக்குவரத்து ஆய்வு நிறுவனம் தனது தரப்படுத்தல் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

உலகம் முழுவதும் உள்ள வர்த்தக - சர்வதேச விமான நிலையங்களை தரப்படுத்தி வெளியிடப்பட்ட அந்த அமைப்பின் அறிக்கையில் 200 விமான நிலையங்கள் தரப்படுத்தப்பட்டுள்ளன.

இதில் அமெரிக்காவின் அட்லாண்டா சர்வதேச விமான நிலையம் 12 ஆவது வருடமாகவும் முதலிடத்தைப் பெற்றுள்ளது. தவிர வட அமெரிக்காவின் சர்லோட், ஒக்லஹோமா,

(22 ஆம் பக்கம் பார்க்க)

# அடிக்கடி ஏற்படும் மின்தடையால் நெருக்கடியில் மாணவர்கள்

## மன்னாரில் இந்த நிலைமை

மன்னார், ஜூலை 28

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியான மின்வெட்டு இடம்பெற்று வருவதால் க.பொ.த உயர்தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் பெரும் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர் என்று பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

பரீட்சைக்காலத்தில் முன்னறிவித்தலின்றி மின்சாரம் தடைப்படுவதால் தமது பிள்ளைகள் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். இது குறித்து மின்சார சபையினருக்கு முறையிட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் பெற்றோர் குற்றம் சாட்டுகின்றனர்.

இரவு மற்றும் அதிகாலை வேளைகளில் மின்சாரம் அடிக்கடி தடைப்படுகிறது. இதற்கான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை. இரண்டாம் தவணைப் பரீட்சைகள் நடைபெற்று வரும் நிலையில் அந்தப் பரீட்சைகளை எதிர்கொள்ளும் மாணவர்களும் அடுத்த மாதம் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சையில் பங்குகொள்ளவுள்ள மாணவர்களும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று ஆசிரியர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் மன்னார் மாவட்ட மின்சார சபையிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது.

எமது பிரதான காரியாலயம் வவுனியா மாவட்டத்தில் உள்ளது . அங்குள்ள பிரதான பொறியிலாளர் தான்

(22 ஆம் பக்கம் பார்க்க)

# சு.கவை மீட்க மாற்று அணி?

கொழும்பு, ஜூலை 28

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அதன் தற்போதுள்ள தலைவரிடமிருந்து மீட்பதற்காக கட்சிக்குள் உள்ள மாற்று அணியொன்று முயன்று வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தற்போதைய நிர்வாகம் குறித்து அதிருப்தியடைந்துள்ள மூத்த உறுப்பினர்கள் ஆதரவு அந்தக் குழுவினருக்கு கிடைத்துள்ளதாகவும் தகவல்கள் வெளி யாகியுள்ளன.

இந்த முயற்சியில் தொடர்புபட்டவர்கள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் நெருக்கமானவர்கள் எனவும், புதிய உறுப்பினர்கள் மற்றும் கட்சி தாவிகளால் தாங்கள் புறக்கணிக்கப்படுவதாக அவர்கள் கருதுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய ஆட்சி அமைவ

(22 ஆம் பக்கம் பார்க்க)

# வைத்தியசாலை தாக்குதல் சம்பவம்; ஊழியர்கள் 6 பேருக்குப் பிணை

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியிலுள்ள எல்.ஆர்.டி.சி நிறுவன பாதுகாப்பு ஊழியர்களுக்கும் நோயாளர்களைப் பார்வையிடச் சென்றவர்களுக்கும் இடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 6 பேரும் நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.


கடந்தவாரம் இடம்பெற்ற இந்த முரண்பாட்டில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவரும் நோயாளர்களைப் பார்வையிடச் சென்ற இருவரும் காயமடைந்தனர். வைத்தியசாலையில் உள்ள தமது உறவுகளைப் பார்வையிடச் சென்றவர்களை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், பாஸ் வைத்திருக்கவில்லை என்ற காரணத்தால் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை என்றும் அதனால் குறித்த நபர்கள் வேறு சிலருடன் உள்ளே சென்று பாதுகாப்பு உத்தியோகத்தர்களைத் தாக்கினர் என்றும் தாம் திருப்பித் தாக்கியதில் இருவர் காயமடைந்தனர் என்றும் ஊழியர் தரப்பில் கூறப்பட்டது.

வெளிநபர்கள் இருவரும் பாதுகாப்பு ஊழியர்களால் பொலிஸாருக்கு அடையாளம் காட்டப்பட்டு அந்த இருவரும் கைது செய்யப்பட்டனர். எனினும் அவர்கள் காயமடைந்திருந்தால் உடனே விடுவித்து விட்டனர். இருவரும் சங்கானை வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். எனினும் மேலதிக சிகிச்சைக்காக அவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

இந்நிலையில் வைத்தியசாலை

(22 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையும் வடமராட்சி 2005 உயர்தர மாணவர் ஒன்றியமும் இணைந்து அல்வாய் பாரதிதாசன் நூலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய இரத்த தான நிகழ்வில் கலந்து கொண்ட குருதிக் கொடையாளர்கள் குருதி வழங்கினர். நிகழ்வில் 41 குருதிக் கொடையாளர்கள் கலந்து கொண்டனர். (ஒ-7)

# பழ வியாபாரிகளுக்கான கலந்துரையாடல் சுன்னாகத்தில்

## இன்று பிரதேச சபை மண்டபத்தில்


வலி.வடக்கு, ஜூலை 28

யாழ்.மாவட்டத்தில் முதல் தடவையாக பழங்கள் விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலி.தெற்கு சுன்னாகம் பிரதேச சபை மண்டபத்தில் பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

வலி.தெற்கு பிரதேச சபையும் உடுவில் பிரதேச சுகாதார வைத்தியதிகாரி பணிமனையும் இணைந்து நடத்தும் இந்தக் கருத் தரங்கில் சுன்னாகம் பிரதேச சபைக்கு உட்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட பழ விற்பனையில் ஈடுபடுபவர்கள் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

சுன்னாகம் மருதனார்மடம் உட்பட பிரதேச சபைகளின் சந்தைகளில் பழ வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் உட்பட தென்னிலங்கையில் இருந்து வந்து நடைபாதை மற்றும் வாகனங்களில் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகளும் இனங்காணப்பட்டு, இந்தக் கலந்துரையாடலுக்கு அழைக் கப்பட்டுள்ளார்கள்.

குறிப்பாக பழ வகைகளுக்கு மருந்துகள் அடித்தல் மற்றும் சந்தைப்படுத்தல், காட்சிப்படுத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்படவுள்ளது.



உடுவில் பிரதேச சுகாதார வைத்தியதிகாரி அ.ஜெயக்குமாரன் விவசாயத் திணைக்களப் போதனா ஆசிரியர் பொது சுகாதார பரிசோதகர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (ஒ-86)

# பாடசாலைக்கு ஊஞ்சல் கையளிப்பு

வரணி, ஜூலை 28

மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலய மாணவர்களின் பொழுது போக்கு தேவைக்காக, வித்தியாலய முன்னாள் ஆசிரியை அமரர் திருமதி ஜெகதீஸ்வரி சற்குணரத்தினம் ஞாபகார்த்தமாக ஊஞ்சல் ஒன்று அமைக்கப்பட்டு, அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

20 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த ஊஞ்சலை அன்னாரின் கணவர், பிள்ளைகளால் கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை ஆசிரிய சமூகத்திடம் கையளித்தனர். (ஒ-122)


மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்

Congratulations Congratulations



சோமசேகரம் குகநேசன் அதிபர் தரம் I

(யா/நயினாதீவு மகா வித்தியாலயம்)

சேவை விவரம்

03.09.1979-17.01.1982 கிளி/உருத்திரபுரம் ம.வி. - ஆசிரியர்
18.01.1982-31.12.1983 யா/பலாலி ஆசிரியர் கலாசாலை
01.01.1984-31.01.1984 யா/மண்டைதீவு ம.வி. - ஆசிரியர்
01.02.1984-02.12.1990 யா/அனலைதீவு சதாசிவ ம.வி. - ஆசிரியர்
01.01.1991-31.05.1993 யா/அனலைதீவு வயலூர் அ.த.க. - பதில் அதிபர்
01.06.1993-12.10.1997 யா/அனலைதீவு வயலூர் அ.த.க. - அதிபர்
13.10.1997-02.05.2010 யா/நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி வித். - அதிபர்
03.05.2010-28.07.2014 யா/நயினாதீவு மகா வித்தியாலயம் - அதிபர்

28.07.2014 திங்கட்கிழமை தமது சேவையில் இருந்து ஓய்வுபெறும் எமது அதிபரை பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: யா/நயினாதீவு மகா வித்தியாலய பாடசாலை சமூகம்

(50289)(7.6.3)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



Congratulations

12.07.2014 சனிக்கிழமை நடைபெற்ற University of Greenwich இல் (UK) நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் (B.Sc) Computer Science பட்டம் பெற்ற எமது செல்வப் பேரன்

பத்மாதரன் பிருந்தாபன்

அவர்களை அகமகிழ்ந்து ஆசீர்வதித்து வாழ்த்துவதுடன் மேன்மேலும் பல பட்டங்களைப் பெற்று சாதனை படைக்க இறையருளை வேண்டி நிற்கின்றோம்.

(50290)(4.6)

டச்சுவீதி, சித்தங்கேணி.

வாழ்த்துவோர்: அப்பம்மா, சித்தப்பாமார்.



மத்தியின் மணிவிழா நாயகனை பாராட்டி வாழ்த்துகின்றோம்

2014.08.29 அன்று அகவை அறுபதில் ஓய்வுபெறும் பகுதித் தலைவர்

மாணிக்கம் யோசப் ராஜரெட்ணம்

அவர்களை கல்லூரி சமூகத்தின் சார்பில் பாராட்டி வாழ்த்துகிறோம்.



ஆசிச்செய்தி - மெதடிஸ்த குரு

கல்விச்சேவையில் 35 வருடங்கள் பணியாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் திருவாளர் மாணிக்கம் யோசப் ராஜரெட்ணம் அவர்களை வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கின்றேன். குறிப்பாக அவர் 1997ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை இந்த 17 வருடங்களிலும் யாழ் மத்திய கல்லூரிக்கு ஆற்றிய பணி மிகவும் மேன்மையானது. தனது தரமான ஆக்கபூர்வமான கருத்துக்களை எப்பொழுதும் துணிவுடன் முன்வைத்து பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணையாய் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். எமது மெதடிஸ்த திருச்சபையின் மிஷனரிகளினால் உருவாக்கப்பட்ட இப்பாடசாலையில் ஒரு மெதடிஸ்தனாக இருந்து பாடசாலைக்கும் எமது திருச்சபைக்கும் இடையேயான உறவைப் பலப்படுத்துவதில் மிகவும் அர்ப்பணிப்புடன் இவர் பணியாற்றியதை யாரும் மறந்துவிட முடியாது. ராஜரெட்ணம் ஆசிரியர் அவர்கள் ஓய்வுபெற்றுச் செல்வது பாடசாலைச் சமூகத்திற்கும், திருச்சபைக்கும் இழப்பாக இருப்பினும் அவரது அர்ப்பணிப்பு மிக்க உழைப்பால் நாம் பெற்ற எல்லா நன்மைகளுக்காகவும் இறைவனுக்கு நன்றி செலுத்துவோம். எல்லா வல்லமையும் உள்ள கடவுள் அவரை ஆசீர்வதிப்பாராக.

அருட்திரு.C.நைல்ஸ் ரவிசங்கர்
முகாமைக்குழு, யாழ் சேகரம், யாழ்ப்பாணம்.

Best Wishes



Congratulations

மாணிக்கம் யோசப் ராஜரெட்ணம்

பகுதித் தலைவர்

(B.A, Dip.in.Edu, HNDA, HNDE)

ஆசிரிய சேவை விவரம்

ஊர்காவற்றுறை

* புனித அந்தோனியார் கல்லூரி 06.06.1977 - 28.10.1997 வரை
* யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 29.10.1997 - 29.08.2014 வரை

Best Wishes



வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யா/மத்திய கல்லூரியில் பகுதித் தலைவராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் மாணிக்கம் ஜோசப் ராஜரெட்ணம் அவர்களது சேவையைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

இவர் 1977ஆம் ஆண்டு தொடக்கம் ஆசிரியர் சேவையில் இணைந்து அர்ப்பணிப்புடன் பணியாற்றியுள்ளார். 1997 தொடக்கம் யா/மத்திய கல்லூரியில் ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் சிறப்பான பணியாற்றி ஓய்வு பெறுகின்றார். இவர் தன்னுடைய சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகள் அளப்பரியன.

இவர் தனது சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகளைப் பாராட்டுவதோடு, இவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் வாழ்த்துகிறேன்.

செ.உதயகுமார்
வலயக்கல்விப் பணிப்பாளர்.



பற்றுடன் பணியாற்றிய பழைய மாணவன்

இன்று மணிவிழாக் காணும் மாணிக்கம் ஜோசப் ராஜரெட்ணம் ஆசிரியர் அவர்கள் இக்கல்லூரியில் 17 வருடங்களைப் பூர்த்தி செய்து ஓய்வுபெறும் நிலையில் அவரை உளப்பூர்வமாக வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். அவர் தமது பணிக் காலத்தில் நீண்ட காலம் ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும் இருந்து தமது சேவையினை நிறைவாக வழங்கியிருந்தார் என்பதில் மனநிறைவு அடைகின்றேன். அத்துடன் கிறிஸ்தவ மாணவர்களுக்கும் அவர்களின் ஆன்மீக விடயங்களுக்கும் நீண்ட காலம் பொறுப்பாக இருந்து சிறப்பாக தனது பணிகளை முன்னெடுத்து வந்துள்ளார். மேலும் தனக்கு வழங்கப்பட்ட பணிகளை நேர்மையாகவும், துணிச்சலுடனும், கண்டிப்புடனும் ஆற்றி வந்துள்ளார். பழைய மாணவன் என்ற வகையில் கல்லூரியின் மீது அதிக பற்றும், பாசமும் கொண்டவர். இதன் காரணமாக பாடசாலையின் சகல செயற்பாடுகளிலும் உயர் தரம் பேணப்பட வேண்டும் என்பதில் என்னுடன் தனது எண்ணங்களை பகிர்ந்து கொள்வது சிறப்பாக நினைவு கூரப்பட வேண்டியதொன்றாகும். மும்மொழிகளிலும் தனது ஆளுமையை வெளிப்படுத்தும் ஆசிரியர் ராஜரெட்ணம் அவர்கள் ஒப்படைக்கப்பட்ட பணிகளுடன் நிர்வாகச் செயற்பாடுகளுக்கும் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கிவந்துள்ளார். இவரின் அர்ப்பணிப்பான ஆசிரிய சேவையினை கல்லூரிச் சமூகம் சார்பாக பாராட்டுவதுடன், மணிவிழா நாயகன் தனது ஓய்வு காலத்தில் உடல் உள ஆரோக்கியத்துடன் தனது குடும்பத்தினருடன் நீண்ட காலம் இன்புற்றிருக்க எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

அதிபர் S.K.எழில்வேந்தன்.



ஆசிரியர் வட்டத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவனும், பாடசாலை மீது மிகுந்த பற்றுக் கொண்டவரும், உயர் தேசிய டிப்ளோமாவைப் பூர்த்திசெய்து, கலைத்துறைப் பட்டத்தினைப் பெற்று மெதடிஸ்த சபையினரின் கல்விப் பாரம்பரியத்தைக் கட்டிக்காத்து, கண்ணியமாக கல்விப்பணி புரிந்து மிக நீண்ட காலம் ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் கடமையாற்றி அகவை அறுபதில் (29.08.2014) சேவையிலிருந்து ஓய்வுபெறும் M.J.ராஜரெட்ணம் ஆசிரியர் அவர்களை ஆசிரியர் வட்டத்தின் தலைவர் என்ற வகையில் ஆசிரியர்களின் சார்பில் வாழ்த்துவதோடு, தனது ஓய்வு காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று வளமுடன் வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.

சி.சந்திரகுமார் ஆசிரியர்
தலைவர்,
ஆசிரியர் வட்டம்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

ஆசிரிய வட்டம் : யாழ் மத்திய கல்லூரி

பாடசாலை அபிவிருத்திச் சபை : யாழ் மத்திய கல்லூரி

(50279)(7.6.3)

## கீரிமலையில் கூடிய மக்கள் மத்தியில் சுகாதார விழிப்புணர்வு



கீரிமலையில் ஆடி அமாவாசையை ஒட்டி நேற்றுமுன்தினம் அங்கு கூடிய மக்கள் மத்தியில் சுகாதார விழிப்புணர்வுச் செயற்பாடுகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணம் கிளையும் மற்றும் ஹெல்தி லங்கா நிறுவனமும் இணைந்து மேற்கொண்டிருந்தன. அவர்கள் பரப்புரை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

இந்த வகையில் புகைத்தலுக்கு எதிரான பரப்புரைகளை மேற்கொண்டதுடன் புற்று நோய் சம்பந்தமான விளக்கங்களையும் வழங்கி துண்டுப் பிரசுரங்களையும் வழங்கினார்கள். (ஒ-86)

# வடக்கில் ரூ.1,608 மில்.செலவில் பாடசாலைக் கட்டடத் தொகுதிகள்

### வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் கொரிய நாட்டின் நிதி உதவியுடன் வடக்கில் ஆயிரத்து 608 மில்லியன் ரூபா செலவில் பாடசாலை கட்டடத் தொகுதி நிர்மாணம் மற்றும் ஆசிரியர் விடுதிகள் நிர்மாணம் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத் திட்டங்கள், தற்போது முடிவுறுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வடக்கில் தெரிவு செய்யப்பட்ட 17 பாடசாலைகளுக்கு கட்டடத் தொகுதிகளை அமைப்பதற்காக 610 மில்லியன் ரூபாவும், கணினி விஞ்ஞான ஆய்வு கூட உபகரணங்கள், அலுவலக தளபாடங்கள் மற்றும் மாணவர்களின் உயர்மட்ட கல்வி செயற்பாடுகளுக்கென 205 மில்லியன் ரூபாவும், இடைநிலை பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 516 பாடசாலைகளுக்கு, பாடசாலை அபிவிருத்தி பராமரிப்புக்காகவும் - பௌதிக வளங்களை மேம்படுத்துவதற்காகவும் 143 மில்லியன் ரூபாவும் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில்- சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி, வரணி மத்திய கல்லூரியும், மன்னாரில் புனித அன்ரனீஸ் மத்திய ம.வி, முருங்கன் மத்திய ம.வி, புனித பாத்திமா மத்திய ம.வி, அடம்பன் மத்திய ம.வியும்- கிளிநொச்சியில் முருகானந்தா கல்லூரி, முழங்காவில் ம.வியும், வவுனியாவில் சைவப் பிரகாச மகளிர் கல்லூரி, பரவைக்குளம் ம.வி, புதுக்குளம் ம.வி, கனகராயன்குளம் ம.வியும், முல்லைத்தீவில் மல்லாவி மத்திய கல்லூரியும் கட்டடத் தொகுதி அமைப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

கொரிய நாட்டின் நிதிப் பங்களிப்புடன் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்பட்ட 13 பாடசாலைகள் மற்றும் 12 ஆசிரிய விடுதிக்கான தொகுதி என்பவற்றுக்கு 650 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதில் 105 வகுப்பறைத் தொகுதிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் 3 அதிபர் விடுதிகளும், 9 ஆசிரிய விடுதிகளும் அமையப் பெற்றுள்ளன. ஆசிரிய விடுதியில் 72 ஆசிரியர்கள் தங்கி இருக்கக் கூடியதாக அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

சென் திரேசா மகளிர் கல்லூரி, சிவநகர் அ.த.க. பாடசாலை, பாரதி வித்தியாலயம், இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை, கோணாவில் அ.த.க பாடசாலை, இராமநாதபுரம் ம.வி, வட்டக்கச்சி ம.வி, பிரமந்தனாறு ம.வி, தருமபுரம் மத்திய கல்லூரி, முருகானந்தா ம.வி, வேரவில் இந்து ம.வி, இரணைதீவு றோ.க.த.க. பாடசாலை, கிராஞ்சி அ.த.க. பாடசாலை என்பவற்றிலேயே இந்த வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன"-என்றார். (வ-5)

## தேன் எடுக்க மரமேறிய இளைஞர் விழுந்து காயம்

தென்மராட்சி, ஜூலை 28

மரத்திலிருந்து தவறி வீழ்ந்து இளைஞர் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அல்லாரையில் இடம்பெற்றது. தேன் எடுப்பதற்கு மரத்தில் ஏறிய போது மரக்கிளை முறிந்து வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த செல்வரத்தினம் யசீகரன் (வயது - 25) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். (ஒ-9)

## ஆயுள் வேத வைத்தியசாலையில் தினமும் 25 பேர் வரை சிகிச்சை

குருநகர், ஜூலை 28

யாழ். நான்காம் குறுக்கு வீதியில் குருநகர் கடற்கரை வீதிக்குச் சமீபமாகவுள்ள தனியார் வீட்டில் இயங்கி வரும் யாழ். மாநகர சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் தினமும் 25 வரையான நோயாளர்கள் வருகை தந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி திருமதி கே.கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

இந்த வைத்தியசாலை திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரையிலும் சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரையும் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கி வருகிறது. இங்கு வாதம், கடிசொறி, இரத்த அழுத்தம், ஆஸ்துமா நோய்களுக்கு சிகிச்சை வழங்கப்படுகிறது. பொறுப்பு வைத்திய அதிகாரியுடன் மருந்தாளர் ஒருவரும் வைத்தியசாலையில் கடமையாற்றுகிறார்கள். சுத்திகரிப்பு வேலையை குருநகர் யூபிலி மருத்துவமனையில் கடமையாற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளர்களும் சமுர்த்தி நிவாரணத்தைப் பெறும் குடும்ப உறுப்பினர்களும் மேற்கொண்டு வருகின்றனர் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (வ-51)

## மாகாண மட்டத்தில் முதலாம் இடம்



கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த வினாசியோடை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் தரம் 6 ஆம் வகுப்பு மாணவி நிளைச்சனா உதயகுமார் கோட்ட மட்ட, கிளிநொச்சி வலயம் மட்ட போட்டிகளில் வெற்றி பெற்று வடக்கு மாகாண மட்டத்தில் நடைபெற்ற சமூக விஞ்ஞான போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

அதிகஷ்டப் பிரதேச பாடசாலையில் இருந்து தேசிய மட்ட போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவிக்கு பாடசாலை சமூகம் பாராட்டு தெரிவித்துள்ளது. (ஒ-11)




Your Professional Skills through English

*A skills integrated, learner centered participatory English Course for Adults*

**Classes will start on 09.08.2014 Saturday at 3.30 pm**




**Available @ Jaffna, Nelliady & Chavakacheri Branches**

**Photoshop CS5**

*A Job oriented Course for Job Seekers*



**Classes will start on 09.08.2014 Saturday at 10.30 am**

For more details :

*Gateway Language & ICT Centre*

337, Kasthuriyar Road, Jaffna
Phone : 021 567 5555 Fax : 021 222 7967
E - mail : gatewayjfn@sltnet.lk

Branches :

01, New Market Building, Chavakacheri.
Phone : 0215 567 0266 / 021 227 0323

Pointpedro Road, Nelliady (Near HNB).
Phone : 0215 567 7606 / 021 226 2395

(சி.15400)

**J.C.B (பைக்கோ) வாடகைக்கு**

குறிப்பு:
போக்குவரத்து கூலி அறவிடப்பட மாட்டாது



தொடர்பு இல: 021 224 1466 யாழ்ப்பாணம்
077 771 2482 சுன்னாகம்
077 984 7285 பருத்தித்துறை

இல. 207,
புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்,
K.K.S. றோட், சுன்னாகம். (50310) (10)

**தவறிவிட்டது**

பூநகரி பிரதேசசபை, பூநகரி எனும் முகவரியுடைய EPVG 7981 எனும் மோட்டார் வாகனத்தின் காப்புறுதிப் பத்திரமும், வரிப்பத்திரமும் கடந்த 25.07.2014 வெள்ளிக்கிழமை நயினை நாகபூசணி அம்மன் ஆலயச் சூழலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்

தொடர்பு: 077 696 0063
(50421)(45.6.3)

**தோட்டக்காணி விற்பனைக்கு**

கோப்பாய் இராசவீதிக்கு அருகில் 07 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 901 2910
(50421)(45.6.3)

### ஓய்வூதியர்களுக்கான கடன் திட்டம் பற்றிய கலந்துரையாடல்

பான் ஏஷியா வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த ஒரு வருட காலத்திற்கும் மேலாக வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வரும் ஓய்வூதியர்களுக்கான கடன் திட்டம் பற்றிய கலந்துரையாடல் எதிர்வரும் 29.07.2014 காலை 9.30 மணியளவில் யாழ் இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இக் கடனின் சிறப்பம்சங்களாவன
- ரூபா 500,000/- வரையான கடன் தொகை
- மிக இலகுவான செயற்படுத்தல்
- பிணைகள், பொறுப்புக்கள் தேவையற்றது
- 70 வயது வரையான கடன் மீளச் செலுத்தும் வசதி

நிபந்தனைகள்
- ரூபா 10,000/- இற்கு அதிகமான ஓய்வூதியம் பெறுபவர்கள் விண்ணப்பிக்கலாம்
- கடன் பாதுகாப்புத் திட்டம் ஒழுங்கு செய்யப்படும்
(ஒழுங்குகள் அனைத்தும் வங்கியினால் செய்யப்படும்.)

எமது வங்கியில் ஏற்கனவே கடனைப் பெற்றவர்களும் மேலதிகக் கடன் தொகையைப் பெறும் வாய்ப்புகள் உண்டு.

இவை பற்றிய மேலதிக விபரங்களை கலந்துரையாடலில் பங்கு பற்றி அறிந்து கொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| கலந்துரையாடல் நடைபெறும் இடம் | யாழ் இந்துக் கல்லூரி |
| காலம் | 29.07.2014 காலை 9.30 மணி |
| மேலதிக விபரங்களுக்கு | பான் ஏஷியா வங்கி, 570, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 4 925 118, 021 4 925 119, 021 4 976 777 |

(சி.15534)


பான் ஏஷியா வங்கி



யாழ். வண் வடமேற்கு நொச்சியம்பதி
ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான

# புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவும் சிறப்பு மலர் வெளியீடும்

இன்று (28.07.2014) திங்கட்கிழமை
பி.ப. 3.00 மணி



## அருளாசிச் செய்தி



உலகெலாம் நிறைந்து விளங்கு கின்ற எல்லாம் வல்ல ஆதி பராசக்தியாக நின்று அருளாட்சி புரிகின்ற அம்பிகை யாழ். வண்வடமேற்கு நொச்சியம் பதியிலே ஸ்ரீபத்திரகாளித் தாயாக எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள். அந்த அருள்மிகு அம்பாளுக்கு ஒரு சித்திரத்தேர் நிர்மாணித்த தேர்த் திருப்பணி சபையினருக்கும் தேர் வடிவமைத்த ஸ்தபதி ந.சற்குருநாதன் அவர்களுக்கும் அவர்தம் குழுவினருக்கும் எல்லாம்வல்ல தாயாரின் திருவடிகளையும் வாழ்த்தி வணங்குகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

நல்லை ஆதீன முதல்வர் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

## அனைத்து உயிர்களுக்கும் அம்பாளின் அருள் கிட்டட்டும்



உலகில் உள்ள உயிர் அனைத்துக்கும் ஆதாரமாக விளங்குபவள் அன்னை பராசக்தி. அருட்பெரும் சக்தியாக பல்வேறு கோலம் கொண்டு அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்பாள் எழுந்தருளி புதிய ரதத்திலே வேண்டுவோர் வேண்டுவதை வழங்குவாள்.

'சர்வேஜனா சுகினோ பவந்து'

ஆலய பிரதம குருவும் மஹோற்சவ குருவும் க.தியாகராஜகுருக்கள், தாவடி.

## அம்பாளின் நல்லருள் பாலிக்கட்டும்



ஈழமணித் திருநாட்டில் ஈடிலா சிகரமே என தமிழும், சைவமும் தழைத் தோங்கும் பதிதனில் வீற்றிருந்து அடியவர்கட்கு எல்லோர்க்கும் நல்லருள் பாலித்துக் கொண்டிருக்கும் நொச்சியம்பதி ஸ்ரீ பத்தரகாளி அம்மன் திருவருள் துணையோடு ஒரு சித்திரதேர் உருவாக்கப்பட்டுள்ளது. தேர்த் திருப்பணி சபையினரின் விடாமுயற்சியால் ஈழத்திலே சிற்பக் கலையின் தாயகமாக விளங்கும் திருநெல்வேலியை சேர்ந்த விஸ்வப் பிரம்மஸ்ரீ ந.சற்குருநாதன் குழுவினரின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்டு இன்று வெள்ளோட்டம் நடைபெறுகின்றது இக்காட்சியை காணும் அடியார்களுக்கும் ஸ்தபதி சற்குருநாதன் குழுவினருக்கும் அம்பாளின் ஆசியும் வாழ்த்தும் கிடைப்பதாக.

இரா.செல்லப்பா பரிபாலன சபைத் தலைவர்

## வெள்ளோட்டம் மகிழ்ச்சி தருகின்றது



ஈழத்திருநாட்டின் வளமிகு யாழ்ப்பாணத்தில் எழில் வண்ணார் பண்ணை நொச்சியம்பதியினில் விஸ்வகுல தெய்வமாக விளங்குகின்ற ஸ்ரீ பத்திர காளி அம்பாளின் புதிய சித்திரத் தேர் வெள் ளோட்டம் நடைபெறுவது அனைவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சி தருகின்றது.

இந்த சித்திர தேரினை அழகாக சிற்பக்கலை நிறைந்ததாக வடிவமைத்த ஸ்தபதி ந.சற்குரு நாதன் புகழ் ஓங்க அம்பாளின் ஆலய பரிபாலன சபையினருடன் தேர்த் திருப்பணி சபையும் இணைந்து வாழ்த்துகின்றோம்.

இ.ஆனந்தராசா தலைவர், தேர்த்திருப்பணிச் சபை.

## ஸ்தாபதியின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் வண் வடமேற்கு நொச்சியம்பதியில் எழுந்தருளி யிருந்து அருள்பாலிக்கின்ற விஸ்வேஸ்வரி பத்திரகாளிக்கு புதிய சித்திர தேரினை உருவாக்குகின்ற திருவருள் வாய்க்கப்பெற்றதையிட்டு சந்தோஷம் கொள்வதோடு, இச்சித்திரத் தேரின் வெள் ளோட்டம் நடைபெறும் நன்னாளில் பரிபாலன சபையினருக்கும் இந்த அரும்பணி நிறைவேற பெரும் பணியாற்றிய தேர்த் திருப்பணி சபை யினருக்கும் அன்னையின் மீளா அடியவர்க்கும் பெருங்கருணைப் பெருமாட்டியின் திருவருள் சித்திக்க வேண்டிப் பணிந்து வாழ்த்துக் கூறுகின்றேன்.

ஸ்தபதி ந.சற்குருநாதன்
திர்ஷிகா கலைக்கூடம் - திருநெல்வேலி.


## தேர் வெள்ளோட்டம் சிறப்புற வாழ்த்துவோர் :

**சந்துரு இரும்பு தொழில்**
அலுமினியப் பொருத்துநர்
உரிமை : பொன்ராசா
தொ.பே : 077 530 2065
52/1, நாவலடி லேன்,
திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.

**Uthajan Lights & Sounds**
ஸ்தாபகர் வி.இராஜபாக்கியம்
உரிமையாளர் : இ.சச்சிதானந்தன்
தொ.பே : 021 321 3702, 077 956 3597
இல.85, பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**K.P.Jewellery Work Shop**
கே.பி.ஆபரணத் தொழிற்சாலை
தங்க வைர நகைகள் விற்பனையாளர்கள்
உரிமையாளர் : கோ.புவனேந்திரன்
தொ.பே : 021 222 7966
58, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம்.

**வேணுகா தொலைத்தொடர்பு நிலையம் அன் வேணுகா ரவல்ஸ்**
கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே : 2541 - 2845

**Micro Auto Works**
**மைக்றோ ஓட்டோ வேக்ஸ்**
தொ.பே : 021 222 9111, 077 610 2945
இல. 354, மனிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

**காந்தி தொழிலகம்**
உரிமையாளர் :
வி.ஹேமச்சந்திரன்
தொ.பே : 077 188 2152
இல. 896, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

உ
ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நமஹ
**கிருஷாந் இரும்பு உலோகத் தொழிற்சாலை**
உரிமையாளர் : இ.துரைசிங்கம்
இல.366/1, மனிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 077 181 0110

**மெக்கானிக் வேக்ஸ் சொப்**
சொக்கலிங்கம் குடும்பம்
(பிள்ளைகள்)
இல. 53, கோவில் வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

**திர்ஷிகா கலைக்கூடம்**
ந.சற்குருநாதன்
திருநெல்வேலி.

**பத்திரகாளி தச்சுத் தொழிற்சாலை**
உரிமையாளர் : இ.இராசதுரை
ஆடியபாதம் வீதி, கொக்குவில்.

**ஸ்ரீ லக்சுமி ஜுவெல்லறி**
இல. 162, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 9440
077 703 8772

**ஜனனி நகைப் பூங்கா**
**JANANI Jewellery**
உரிமையாளர்: எம்.சதீஸ்
இல. 239, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே : 077 725 1276

**Vel Sons Works**
**வேல் சன்ஸ் வேக்ஸ்**
மோட்டார் உதிரிப்பாகங்கள்,
வெள்ளை இரும்புப் பொருள்கள், பாஸ்கட்,
கரியல்கள் செய்து கொடுக்குமிடம்.
உரிமையாளர் : வி.சந்திரசேகரம்
இல. 56/15, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**AHTUS Enterprises (Pvt) Ltd.**
30, Kannathiddy Road,
(Front of Van.Sivan Temple)
Jaffna, Sri Lanka.
Tel : 077 742 7322

உ
ஓம் விராட் விஷ்வப் பிரம்மனே நமஹ
**ஈஸ்வரன் இரும்புத் தொழிலகம்**
**Eswaran Iron Work Shop**
பத்திரகாளி கோயில் வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தேர்த் திருப்பணிச் சபையினர்

"அனைவரும் வருக அம்மன் அருள் பெறுக"

(C/15255)(7.6.3)

# தாக்குதலை ஆரம்பித்தது உக்ரைன்

## கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள டொனெட்ஸ்க் நகர் நோக்கி

கீவ், ஜூலை 28
ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள டொனெட்ஸ்க் நகரை மீட்பதற்கான தாக்குதல் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது உக்ரைன் அரசு. "டொனெட்ஸ்க் நகரின் வடக்குத் திசையில் உள்ள ஹார்லிக்வா புறநகர்ப் பகுதியில் உக்ரைன் படைகள் தயார் நிலையில் உள்ளன. இராணுவம் அந்த நகருக்குள் நுழைவதற்கு வசதியாக வீதிகள் திறக்கப்பட்டுள்ளன" என்று தெரிவித்துள்ளார் அந்த நாட்டு தேசிய பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் ஆண்ட்ரிய் லிசென்கோ.

கடந்த 5 மாதங்களாகக் கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள டொனெட்ஸ்க் நகரில் 10 லட்சம் பேர் வசிக்கிறார்கள். இந்த நிலையிலேயே உக்ரைன் இராணுவம் அந்த நகரின் மீது தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது.



தாக்குதலுக்குத் தயராகும் உக்ரைன் இராணுவம்

### சிறப்புக் கூட்டம்

அதேவேளை, உக்ரைனில் பிரதமர் ஆர்செனி யாட்சென்யுக்கின் பதவி விலகலை ஏற்பதா? அல்லது நிராகரிப்பதா? என்பது குறித்து விவாதிப்பதற்காக எதிர்வரும் வியாழக்கிழமை சிறப்பு நாடாளுமன்றக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் அந்த நாட்டில் மலேசிய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது தொடர்பாக நடந்து வரும் விசாரணைகளின் முன்னேற்றம் குறித்தும் அந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

உக்ரைன் நாட்டில் ஆளும் கூட்டணி அரசில் இடம்பெற்றிருந்த இரு அரசியல் கட்சிகள் தங்களது ஆதரவை விலக்கிக் கொள்வதாக அறிவித்ததையடுத்து, பிரதமர் ஆர்செனி யாட்சென்யுக் தனது பதவியிலிருந்து விலகுவதாகக் கடந்த வியாழக்கிழமை அறிவித்திருந்தார். ஆயினும் அவரது பதவி விலகல் இதுவரை உக்ரைன் நாடாளுமன்றத்தால் ஏற்கப்படவில்லை. (ற)

## நைஜீரியாவில் எபோலா வைரஸ்

நைரோபி, ஜூலை 28
மேற்கு ஆபிரிக்க நாடுகளில் நூற்றுக்கணக்கானோரை காவு கொண்ட எபோலா வைரஸ் காய்ச்சல், தற்போது நைஜீரியாவிலும் பரவி வருகிறது. நைஜீரியாவைச் சேர்ந்த நபர் ஒருவர் எபோலா வைரஸ் தாக்கத்தால் நைஜீரியாவின் லாகோஸ் நகரில் உயிரிழந்துள்ளார் என்று அந்தநாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனை அடுத்து அனைத்து விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களிலும் மருத்துவர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். முழுமையான சோதனைக்குப் பிறகே பயணிகள் நாட்டுக்குள் அனுமதிக்கப்படுகின்றனர்.

கினியா, நைஜீரியா உள்ளிட்ட நாடுகளில் எபோலா வைரஸின் தாக்கத்தினால் 660 பேர் உயிரிழந்துள்ளனர். எபோலா வைரஸ் காய்ச்சலுக்கு இதுவரை தடுப்பு மருந்து கண்டறியப்படவில்லை. (ற)

## தென்சூடானில் உணவுக்கு பஞ்சம்

நியூயோர்க், ஜூலை 28
தெற்கு சூடானில் கடுமையான உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது ஐக்கிய நாடுகள் சபை. சுமார் 39 லட்சம் மக்கள் பசியால் வாடி வருகின்றது தெரிவித்துள்ள ஐ.நா. அதிகாரிகள், ஊட்டச்சத்து இல்லாத குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் நாட்டின் எதிர்காலமே கேள்விக் குறியாகியுள்ளது என்றும் கூறியுள்ளனர்.

சர்வதேச நாடுகள் தெற்கு சூடானுக்கு அறிவித்த நிதி ஒதுக்கீட்டை துரிதமாக வழங்க வேண்டும் எனவும் அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

2011ஆம் ஆண்டு சூடானில் இருந்து பிரிந்து தனிநாடாக உருவானது தெற்கு சூடான். கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் அந்த நாட்டின் துணை அதிபர் ரேக் மாச்சர் பதவி நீக்கம் செய்யப்பட்டதை அடுத்து நாடு முழுவதும் வன்முறைகள் நடந்து வருகின்றன. அவற்றால் இதுவரை 10 ஆயிரம் பேருக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். (ற)

# வடக்கு கலிபோர்னியாவில் கடும் காட்டுத் தீ



நியூயோர்க், ஜூலை 28
அமெரிக்காவின் வடக்கு கலிபோர்னியாவில் ஏற்பட்ட காட்டுத் தீ வேகமாக பரவி வருவதை அடுத்து அங்கிருந்த 750 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன. மேலும் 200 குடும்பங்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்துவதற்கென எல் டொராடோ பகுதியில் பிரத்தியேக மையம் அமைக்கப்பட்டுள்ளது. காட்டுத் தீயில் இதுவரை 5 வீடுகள் மற்றும் 600 ஏக்கர் பரப்பளவிலான வனப்பகுதி முற்றிலும் எரிந்து சாம்பராகியுள்ளது.

ஹெலிகொப்டர் மூலம் நீரை ஊற்றி தீயை அணைக்க முயற்சித்ததன் விளைவாக, அந்தப் பகுதி முழுவதும் கரும்புகை சூழ்ந்து காணப்படுகிறது. அதனால் சுற்றுச்சூழல் மாசுபடும் சூழ்நிலை உருவாகியுள்ளது. தற்போது 20 சதவீத தீ மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும், வறண்ட காற்று வீசுவதால் தீ மேலும் பரவ வாய்ப்புள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. தீயில் எரிந்த நிலையில் அங்கு கண்டெடுக்கப்பட்ட ஒரு வாகனமே, இந்த தீ விபத்துக்கு காரணம் என்று நம்பப்படுகின்றது. (ற)

## தலிபான்களின் தாக்குதலில் 15 பேர் சாவு

காபூல், ஜூலை 28
ஆப்கனில் தலிபான்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 3 பெண்கள் ஒரு குழந்தை உட்பட 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஃபெரஸ்கோ நகரில் சென்று கொண்டிருந்த பஸ்களை நிறுத்திய ஆயுதம் ஏந்திய குழுவினர் பயணிகள் மீது துப்பாக்கிப் பிரயோகத்தில் நடத்தியுள்ளது. அதில் 15 பொது மக்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்கு தலிபான் அமைப்பினர் பொறுப்பேற்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்துக்கு அந்த நாட்டு அரசு கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இந்த மாதம் 15ஆம் திகதியும் பாக்டி காவில் நடந்த ஒரு தற்கொலைப்படைத் தாக்குதலில் 42 பேர் கொல்லப்பட்டிருந்தனர். (ற)

## இராணுவத்தை சேர்ந்த 85 பேர் சிரியாவில் சாவு

டமஸ்க்ஸ், ஜூலை 28
சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் நடத்திய தாக்குதலில், அந்த நாட்டு இராணுவத்தினர் 85 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதுகுறித்து, அந்நாட்டில் உள்ள மனித உரிமைகள் அமைப்பின் இயக்குநர் ராமி அப்தெல் ரஹ்மான் தெரிவிக்கையில்;

"சிரியாவில் உள்ள ராக்கா மாகாணத்தில் இராணுவத்தினர்மீது கடந்த வெள்ளிக்கிழமை இரவு தாக்குதல் நடத்தி, அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றினர். அவர்களின் தாக்குதலுக்கு அஞ்சி பாதுகாப்புப் படையினர் நூற்றுக்கணக்கானோர் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்தனர். இந்தத் தாக்குதலில் 85 இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர். 200 இராணுவத்தினரின் கதி என்னவென்று தெரியவில்லை"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்களில் 1,000க்கும் அதிகமானவர்கள் சாவு

நியூயோர்க், ஜூலை 28
இஸ்ரேல் - ஹமாஸ் இயக்கத்தினரிடையே 19 நாள்களுக்குப் பின்னர் 12 மணி நேர போர் நிறுத்தம் ஏற்படுத்தப்பட்ட போதும், தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரமாக அதிகரித்துள்ளது. அவர்களில் பெரும்பாலானோர் பொதுமக்கள் ஆவர்.

போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அமெரிக்கா மற்றும் ஐ.நா. சபை விடுத்த வேண்டுகோளை இஸ்ரேலும், ஹமாஸ் இயக்கமும் ஏற்றுக் கொண்டபோதும், தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் உடல்கள் வடக்கு, மத்திய மற்றும் தெற்கு காஸா, காஸா நகரம் ஆகியவற்றில் இருந்து தற்போதும் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. அதனால், உயிரிழந்த பாலஸ்தீனியர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை கடந்துள்ளது.



இஸ்ரேலின் தாக்குதலில் பற்றியெரியும் காஸா

இந்த எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று பலஸ்தீனிய அரசின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தாக்குதலில் இராணுவத்தினர் உட்பட இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த 38 பேர் உயிரிழந்துள்ளனர்.

இஸ்ரேல்-ஹமாஸ் இயக்கத்தினரிடையே நிரந்தர போர் நிறுத்தத்தை ஏற்படுத்தும் முயற்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பிரான்ஸின் ஏற்பாட்டில் பரிஸ் நகரில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி, இத்தாலி, ஐரோப்பிய யூனியன், துருக்கி, கத்தார் நாடுகளின் அதிகாரிகள் கூடி அதுதொடர்பாக ஆலோசித்துள்ளனர். (ற)

# அல்ஜீரிய விமானத்தினுடைய 2ஆவது கறுப்பு பெட்டியும் மீட்பு

ஜெனிவா, ஜூலை 28
விபத்துக்குள்ளான அல்ஜீரிய விமானத்தின் இரண்டாவது கறுப்புப் பெட்டியும் மீட்கப்பட்டுள்ளது. ஐ.நா. அமைதி காப்புக் குழுவின் வல்லுநர்கள் கறுப்புப் பெட்டியை கண்டறிந்துள்ளனர் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும், ஆனால் அதுதொடர்பான மேலும் விவரங்களை கொடுக்க முடியவில்லை என்றும், டுவிட்டர் பதிவு ஒன்றில் ஐ.நா. கூறியுள்ளது. அதன் மூலம் விமானம் விபத்துக்கு உள்ளானதற்கான காரணங்களை கண்டறிய முடியும் என்றும் அந்தப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, விமானம் விபத்துக்குளான இடத்தை பிரெஞ்சுப் படையினர் ஆய்வு செய்தனர். அதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவா ஹொலாந்தே, அல்ஜீரியா விமானத்தின் முதல் கறுப்புப் பெட்டி மீட்கப்பட்டு மாலிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்திருந்தார்.



விமானம் விபத்துக்குள்ளான பகுதி

புர்கினா பாசோ தலைநகரில் இருந்து புறப்பட்ட அல்ஜீரிய விமானம், 50 நிமிடங்களில் ராடரின் கண்காணிப்பில் இருந்து காணாமற் போனது. பின்னர் மாலி நாட்டின் வடக்குப் பகுதியில் விமானம் விபத்துக்குள்ளானது தெரியவந்தது. இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த 118 பேரும் உயிரிழந்தனர். மோசமான வானிலையே விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது. (ற)



உத்தர பிரதேச மாநிலத்தின் ஷராபூர் நகரில் இரு தரப்பினருக்கு இடையே நேற்றுமுன்தினம் ஏற்பட்ட மோதல் பெரும் கலவரமாக மாறியது. கலவரத்தில் கடைகள், வாகனங்கள் என்பன தீ வைத்து எரிக்கப்பட்டன. அதையடுத்து பெருமளவு பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டதுடன், தடியடி நடத்தியும், கற்களை வீசியும் கலவரத்தில் ஈடுபட்டவர்களை அவர்கள் விரட்டியடித்தனர். இந்த வன்முறைகளில் 3 பேர் உயிரிழந்ததுடன், பலர் காயமடைந்துள்ளனர். இது தொடர்பாக 20பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் கூறுகின்றனர். (ற)

# மீனவரின் படகுகளைக் கூட விடுவிக்க முடியாத மோடி

## குற்றஞ்சாட்டுகின்றது காங்கிரஸ்

மதுரை, ஜூலை 28

இலங்கைக் கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் படகுகளைக் கூட விடுவிக்க மத்திய அரசால் முடியவில்லை என்று விமர்சித்துள்ளார் தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் ஞானதேசிகன்.

மதுரையில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் அங்கு மேலும் கூறியுள்ளதாவது:-

"நரேந்திர மோடி ஆட்சிக்கு வந்தால் மீனவர்கள் பிரச்சினையில் மாற்றம் நடக்கும் என கூறினார்கள். ஆனால், தமிழக மீனவர்களின் படகுகள்ளைக் கூட விடுவிக்க மத்திய அரசால் முடியவில்லை.

நீதிபதி நியமன விவகாரத்தில் காங்கிரஸ் அரசைக் குற்றம் சாட்டுவது நியாயமற்றது. நீதிபதிகளை நியமிப்பதில் நியமனக் குழுவின் முடிவே இறுதியானது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# ஆஸிக்கு படகில் சென்றவர்களில் இந்தியரை ஏற்றுக்கொள்வோம்

## இந்திய அரசு தெரிவிப்பு

புதுடில்லி, ஜூலை 28

அகதித்தஞ்சம் கோரி படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள தமிழர்கள் 157 பேரில் இந்தியக் குடிஉரிமை உள்ளவர்களையும், இந்திய உள்நாட்டுச் சட்டப்படி யாரைத் திரும்ப அழைத்துக்கொள்ள முடியுமோ அவர்களையெல்லாம் திரும்ப அழைத்துக் கொள்வோம் என இந்தியா அறிவித்துள்ளது.

இந்த 157 பேர் தொடர்பாக இந்திய அரசு முதல் முறையாக தனது நிலைப்பாட்டை நேற்றுமுன்தினம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. இந்த 157 பேரும் இந்திய அகதி முகாம்களில் இருந்து சென்ற இலங்கை தமிழ் அகதிகள் என்று பரவலாகக் கருதப்படுகிறது.

இதுகுறித்து இந்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்தியாவுக்கு உள்ளோ அல்லது இந்தியாவுக்கு வெளியிலோ சட்டவிரோத குடியேற்றத்தை ஊக்குவிப்பதில்லை என்பதை இந்திய அரசு தனது கொள்கையாகக் கொண்டிருக்கின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில் இந்த 157 பேர் தொடர்பாக இந்தியா தனது நிலைப்பட்டை தெளிவுபடுத்த வேண்டுமானால் அதற்கு முதல்படியாக, ஆஸ்திரேலியாவில் இருக்கும் இந்தியத் தூதரக அதிகாரிகள் இவர்கள் அனைவரையும் நேரில் சந்தித்துப் பேசுவதற்கான ஏற்பாடுகளை ஆஸ்திரேலிய அரசு செய்ய வேண்டும்என்பதைஇந்தியதரப்பில் இருந்து ஆஸ்திரேலிய தரப்புக்கு மிகத் தெளிவாக எடுத்துச்சொல்லப்பட்டது என்றும் அந்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியக் குடிமக்கள் மற்றும் இந்திய உள்நாட்டுச் சட்டப்படி யார் யாரையெல்லாம் இந்தியாவுக்குள் ஏற்கவேண்டும் என்று கடப்பாடு இருக்கிறதோ அவர்களையெல்லாம் இந்தியா திரும்ப ஏற்றுக்கொள்ளும் என்பதே இந்தியாவின் கொள்கை. இந்தியாவின் இந்த தற்போதைய கொள்கையின் அடிப்படையில், இந்த 157 பேரில் யார் யாரெல்லாம் இந்தியக் குடியுரிமை பெற்றவர்கள் மற்றும் இந்திய உள்நாட்டுச் சட்டப்படி திரும்ப அழைத்துக் கொள்ளப்படவேண்டியவர்கள் என்று ஆஸ்திரேலியாவில் இருக்கும் இந்தியத் தூதரக அதிகாரிகள் உறுதியாக அடையாளம் காண்கிறார்களோ அவர்கள் அனைவரையும் இந்தியா திரும்ப அழைத்துக்கொள்ளும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# மக்கள் ஆலோசனை பெற இணையத்தளம் ஆரம்பம்

## மோடியின் புதிய முயற்சி

புதுடில்லி, ஜூலை 28

பாரதிய ஜனதா தலைமையிலான இந்திய அரசு பதவியேற்று 60 நாள்களை நிறைவு செய்யும் நிலையில், முக்கிய பிரச்சினைகளில் மத்திய அரசுக்கு பொதுமக்கள் தங்களது கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை தெரிவிக்க ஏதுவாக 'எனது அரசு' என்ற பெயரில் புதிய இணையத்தளம் ஒன்றை பிரதமர் நரேந்திர மோடி ஆரம்பித்துள்ளார்.

குறித்த தளத்தை நேற்றுத் தொடங்கி வைத்துப் பேசிய பிரதமர் மோடி, "எனது அரசு பொறுப்பேற்று இந்த 60 நாள்கள் அனுபவத்தில் நாட்டின் வளர்ச்சிக்கு ஏராளமான பொதுமக்கள் தங்களது நேரத்தையும், ஆற்றலையும் செலவழித்துப் பங்காற்ற விரும்புவதை உணர்ந்து கொள்ள முடிந்துள்ளது.

அதனாலேயே இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது"- என்று தெரிவித்துள்ளார். (ற)




பலஸ்தீன மக்கள் மீது இஸ்ரேல் நடத்தும் இனப்படுகொலைப் போரைக் கண்டித்து சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது. இந்தப் போராட்டம் மே 17 இயக்கத்தின் ஏற்பாட்டில் நடந்துள்ளது. (ற)

# விஜயகாந்தை நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவு

## ஜெயலலிதா அவதூறு வழக்கில்

சென்னை, ஜூலை 28



விஜயகாந்த்

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் மற்றும் அவரது மனைவி மீதான அவதூறு வழக்கில், அவர்களை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டுள்ளது விழுப்புரம் நீதிமன்று.

விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்ப்பேட்டையில் தே.மு.தி.க. ஊழல் எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. அதில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், அவரது மனைவி பிரேமலதா, சட்டமன்ற உறுப்பினர்களான பார்த்தசாரதி, வெங்கடேசன் ஆகியோர் பேசியது முதலமைச்சர் ஜெயலலிதாவின் நற்பெயருக்கும், புகழுக்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையில் இருந்தது. எனவே 4 பேர் மீதும் அவதூறு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தே குறித்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த மனுவை மாவட்ட முதன்மை நீதிபதி கிருஷ்ணமூர்த்தி விசாரித்த போது, விஜயகாந்த், பிரேமலதா உள்ளிட்ட 4 பேரும் அடுத்த மாதம் 27ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்று உத்தரவிட்டார். (ற)

# சென்னையில் தீ விபத்து

சென்னை, ஜூலை 28

சென்னையில் உள்ள அரச அலுவலகங்கள் இயங்கும் சேப்பாக்கம் எழிலகத்தில் நேற்றுமுன்தினம் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

சென்னையில் உள்ள மிகப் பழமையான கட்டடங்களில் ஒன்றான சேப்பாக்கம் காமராஜர் வீதியில் உள்ள எழிலகத்தில் பல்வேறு அரசு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. எழிலகத்தின் முதலாவது மாடியிலே விபத்து ஏற்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்குத் தீயணைப்புப் படையினர் 4 தீயணைப்பு வண்டிகளில் விரைந்து வந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இந்த விபத்தால் ஏற்பட்ட சேதவிவரங்கள் வெளியிடப்படவில்லை. (ற)

# வேண்டாம் பிரதமர் பதவி

## டி.எம்.ஜயரத்ன கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 28
வேண்டாம் பிரதமர் பதவி. அப்படி ஒரு பதவி அவசியமற்றது. நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள அந்தப் பதவியை ரத்துச் செய்ய வேண்டும்.
இவ்வாறு கூறுகிறார் தற்போது பிரதமர் பதவியில் இருக்கும் டி.எம்.ஜயரத்ன.


டி.எம்.ஜயரத்ன

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு மேற்கண்டவாறு தெரிவித்துள்ள பிரதமர் ஜயரத்ன மேலும் கூறியிருப்பதாவது:-
இந்த நாட்டுக்கு பிரதமர் பதவியொன்று அவசியமற்றது என்பது எனது தனிப்பட்ட நிலைப்பாடாகும். நாட்டை சுயாதீனமானதும் அபிவிருத்தியானதுமான நாடாக உருவாக்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அவசியமானது.
நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையைரத்துச்செய்வதாக கடந்த கால ஜனா திபதி தேர்தல்களின் போது பேசப்பட்டபோதிலும்அது வெறும்பேச்சாகவே நீடித்து வருகின்றது.
நாட்டை பாதுகாக்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அவசியமாகின்றது.
எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து எதிர்க்கட்சிகள் பரப்புரை ஆரம்பித்துள்ளன. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ரத்து செய்ய வேண்டுமென்ற பிழையான பரப்புரையையும் அந்தக் கட்சிகள் முடுக்கி விட்டுள்ளன.
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் போட்டியிட முடியாத காரணத்தினால் இவ்வாறு போலிப் பரப்புரைகள் முன்னெடுக்கப்படுகின்றன-என்றார்.
நாட்டில் ஒரேயொரு பொது வேட்பாளரே இருக்கின்றார். அவர் வேறு யாருமின்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். (ஓ)





அநுராதபுர மாவட்டத்தில் உள்ள குளங்களில் தூர்வாறும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அநுராதபுரம் மகனதராவை குளத்தில் தூர்வாறும் நடவடிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் ஆரம்பித்துவைத்தார்.
இந்த நிகழ்வில் அமைச்சர்களான எஸ்.எம். சந்திரசேன, துமிந்த திஸாநாயக்க, வடமத்திய மாகாண ஆளுநர் கருணாரத்ன திவுல்கனே, முதலமைச்சர் எஸ்.எம். ரஞ்சித் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஓ)

# குளவி தாக்குதல்: 25 பேர் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 28
நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 50 ஏக்கர் மற்றும் நோர்வூட் மேற்பிரிவு தோட்டங்களில் உள்ள குளவி கூடுகள் கலைந்து கொட்டியமையால் 25 பேர் பாதிக்கப்பட்டு டிக்கோயா-கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
50 ஏக்கர் தோட்டத்தில் குளவி கூடு கலைந்து கொட்டியமையால் நான்கு சிறுவர்களும் இரண்டு பெண்களும் உட்பட 15 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஓ)

# சுதந்திர கட்சிக்கான மக்கள் ஆதரவு திடீரென வீழ்ச்சி

## தொகுதிவாரியாக அறிக்கை கோருகிறார் மஹிந்த

கொழும்பு, ஜூலை 28
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கான மக்களின் ஆதரவு திடீரென வீழ்ச்சி கண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. தொகுதிவாரியாக நடைபெற்று வரும் கூட்டங்களுக்கு ம்க்களின் பிரசன்னம் குறைந்துள்ளது என்றும் அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.
இதேவேளை சுதந்திரக் கட்சியை மறுசீரமைக்கும் நடவ டிக்கைகள் நடைபெற்று வருகின்றன என்றும் தொகுதி வாரியாக இந்தப் பணிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.
தொகுதி அமைப்பாளர்களுக்கு இடையே ஏற்பட்டுள்ள போட்டி மற்றும் கருத்து வேறுபாடுகள் காரணமாகவே மக்களின் கட்சி மீதான ஆர்வம், ஈடுபாடு குறைந்து வருவதாக கட்சி ஆதரவாளர்களால் கருத்து முன் வைக்கப்பட்டுள்ளது.
இது இவ்வாறிருக்க தற்போதைய கட்சியின் நிலவரம் குறித்து ஜனாபதி மஹிந்த ராஜபக்ஷ கவனம் செலுத்தி வருவதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.
தொகுதி வாரி கூட்டங்கள் தொடர்பில் தனியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி பணித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.
குருநாகல் மற்றும் கண்டி போன்ற தொகுதியில் நடைபெற்ற கூட்டங்களுக்கு வேறு தொகுதிகளில் இருந்து மக்கள் பஸ்கள்மூலம் அழைத்துச்செல்லப்பட்டனர் எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்தியுள்ளனர். (ஓ)

# கிருமிநாசினி இறக்குமதிக்கான அனுமதிப்பத்திர கட்டணம் உயர்வு

கொழும்பு, ஜூலை 28
கிருமிநாசினி இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கான கட்டணம் 8.000 ரூபாவிலிருந்து 100.000 ரூபாவாக அதிகரிக்க விவசாய அமைச்சு நடவடிக்கை மேற்கொண் டுள்ளது.
அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொடுத்த பின்னர் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பிலும் ஆராயப்படவுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.
கிருமிநாசினி இறக்குமதி செய்யும் போது 1.000 ரூபா செலுத்தி கிருமிநாசினி பதிவு காரியாலயத்தில் விசேட அனுமதிப்பத்திரம் ஒன்றை பெற்றுக்கொள்ள வேண்டும்.
இந்தச் செயல்முறை அடுத்தஆண்டுதொடக்கம் நடை முறைக்கு வரவுள்ளது.
இதுதவிர கிருமி நாசினிப் பாவனை தொடர்பில் மாவட்ட - வலய மட்டத்தில் தகவல் முறையொன்று அமைக்கப்படவுள்ளது என்றும் அதுவும் அடுத்தஆண்டுதொடக்கம் நடை முறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.
மக்கள் ஆரோக்கியம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு என்பனவற்றைக் கருத்தில் கொண்டு அமைச்சு மேற்கூறப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளது.
இயற்கை முறை மூலம் நிலத்துக்கும் மனிதனுக்கும் எந்த வித பாதிப்பும் ஏற்படுவதில்லை.
2020 ஆம் ஆண்டளவில் கிருமிநாசினி பாவனையை கட்டுப்படுத்தும் நோக்கில் குறித்த விடயங்களை அமைச்சு நடைமுறைப்படுத்தியுள்ளது. (ஓ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

ம.அன்ரன் அருளேஸ்வரன்



மண்ணகத்தில் 06.04.1954
விண்ணகத்தில் 28.06.2014

எங்கள் பார்வையில் இருந்துதான் மறைந்துவிட்டாய்
இறைவன் முன்னிலையில் என்றும் வாழ்கிறாய்
என ஆறுதல் அடைகிறோம்.

புனித அடைக்கலநாயகி ஆலயம்,
4 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(50425)(4.3.6)
குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 28.06.2014 சிவபதமெய்திய
எமது குடும்பத்தலைவர்
அமரர் மயில்வாகனம் இராசரெத்தினம்

தோற்றம் 30.06.1930
மறைவு 28.06.2014

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (28.07.2014) திங்கட்கிழமைமுற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(6952)(45.6)

42, பிரப்பங்குளம்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி நேசபாக்கியம் சிவகுரு



ஏழாலை கிழக்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும், ஏழாலை தெற்கு சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேசபாக்கியம் சிவகுரு நேற்று (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சிவகுருவின் அன்பு மனைவியும், சற்குணம், தர்மகுலராஜா, காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் புஸ்பமலர் (சீதா -ஏழாலை), சாந்ததேவி (பெல்ஜியம்), வசந்தமலர் (கனடா), உதயமலர் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற ஜீவானந்தம் மற்றும் ரட்ணசபாபதி (கனடா), சந்திரமௌலிசர்(பெல்ஜியம்), அப்பன் (கனடா), முத்துராணி, நித்தியகலா அன்புமலர் (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ரமேஸ் (பெல்ஜியம்), மடோனா, மங்களீனா, கபிலன், ஜெனா, ஜெனிபன் (கனடா), வினோதினி, சுமதி, செல்வக்குமார், சுகந்தினி, காண்டீபன், அருள்ராஜ், ஜெயந்தா, செல்வராணி, லக்சன், லக்ஷ், சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், டிவானியா, லக்ஷ், சசி, அஸ்வினா, கயுமிளா, ஐஸ்வரியா, தமிழ்க்குமரன், தனுஸ்கா, மதுசாளன், மாதுஷா, அபிசாலினி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.07.2014) திங்கட்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் ஏழாலை புனித இசிதோர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியுடன் ஏழாலை சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை தெற்கு, சுன்னாகம். (50426)(6.4)
தகவல்: குடும்பத்தினர்.



# ஆரோக்கியமான வாழ்வுக்கு அறிவுரை கூறுகிறார் ஒபாமாவின் மனைவி

ஆரோக்கியமான வாழ்வுக்கு அதிக தண்ணீர் குடிக்க வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் மனைவி மிச்செல் அறிவுரை வழங்கியுள்ளார்.

அமெரிக்காவின் தலைநகர் வொஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையில் கடந்த 22 ஆம் திகதி அன்று டிரிங்க் அப் என்ற விழிப்புணர்வு பரப்புரை நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றுள்ளது.

இதில் பங்கேற்ற ஒபாமாவின் மனைவி மிச்செல் கூறியதாவது:- அதிக அளவில் தண்ணீர் குடிப்பது உடல் ஆரோக்கியத்துக்கு மிகவும் நல்லது. எனவே தவறாமல் தண்ணீர் குடியுங்கள்.

ஏனெனில் தண்ணீரை முதலில் நன்கு குடிக்க தொடங்கி விட்டால், பின்பு பழங்கள், காய்கறிகள், பயிறு வகைகள், பால் பொருள்கள் உட்பட ஆரோக்கியமான ஏனைய பொருள்களையும் உட்கொள்ள ஆர்வம் ஏற்படும் என்று கூறியுள்ளார். குழந்தைகளும் பெரியவர்களும் அடிக்கடி தண்ணீர் குடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக டிரிங்க் அப் என்ற விழிப்புணர்வு பரப்புரையை மிச்செல் மேற்கொண்டுள்ளார்.

இதேபோல் குழந்தைகளின் உடல் பருமனைக் கட்டுப்படுத்துவது, ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தைக் கடைப்பிடிப்பது, உடலை கச்சிதமாக வைத்துக்கொள்வது உள்ளிட்ட அனைத்து முக்கிய விடயங்களையும் குறித்து அமெரிக்க குழந்தைகள் மத்தியில் அவர் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்.



# ஜப்பானில் இடம்பெறவுள்ள ஒலிம்பிக்கை அசத்த தயாராகும் ரோபோக்கள்

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டில் ஜப்பான் நாட்டில் ஒலிம்பிக் விளையாட்டுக்கள் இடம்பெறவுள்ளன.

இந்தநிலையில் அங்கு இடம்பெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகள் பல வருடங்கள் கடந்த பின்னரும் எவராலும் மறக்க முடியாத அளவுக்கு இருக்க வேண்டும் என ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே எண்ணியுள்ளார்.

இதற்காக அதிகளவில் ரேர்போக்களைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனை ஸெற்றமா மற்றும் ரோக்கி யேரவில் அமைந்துள்ள ரோபோ வடிவமைப்பு தொழிற்சாலைகளுக்கு பயணம் செய்யும்போது அவர் குறிப் பிட்டுள்ளார்.

இதற்காக 2.4மில்லியன் நிதி செலவிடப்படவுள்ளது. இது ரோபோ உற்பத்திக்காக தற்போது ஒதுக்கப்படும் நிதியை விடவும் மூன்று மடங்கு அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

# உணவின் கலோரியை கணக்கிடும் கருவி



ஒவ்வொரு மனிதனாலும் அன்றாடம் உள்ளெடுக்கப்படும் ஒவ்வொரு பிளேட் உணவிலும் எத்தனை கலோரி உள்ளது என்பதைக் கண்டுபிடிக்கக் கூடிய சாதனம் ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது.

இதனை அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள பொதுமின் உலக ஆய்வு நிறுவனத்திலுள்ள விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

இந்தச் சாதனம் உணவிலுள்ள கொழுப்பு, நீர் போன்றவற்றையும் பிளேட்டின் அல்லது டிஸ்சின் பாரத்தையும் அளவிடுகின்றது. பின்னர் இந்த அளவுகளை சூத்திரம் ஒன்றில் பிரதியிட்டு கலோரியை கணிப்பிடுகின்றது.





# பெண்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள்

பூங்கொடி

"பெண் இன்றிப் பெருமையும் இல்லை கண் இன்றிக் காட்சியும் இல்லை" என்பது நம் முன்னோர்களின் முதுமொழியாகும். மனித உடலில் கண்கள் எவ்வளவு முக்கியமானதோ அதே அளவு சமூகத்தில் பெண்களும் முக்கியமானவர்களேயாவர்.

பெண்கள் ஒரு காலத்தில் பேச்சுரிமை, கல்வி கற்கும் உரிமை, சுயவிருப்பிலான விவாக உரிமை, வழிபாட்டு உரிமை என்பன அற்றவர்களாகவே இருந்தார்கள் ஆண் ஆதிக்கத்தின் கீழும் சமூகத்தின் கீழும் அடிமைப்படுத்தப்பட்டிருந்த பெண்கள் தமக்குள் தன்னம்பிக்கையை ஏற்படுத்திக் கொண்டு நாம் ஆண்களுக்கு எந்த வகையிலும் சளைத்தவர்கள் இல்லை என்பதனை நிரூபிக்கும் வகையில் மண்முதல் விண்வரை சமூகத்தின் எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் பெண்கள் இல்லாததுறை இல்லை என்ற அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளமையை நாம் இன்று காணக்கூடியதாக இருக்கின்றது. இல்லறத் தலைவியாக மட்டுமே இருந்த அன்றைய பெண்கள் இன்று நாட்டின் தலைவியாகவும் ஆண்களுடன் போட்டி போட்டிக் கொண்டு தங்கள் ஆளுமையை வெளிப்படுத்தி நிற்கின்றனர்.

கடந்த காலங்களில் பெண்களுக்கு எதிராக நடந்த அநியாயங்களையும் அக்கிரமங்களையும் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் பெண்களின் நிலை எவ்வளவு மோசமாக இருந்திருக்கின்றது என்பதை நம்மால் அறியமுடியும்.

பெண்களின் கண்ணியம் பறிக்கப்படுவது என்பது எல்லாமட்டத்திலும் காணப்படுகின்றது. அவர்கள் செல்லும் இடங்கள் எல்லாம் அவர்களைப் பின் தொடர்கின்ற ஆண் சமூகம் தங்களுடைய ஆணவத்தைப் பயன்படுத்தி அரக்கத்தனத்தில் ஈடுபடுகின்றனர்.

பெண்கள் இன்று கல்வி கற்கிறார்கள், வேலைக்குச் செல்கிறார்கள், வாகனங்கள் செலுத்துகிறார்கள் என அவர்கள் அனைத்துத் துறைகளிலும் இருக்கிறார்கள். எனவேதான் பெண்கள் சுதந்திரமடைந்து விட்டார்கள் என்று குறுகிய வட்டத்தில் சிந்திக்கும் ஆணாதிக்கவாதிகள் பெண்கள் உடல், உள, சமூக ரீதியாக எதிர்கொள்ளும் பிரச்சினைகளைக் கருத்தில் கொள்வதில்லை.

இன்னும் பல பெண்கள் பொருளாதாரம் மறுக்கப்பட்டு ஆணைச் சார்ந்து இருக்கும் சூழல் காணப்படுகின்றது. கல்வி கற்காத பெண்கள் தங்கள் கணவனே எல்லாம் என நினைத்து அவர்களுக்கு அடிமையாக வாழ்கின்றனர். படித்த பெண்கள் திருமணம் செய்த பின்னர் அவர்களின் கணவன்மாரால் வேலைக்குச் செல்வதில் இருந்து தடுக்கப்படுகிறார்கள். பிள்ளையைப் பார்க்க வேண்டும் வீட்டைக் கவனிக்க வேண்டும் எனக்கூறும் ஆண்கள் இவை தமது கடமையும் என்பதை ஏன் உணர மறுக்கிறார்கள்? இதுதான் ஆணாதிக்கத்தின் வெளிப்பாடு.

பெண்கள் பாலியல் துஸ்பிரயோகங்களுக்கு உள்ளாகும்போது அதை நியாயப்படுத்த ஆணாதிக்கவாதிகள் பிற்போக்கான பல காரணங்களை முன்வைக்கின்றார்கள். பெண்கள் தனியாக அல்லது இரவில் ஏன் அந்த இடத்துக்குச் சென்றார்கள் என வினாவெழுப்பும் போது உடை நடையையும் குறை கூறுகின்றனர். அவ்வாறெனின் பெண்களுக்கு சுதந்திரம் கொடுத்துவிட்டோம் எனப் பேசும் ஆணாதிக்க சமுதாயமே ஏன் பெண்களுக்குத் தனியே செல்லும் சுதந்திரம் இல்லையா? இரவு என்பது ஆண்களுக்கு மட்டும்தானா? எப்பொழுதும் அவள் ஆணைச் சார்ந்துதானா? வாழவேண்டும். சிறுவர்கள் என்ன பாவம் செய்தனர் அவர்களையும் விட்டுவைக்கிறீர்களா?

சமூகத்தில் பெண்களுக்கு மட்டும் குடும்பம், கலாசாரம், சீதனம், சடங்கு சம்பிரதாயங்கள் எனப் பலவும் தீர்மானிக்கப்படுகிறன்றன.

எமது நாட்டில் இடம்பெற்ற போரின்போது அதிகளவில் பாதிக்கப்பட்டவர்கள் பெண்களே. தமது கணவர் பிள்ளைகள் உறவுகள் சொத்துக்கள் எனப் பலவற்றை இழந்து இந்த ஆணாதிக்க சமூகத்தில் வாழமுடியாத நிலையில் சமூக, பொருளாதார ரீதியாகப் பல சவால்களைச் சந்திக்கிறார்கள். கணவனை இழந்த பெண்களுக்கு விதவை என்னும் பட்டத்தை எமது சமூகம் சூட்டி அவர்களை எந்த நற்காரியங்களிலும் முன்வைப்பதில்லை. அவர்கள் வேறு ஆண்களிடம் கதைத்தாலும் வேறு பட்டம் சூட்டுகின்றார்கள். அவளின் மறுமணத்தை ஆணாதிக்க சமுதாயம் பெரிதும் விரும்புவதில்லை.

இன்று வடபகுதிகளில் தவறான நடத்தைகளில் பெண்கள் ஈடுபடுவதாக சில ஊடகங்கள் தெரியப்படுத்துகின்ற போதும் இந்த நிலைக்கு அவர்களைக் கொண்டு செல்லும் ஆண்களை அவை சுட்டிக்காட்டத் தவறுகின்றன. இப்படியான ஆண்கள் எல்லோருக்கும் தெரியும் வகையில் சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

கணவன் இல்லை என்பதால் இவர்கள் வேலைக்குச் செல்ல வேண்டிய நிலையில் உள்ள பெண்கள் . அங்கே பொருளாதார ரீதியாகவும், பாலியல் ரீதியாகவும் ஒடுக்குமுறைக்குள் தள்ளப்படுகிறார்கள். அவர்களுக்கு உழைப்புக்கு ஏற்ப ஊதியம் கிடைப்பதில்லை. இதனால் வீட்டில் ஊதியம் இல்லாத வேலையாளாகவும் பல இடங்களில் ஆணை விடக் குறைந்த அளவு ஊதியம் பெறுபவளாகவும் விளங்குகிறாள். வேலைத்தலங்கள், பொது இடங்கள், வீடுகள், பஸ் என்பனவற்றில் பெண்கள் பல்வேறுபட்ட தொந்தரவுகளுக்கு ஆளாகிறார்கள். ஒரு பெண் தன் திறமையால் வேலை செய்யும் இடத்தில் பதவி உயர்வு அடைந்தாலும் ஆணாதிக்க சமுதாயம் அதனையும் வேறு மாதிரியே கருத்தில் கொள்கிறது.

இன்று ஆண்கள் சிலர் பெண்விடுதலை, சீதனம் தொடர்பாக மேடைகளில் முழங்குகிறார்கள். இவர்களே அதிக சீதனம் வாங்குகிறார்கள். அவர்களின் எழுத்துக்கள் கதைகள் எல்லாம் புகழ்ச்சிக்காகவும் தொழிலுக்காகவும் மட்டுமே உள்ளதேதவிர உண்மையான பெண்விடுதலையை நோக்கி அவர்கள் பயணிப்பதில்லை.

## பெண்கள் சமூகத்திடம் எதிர்பார்ப்பவை

எத்தனை போராட்டங்கள் புரட்சிகளின் பின்பும் இன்றுவரை பெண் ஆனவள் சமூகத்திடம் பலதரப்பட்ட விடயங்களை எதிர்பார்த்து நிற்கிறாள். பெண்ணியம் என்றால் என்ன என ஒரு ஆண்மகனைக் கேட்டால் அடக்கமில்லாது திமிர்பிடித்த ஒரு பெண்ணே பெண்ணியவாதி என்று பதில் தருகிறான். அடக்கம், பண்பு பெண்களுக்குத்தானா? முக்கியமாக கற்புநிலைக் போட்பாடு பெண்களுக்கு மட்டும்தானா?

சுதந்திரமான பயணம், காத்திரமான கல்வி, கருத்துச் சுதந்திரம், சுதந்திரமான ஆடைத் தெரிவு, பக்கபலமான வாழ்க்கைத்துணை, மரியாதையாகப் பார்க்கும் சமூகப்பார்வை இவைற்றைத்தான் பெரும்பாலானா பெண்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

பெண்கள் மீதான வன்முறையைத் தடுங்கள். பாலியல் தேவைகளைப் பூர்த்திசெய்யும் பொம்மைகளாகச் சிந்திக்கும் செயலை நிறுத்தி விடுங்கள். பெண்களுக்கும் உணர்வுகள் உரிமைகள் உண்டு என்பதை மறந்து விடாதீர்கள். பெண்கள் மீது அசிட் வீசுதல், பெண்களைக் கடத்திச் சென்று பலாத்காரம் புரிதல், கொலை செய்தல், வீதிகளில், பஸ்களில் தொந்தரவு செய்தல் போன்ற நடவடிக்கைகள் நாகரிகமானதா? மனித சமுதாயத்தின் ஆரோக்கியமான நடவடிக்கைகள் தானா? எது நடந்தாலும் எமக்கு என்ன என்ற சுயநலத்தைப் போக்குங்கள்.

சமுதாயம் நிலைபெற ஆண் பெண் உறவு இன்றியமையாதது ஆண்களின் துணை பெண்களுக்கும் பெண்களின் துணை ஆண்களுக்கும் அவசியமானது. திருமணத்துக்கும் பின் ஆண் கூறுவதைத்தான் பெண் செய்யவேண்டும் என்றால் அங்கே உண்மையான உறவு நிலைக்கு அர்த்தமில்லை. இருவரது கருத்தும் ஒருமித்து இருக்க வேண்டும்.

உணர்வுகளாலும் உரிமைகளாலும் பெண்கள் மதிக்கப்பட வேண்டும். அடிமைகளாகவும் இரண்டாம் நிலைக்குரியவர்களாகவும் பார்க்கும் தன்மைகள் மாற்றப்பட வேண்டும். சமுதாயத்தில் சமத்துவமாக மதிக்கப்பட வேண்டும்.

எந்த ஒரு நாடு பெண்ணுக்கு மரியாதை கொடுக்கவில்லையோ எந்த ஒரு சமுதாயம் பெண்களை மேன்மைப்படுத்தவில்லையோ அந்த நாடும் அந்த சமுதாயமும் எந்தக் காலத்திலும் உயர்வடையப் போவதில்லை என்று விவேகானந்தரின் கருத்தைக் கருத்தில்கொண்டு அறிவு, கல்வி இவற்றைப் பெண்களுக்குக் கிடைக்கச் செய்யவதே இந்தச் சமுதாயத்தின் கடமையாகும்.



# வீட்டில் தனியாக இருக்கும் பெண்களுக்கு

தமிழ்நிலா

வெளிக்கதவில் கண்டிப்பாக லென்ஸ் பொருத்துங்கள். மரக்கதவுக்கு முன்னால் ஒரு இரும்புக் கதவும் அமையுங்கள். முன் பின் அறிமுகமில்லாதவர் தண்ணீர் கேட்டால், தண்ண்ீர் எடுப்பதற்காகக் கதவைத் திறந்து வைத்து விட்டு வீட்டின் உள்ளே செல்லவே கூடாது. ஏதேனும் அவசரத்தில் மறந்துபோய் கதவைத் திறந்து வைத்துவிட்டு பக்கத்தில் எங்காவது சென்று வந்தால், வீட்டில் ஏதாவது மாற்றம் இருக்கிறதா, யாராவது இருக்கிறார்களா என்று பார்த்த பிறகே கதவை மூட வேண்டும்.

மின்சாரப் பொருள்களைத் திருத்தம் செய்பவர்கள், கேபிள் டி.வி இயக்குபவர்கள் என்ற பெயரில் யாராவது, உங்கள் கணவர் அல்லது மகன் அனுப்பினார் என்று சொல்லிக் கொண்டு வந்தால், கதவைத் திறக்காமலேயே பிறகு வாருங்கள் என்று சொல்லி அனுப்பி விடுங்கள். வீட்டுக்குத் தொலைபேசி அழைப்பு வந்தால் சத்தமாகப் பேசக்கூடாது. வெள்ளியிடங்களுக்குச் செல்லும்போது, புதிய நபர்களிடம் உங்களைப் பற்றிய விவரங்களைச் சொல்லவே கூடாது.

எப்போதும் வீட்டு வேலைக்காரர்கள் மற்றும் சாரதியின் புகைப்படம், மற்றும் அவர்களின் உறவினர்களின் முகவரிகளை கைவசம் வைத்திருப்பது நல்லது.

வெளியூர் செல்லும் போது, அருகில் உள்ள காவல் நிலையத்துக்குத் தகவல் தந்துவிட்டு செல்வதே பாதுகாப்பானது. இத்தனையையும் தாண்டி ஒருவேளை திருடர்கள் உள்ளே நுழைந்துவிட்டால், அவர்களைப் பார்த்து கூச்சல் போடக்கூடாது.

ஏனென்றால் அவர்கள் நம்மைத் தாக்கலாம். அதனால் மயக்கமாகி விட்டது போலக் கீழே விழுந்துவிட்டு, பின் அவர்கள் கவனம் மாறும் போது வெளியே தப்பி வந்து சத்தம்போடலாம். அவர்களின் பலம் தெரியாமல் அவர்களைத் தாக்க முயற்சிப்பது மிகப்பெரிய தவறு.

# கிளிநொச்சியில் மோசமான வறட்சி விவசாய செயற்பாடுகள் பாதிப்பு

## செயலகக் கூட்டத்தில் அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூலை 28
வறட்சியான காலநிலை கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாய செயற்பாடுகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.
இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன்.
கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் தலைமை உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வறட்சி விவசாய நடவடிக்கைகளைப் பாதித்துள்ளதுடன் குடிதண்ணீர் நெருக்கடியையும் இரணைமடுக்குளத்தின் கீழ் 800 ஏக்கர் நெற்செய்கையையும் 143. ஏக்கர் வயல் நிலங்களில் உப உணவு பயிர்ச் செய்கையும் வெற்றிளித்துள்ளது.

> வன்னேரிக்குளம் 3 அடி 4 அங்குலம், கல்மடுக்குளம் 2 அடி 1 ½ அங்குலம், கரியாலை நாகபடுவான் குளம் நீர் முற்றாக வற்றிய நிலையில் காணப்படுகின்றது.

இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பயிர்ச் செய்கை மாவட்டத்தின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய நிலையில் இல்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.
இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள குளங்களில் நீர் மட்டம் பின்வருமாறு காணப்படுகின்றது.
இரணைமடுக்குளம் 11 அடி 3 அங்குலம், அக்கராயன்குளம் 2 அடி 7 அங்குலம் , புதுமுறிப்புக்குளம் 4 அடி, கனகாம்பிகைக்குளம் 1 அடி, பிரமந்தனாறு குளம் 8 அங்குலம், வன்னேரிக்குளம் 3 அடி 4 அங்குலம், கல்மடுக்குளம் 2 அடி 1 ½அங்குலம், கரியாலை நாகபடுவான் குளம் நீர் முற்றாக வற்றிய நிலையில் காணப்படுகின்றது. (க-18)

## கலைக்கப்பட்டது பண்டாரவன்னி அபிவிருத்திச் சங்கம்

### நிதி மோசடியே காரணமெனத் தெரிவிப்பு

ஒட்டுசுட்டான், ஜூலை 28
நிதி மோசடி காரணமாக ஒட்டுசுட்டான் பண்டாரவன்னி கிராம அபிவிருத்திச் சங்கம் கலைக்கப்பட்டுள்ளதாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் ஆர்.குருபரன் தெரிவித்தார்.
கலைக்கப்பட்ட இந்த அபிவிருத்தி சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு எதிர்வரும் 7 ஆம் திகதி பண்டாரவன்னிக் கிராம பொது மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.
பண்டாரவன்னி கிராம அபிவிருத்திச் சங்கத்தில் மலசல கூடங்கள் அமைத்த வகையில் 22 லட்சத்து 5 ஆயிரம் ரூபாவும், மணல் ஏற்றுவதற்கான அனுமதியை வழங்கியதில் 5 லட்சத்து 9 ஆயிரம் ரூபாவும் என மொத்தமாக 27 லட்சத்து 14 ஆயிரம் ரூபா மோசடி நிகழ்ந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.
முல்லைத்தீவு அரச அதிபருக்குத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையிலான குழு நடத்திய விசாரணையில் இந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.
மேற்படி மோசடி தொடர்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவித்ததையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகின்றது. (க-18)


## இரவில் ஒளிர்வதற்கு மறுக்கும் மன்னார் தெரு விளக்குகள்

மன்னார், ஜூலை 28
மன்னார் பிரதான பாலத்தில் அமைக்கப்பட்டுள்ள அதியுயர் சக்தி கொண்ட தெரு விளக்குகள் இரவு நேரங்களில் ஒளிராமையால் அங்கு நாளாந்தம் விபத்துக்கள் ஏற்பட்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.
மன்னார் பிரதான பாலத்தில் சுமார் 7 தெரு விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.
அவற்றில் இரண்டு விளக்குகள் மாத்திரமே தற்போது ஒளிர்கின்றன. சில நேரங்களில் அவையும் ஒளிர்வதில்லை.


ஒளிராத நிலையில் காணப்படும் தெரு விளக்குகள்

இதனால் இரவு நேரங்களில் விபத்துக்கள் ஏற்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். சில நேரங்களில் கழுதைகள் வீதியைக்கடக்க முற்படுகின்ற போது இந்த விபத்துக்கள் ஏற்படுகின்றன.
மன்னார் நகர சபையின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள குறித்த மின் விளக்குகளுக்கான மாதாந்தம் மின் பட்டியலுக்கான கொடுப்பனவை மன்னார் நகரசபை மின்சார சபைக்கு வழங்கி வருகின்றது.
ஆனால் குறித்த தெரு விளக்குகள் செயலிழந்து காணப்படுகின்றமை தொடர்பாக உரியவர்கள் கண்டும் காணாதவாறு நடந்து கொள்வதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
எனவே குறித்த பாலத்தில் உள்ள அனைத்து தெரு விளக்குகளையும் ஒளிரச் செய்து மக்களை இரவு நேர விபத்துக்களில் இருந்து பாதுகாக்குமாறு மன்னார் மக்களும், சமூக ஆர்வலர்களும் உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-56)

## விதை நெல்லை வழங்குக



கிளிநொச்சி, ஜூலை 28
கிளிநொச்சி-அக்கராயன் குளத்தின் கீழ் விவசாயத்தை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு எதிர்வரும் காலபோகத்துக்குரிய விதை நெல்லை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஸ்கந்தபுரம் நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் தலைவர் சி.கனகசபாபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.
கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் இவரால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
கடும் வறட்சி காரணமாக அக்கராயன் குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கை இடம்பெறவில்லை. இதன் காரணமாக விதை நெல்லைப் பெற முடியாத நிலை உருவாகியுள்ளது. (க-18)

## பயன்படுத்தப்படாத வயல் நிலங்கள்


கோப்புப்படம்

துணுக்காய், ஜூலை 28
துணுக்காயிலுள்ள தென்னியங்குளம் கிராமத்தில் கடந்த 45 ஆண்டுகளாக வயல் நிலங்கள் துப்புரவு செய்யப்பட்டு பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்படாத நிலை காணப்படுகின்றன.
இவ்வாறு சுமார் 287 ஏக்கர் காணிகள் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றன.
இதேவேளை -தென்னியங்குளம் சந்தியிலிருந்து அம்பலப் பெருமாள்குளம் வரையான வீதி புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. (க-18)


ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலயத்தில் இலங்கை வங்கியின் ஒட்டுசுட்டான் கிளையினர் அதன் முகாமையாளர் தலைமையில் டெங்கு ஒழிப்பு தொடர்பான சிரமதானப் பணிகளில் ஈடுபட்ட போது பொது மக்களும் அதற்கு ஒத்துழைப்பு நல்கினார்கள். (க-500)

## நடமாடும் மருத்துவ சேவையை நடத்துமாறு மக்கள் கோரிக்கை

ஒட்டுசுட்டான், ஜூலை 28
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒதியமலைக் கிராமத்தில் நடமாடும் மருத்துவ சேவையை நடத்துமாறு மீளக் குடியமர்ந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இந்தக் கிராமத்தில் சுமார் 50 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.
இந்தக் குடும்பங்கள் தமது மருத்துவ தேவைகளுக்கு மிக நீண்ட தூரத்திலுள்ள நெடுங்கேணி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களிலுள்ள மருத்துவ மனைகளுக்கே செல்ல வேண்டியுள்ளது.
இந்த நிலையில் ஒதியமலைக் கிராமத்தில் நடமாடும் மருத்துவ சேவையையாவது வழங்குமாறு மீளக்குடியமர்ந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தின் காடு சூழ்ந்த எல்லைக் கிராமமாக ஒதியமலை விளங்குகின்றது. (க-18)

## புதுக்குடியிருப்பு பிரதேச சபையால் கிராமங்களுக்கான குடிதண்ணீர் விநியோகம்

முல்லைத்தீவு, ஜூலை 28
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் 28 ஆயிரம் லீற்றர் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருவதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர் எஸ்.மிதிலைநாதன் தெரிவித்துள்ளார்.
தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக இங்குள்ள பல்வேறு பகுதிகளிலும் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.
இது தொடர்பாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் செயலாளர் மிதிலைநாதனிடம் கேட்டபோது:
புதுக்குடியிருப்பு பிரதேசத்திலுள்ள ஆனந்தபுரம் மற்றும் புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை, விசுவமடு பொதுச்சந்தை என்பவற்றுக்கு 15 ஆயிரம் லீற்றர் குடி தண்ணீர் இரண்டு நாள்களுக்கு ஒரு தடவை வழங்கப் பட்டு வந்தது.
தற்போது மந்துவில், மல்லிகைத்தீவு ஆகிய பகுதிகளுக்கும் ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலை புதுக்குடியிருப்பு றோ.க. வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கும் 28 ஆயிரம் லீற்றர் குடி தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. இதற்கான நிதியை இடர் முகாமைத்துவ பிரிவு வழங்கி வருகின்றது.
இதனை விட ஒட்டுசுட்டான் உப அலுவலகம் ஊடாக வித்தியாபுரம், சின்னச்சாளம்பன், பெரிய சாளம்பன் ஆகிய கிராமங்களுக்கும் 8 ஆயிரம் லீற்றர் குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க -55)



## கால்நடைகளின் நலன் கருதி குளங்களை புனரமைக்குக

### வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

கரணவாய், ஜூலை 28

கால்நடை வளர்ப்போரின் நலன் கருதி வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் குளங்களைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச சபை உறுப்பினர் க.பரஞ்சோதி கோரிக்கை விடுத்துள்ளார்.

பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் குளங்கள் பல வற்றிய நிலையில் உள்ளதால் கால்நடைகள் நீரின்றி அலைந்து திரிகின்றன. இதனால் கால்நடை வளர்ப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இது தொடர்பாக புதன்கிழமை இடம்பெற்ற பிரதேச சபைக் கூட்டத்தில் எடுத்து விளக்கிய உறுப்பினர் அது தொடர்பான மனுவையும் தவிசாளரிடம் வழங்கினார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது பிரதேசத்தில் பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றன. அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே தமது ஜீவனோபாயத்தை மேற்கொண்டு வருகின்றன.

குறித்த பகுதியிலுள்ள குளங்கள் கால்நடைகள் நீர் பருகுவதற்கும், நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கும் அமைக்கப்பட்டதுடன் அவற்றை பிரதேச சபைகளே பராமரித்து வந்தன.

ஆனால் தற்போதைய கடும் வறட்சி காரணமாக நீர்வற்றிய நிலையில் பருகுவதற்கு நீரின்றி கால்நடைகள் இறந்த வண்ணமிருக்கின்றன. இந்த நிலையில் யாழ்.மாவட்ட கமநல சேவைத் திணைக்களம் உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கின்றதே தவிர குளங்களிலுள்ள சேறுகளை அகற்றி புனரமைக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

சேறுகள் நிறைந்த குளங்களில் நீர் பருகச் சென்ற பல மாடுகள் அதில் புதைந்து இறந்து கிடப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

எனவே, கால்நடைகள் நீரின்றி இறப்பதனைத் தவிர்ப்பதற்கு குளங்களிலுள்ள சேறுகளை அகற்றி கமநல சேவைகள் நிலையத்தின் ஊடாக புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-108)



யாழ். தமிழ்ச் சங்கமும் யாழ். மறை மாவட்ட சமூகமும் இணைந்து யாழ். மடத்தடிச் சந்தியில் அமைத்து வரும் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் சிலை அமைவிடத்தில் ஸ்தாபிப்பதற்கான சிலை பாரம்தூக்கி மூலம் இருப்பிடத்தில் வைக்கப்படுகிறது. குறித்த சிலை எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-135)

## வீட்டுத் தோட்ட கடன் உதவி கை நழுவும் நிலை

மீசாலை, ஜூலை 28

கூட்டத்துக்குப் போதிய அங்கத்தவர்கள் வருகை தராததால் 30 அங்கத்தவர்களுக்கு கிடைக்கவிருந்த வீட்டுத்தோட்ட உதவிக் கடன் கைவிட்டுப் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் விவசாயத் திணைக்களத்தினால் மீசாலை பழமுதிர் சோலையில் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு அதில் 30 பயனாளிகளுக்கு வீட்டுத் தோட்ட உவிக் கடன் மற்றும் குரங்கு பிடிப்பது தொடர்பாக ஆராயப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்துக்கு போதிய அங்கத்தவர்கள் வருகை தராததால் கூட்டம் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டது. இதனால் வீட்டுத் தோட்ட கடன்பெற வருகை தந்திருந்த சிலர் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல நேரிட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

## தேங்காய்களை அள்ளும் தென்பகுதி வியாபாரிகள்

### சந்தைகளில் வாடிக்கையாளர் ஏமாற்றம்

தென்மராட்சி, ஜூலை 28

தென்மராட்சி பிரதேச தேங்காய் தென்பகுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இதனால் உள்ளூர் மக்கள் தேங்காய்களை சந்தையில் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கிழக்கு, மத்திய, சப்ரகமுவ, ஊவா மற்றும் மேல் மாகாணங்களைச் சேர்ந்த பெருமளவு வியாபாரிகள் வாகனங்களில் வந்து சாவகச்சேரி சந்தையில் பெருமளவில் தேங்காய் கொள்வனவு செய்து கொண்டு செல்கின்றனர். திருகோணமலை, மட்டக்களப்பு, கண்டி, கொழும்பு, பண்டாரவளை, பதுளை போன்ற பகுதிகளில் தேங்காய்க்குத் தட்டுப்பாடு நிலவுவதால் அங்கிருந்து வாகனங்களில் வரும் வியாபாரிகள் சந்தைக்கு வரும் தேங்காய் உற்பத்தியாளர்களிடம் தேங்காய்களைக் கொள்வனவு செய்து எடுத்துச் செல்கின்றனர்.



கோப்புப்படம்

இதனால் வழமையான தங்களின் வாடிக்கையாளர்களுக்கு தேங்காய் விற்பனை செய்ய முடியாத நிலை சந்தை வியாபாரிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் சந்தை வியாபாரிகள் புறநகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் வைக்கப்பட்டிருந்த தேங்காய்களை வாங்கிவந்து வாடிக்கையாளர்களுக்கு வழங்கியதையும் காண முடிந்தது.

சந்தைக்குள் தேங்காய் இல்லாததால் பொதுமக்கள் உள்ளூர் கடைகளில் தேங்காய் வாங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

## பராமரிப்பற்ற கிணறுகளில் மீன்குஞ்சு விடும் பணி

தென்மராட்சி, ஜூலை 28

சாவகச்சேரி மட்டுவில் தெற்குப் பகுதியில் டெங்கு நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டதையடுத்து அங்குள்ள பராமரிப்பற்ற காணிகளில் காணப்படும் கிணறுகளுக்கு மீன் குஞ்சுகள் விடும் பணிகள் சுகாதாரத் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை 25 இற்கும் மேற்பட்ட பராமரிப்பற்ற கிணறுகளில் மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் மீன் குஞ்சுகள் வளர்க்கக் கூடிய தொட்டி வசதிகள் இல்லாததால் மீன் குஞ்சுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் குளங்களில் காணப்படும் மீன் குஞ்சுகளை பிடித்து மோட்டர் மூலம் தண்ணீர் பெறும் குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர். (வ-9)

## தென்மராட்சி பாடசாலைகளில் விழிப்புணர்வு கருத்தரங்குகள்

### சிறுவர் பிரச்சினைகளைத் தவிர்ப்பது தொடர்பில்

தென்மராட்சி, ஜூலை 28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 'சிறுவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தவிர்ப்பது' தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் சாவகச்சேரி நீதிவானின் அறிவுரையின்படி நடத்தப்பட்டு வருகின்றன.

பிரதேச சிறுவர் பாதுகாப்புக் குழு, சிறுவர் நன்னடத்தைப் பிரிவு, பிரதேசசெயலக சிறுவர் மற்றும் பெண்கள் விவகார அபிவிருத்திப் பிரிவு, சிறுவர் மேம்பாட்டுப் பிரிவு, சிறு பராய அபிவிருத்தி பிரிவு, சிறுவர் தொடர்புடைய பிரிவுகள் ஆகியோரை ஒருங்கிணைத்து அமைக்கப்பட்ட 10 பேர்கொண்ட குழுவினரே பாடசாலைகளில் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

கூட்டங்களில் அந்தந்தப் பிரிவு பொது சுகாதார பரிசோதகர்களும் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கி வருகின்றனர். (ஒ-9)

## நூல் வெளியீடு

அச்சுவேலி, ஜூலை 28

இடைக்காட்டை சேர்ந்த டாக்டர் நா.கந்தசாமி எழுதிய "நீரிழிவும் ஆரோக்கிய வாழ்வும்" நூல்வெளியீடு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடைக்காடு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ஏ.அருந்தவநேசன் தலைமையில் நடைபெறும் நூல் வெளியீட்டில் யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.ரவீந்திரநாதன் வெளியீட்டு உரையையும், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் நூல் மதிப்பீட்டு உரையையும் ஆற்றவுள்ளனர்.

140 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல் மற்றும் சமூக மேம்பாட்டை கருத்தில் கொண்டு இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளது. (வ-11)



மூடப்படாத கால்வாய்

## திறந்த நிலையில் கழிவு நீர் கால்வாய்

கொழும்புத்துறை, ஜூலை 28

யாழ்.ஆஸ்பத்திரி வீதியும் கோவில் வீதியும் சந்திக்கும் பகுதியில் வீதியோரமாக அமைக்கப்பட்டுள்ள கழிவு நீர் கால்வாய் திறந்த நிலையில் ஆபத்து விளைவிக்கக் கூடியதாகக் காணப்படுகிறது.

சந்திப் பகுதியில் உள்ள குறித்த கால்வாய், மேல் மூடிகள் இன்றி வீதியின் மிக அருகாகக் காணப்படுவதால் வாகனங்கள் ஒன்றையொன்று விலத்தும்போது கால்வாய்க்குள் விழும் சந்தர்ப்பங்கள் காணப்படுகிறது.

குறித்த கால்வாய்க்கு மூடிகளை அமைத்து பொது மக்களின் போக்குவரத்து பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (வ-135)

## வேலணையில் இறால் பொதி செய்யும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 28

வாழ்வின் எழுச்சித்திட்டத்தின் ஊடாக வேலணை பிரதேசத்தில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட 30 குடும்பங்கள் இறால் பொதி செய்யும் சிறிய கைத்தொழிலின் ஊடாக முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

வட மாகாணத்தில் கடற்றொழில்களை மேற்கொள்ளும் மீனவ குடும்பங்கள், மற்றும் சுயதொழிலை மேற்கொள்ளும் உற்பத்தியாளர்களை இனங்கண்டு வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் ஊடாக பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் வேலணை தெற்கு துறையூர் உலர் மீன் பதனிடும் நிலையத்தின் ஊடாக பெண்களைத் தலைமைத்துவமாகக்கொண்ட 30 குடும்பங்களுக்கும் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.



இறால் பொதியிடலில் ஈடுபடும் பெண்கள்

இந்தப் பயனாளிகள் மீனவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளும் இறால்களை அவித்து உலர வைத்த பின்னர் தரம் பிரித்து பொதி செய்யும் கைத்தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

பொதி செய்யப்பட்ட இறாலை யாழ்.மாவட்டத்தில் உள்ள சிறிய மற்றும் நடுத்தர கடைகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

இதனூடாக ஒவ்வொரு பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பங்களும் 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரையான வருமானத்தைப் பெற்று வருகின்றன. (வ-14)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஊடகத்துறையினருக்கு மேலுமொரு அச்சுறுத்தல்

ஊடக நிறுவனங்கள், ஊடகத்துறையினர் மற்றும் ஊடகவியலாளர்கள் அனைவருமே ஒரு வித அச்சத்தில் வாழுகின்ற கலாசாரம் ஒன்று முளை பெற்று வேரூன்றி இப்போது கிளைகள் விரித்து நிற்கின்றது. இது இப்படியே போனால் சிறிது காலத்தில் இன்னும் பெரிதாக விரிவடைந்துவிடக்கூடிய அபாயம் தெரிகின்றது.

ஊடகப் பயிற்சிக்கென்று வடக்கிலிருந்து சில ஊடகவியலாளர்கள் கொழும்பு செல்லும் வழியில் ராணுவத்தால் தடுத்துச் சோதிக்கப்பட்டது ஒருபுறமிருக்க, அவர்கள் சென்ற வாகனத்தில் கஞ்சா பொட்டலம் இருந்ததாகக் கூறி ராணுவ பொலிஸாரும் ஓமந்தை பொலிஸாரும் கெடுபிடி செய்துள்ளார்கள். இந்தச் சம்பவத்தில் ஊடகவியலாளர்கள் கூறியிருக்கும் கருத்துக்களைப் பார்க்கையில் அதிகாரிகள் தாங்கள் நினைத்தால் எவரை வேண்டுமானாலும் கைது செய்து காவலில் வைத்துவிடக்கூடிய சூழ்நிலை இருப்பது வெளிப்படையாகின்றது.

குற்றம் புரிபவர்கள் பிடிக்கப்படுவதையோ, தடுத்து காவலில் வைப்பதையோ எவரும் குறை கூறப் போவதில்லை. கஞ்சா பொட்டலம் ஒன்று சாரதியின் ஆசனத்துக்கருகில் கிடந்து எடுக்கப்பட்டதையடுத்து வாகனம் தடுத்து நிறுத்தப்பட்டு சாரதியும் கைதானார் என்றால் வாகனத்தில் பயணம் செய்த ஊடகவியலாளர்கள் ஏன் தடுக்கப்பட வேண்டும். கஞ்சாப் பொட்டலம் கிடந்தமைக்கான அவர்கள் தரப்பிலான சாட்சியம் முற்றிலும் வேறாகவே இருந்துள்ளது. அவர்கள் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்ட போதும் தங்கள் தரப்பிலான முறைப்பாட்டை பதியும்படி வற்புறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதன் பேரின் அவர்களின் முறைப்பாடு பதியப்பட்டிருக்கிறது. அதன் பேரில் அவர்கள் கொழும்பு சென்றிருக்கிறார்கள். சாரதி மீது வழக்கு ஏதும் பதியப்பெறுமானால் இந்த முறைப்பாட்டைச் செய்தவர்களின் சாட்சியங்கள் அதிகாரிகளுக்கு மாறாகவே இருக்கும் என்று தோன்றுகின்றது. ஆனால் ஊடகவியலாளர்களுக்கு எந்தவிதக் கெடுபிடியும் நடைபெறவில்லை. அங்கு நடந்த சம்பவத்துக்கும் ராணுவத்துக்கும் எந்தவித தொடர்பும் இல்லையென்று ராணுவப் பேச்சாளர் முற்றாக மறுத்துள்ளார்.

இந்த நிலையில் ஊடக செயலமர்வில் கலந்து கொள்ள தமிழ் ஊடகவியலாளர்கள் சென்றிருந்த போதும் அது நடைபெறவிருந்த மண்டபத்தை முற்றுகையிட்டு சிலர் ஆர்ப்பாட்டம் நடத்தியதால் அது கைவிடப்பட்டுள்ளது.

பயிற்சி பெறுவதற்காக சென்றிருந்த ஊடகவியலாளர்கள் புலிகள் என்றும் வேறு வசை மொழிகளாலும் மனம் நோகச் செய்யப்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன. சமீபத்தில்தான் கம்பஹாவில் கிரிக்கெட் போட்டியொன்றில் கலந்து கொள்ளச் சென்ற யாழ்ப்பாண அணியினர் அவமானப்படுத்தப்பட்டு தாக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டிருந்தனர். இப்போது ஊடகப் பயிற்சிக்கென கொழும்பு சென்ற ஊடகவியலாளர்கள் தரக்குறைவாக நடத்தப்பட்டுள்ளார்கள் என்று தெரிகின்றது. அரசு சாரா நிறுவனங்கள் நடத்தும் இவ்வாறான பயிற்சிகளுக்கு அரசு தரப்பில் உள்நோக்கம் கற்பிக்கப்படுவது வழக்கமாகியுள்ளது. அவ்வாறான ஒரு பயிற்சிக்கு வழங்கப்பட்ட நிதியை அமெரிக்க தூதரகம் இந்தக் கருத்தின் காரணமாக திரும்பப் பெற்றுக் கொண்டது. இப்பொழுது பத்திரிகை பேரவை நடத்தவிருந்த ஊடகப் பயிற்சிக்குச் சென்ற ஊடகவியலாளர்கள் இடைஞ்சல்களுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதுடன் அரசு சார்ந்த ஒரு குழுவினரால் கொழும்பில் ஏளனத்துக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதுடன் பயிற்சியும் நிறுத்தப்பட்டுள்ளது.

நாட்டையும் ஜனநாயகத்தையும் நேசிப்பவர்களுக்கு இவை கவலையளிப்பதாகும். அத்துடன் இருள் சூழ்ந்த ஒரு திக்கை நோக்கி நாடு நகர்வதாகவும் அவர்களை எண்ணத் தூண்டும்.

# கொழும்பு வந்தார் சுவாமி புகழ் பாடினார் மஹிந்தவுக்கு

## இந்திய அரசை இனியும் நம்பலாமா?

சேரலாதன்





இலங்கையில் இனப் பிரச்சினை என்று ஒன்றுமே இல்லை என்று அடித்துக் கூறியிருக்கிறார் அண்மையில் இலங்கைக்கு வந்த இந்தியாவின் சர்ச்சைக்குரிய அரசியல்வாதியும் கோமாளி என பலரும் வர்ணிக்கும் சுப்பிரமணிய சுவாமி. ஒரு தமிழர் என்ற போர்வைக்குள் வலம் வரும் அவர் எப்போதுமே தமிழர் விரோத கருத்துக்களை உதிர்ப்பதையே தமது தொழிலாகக் கொண்டு செயற்பட்டு வருகிறார். தற்போது இந்தியாவின் மத்தியில் ஆட்சியில் இருக்கும் பாரதீய ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவர் என்ற இறுமாப்புடன் இங்கு வந்த அவர் அதிகாரத்தில் உள்ளவர்களின் மனங்கள் குளிரக் கூடிய வகையில் தமது திருவாயைத் திறந்து வார்த்தைகளை உதிர்த்திருக்கிறார். சுப்பிரமணிய சுவாமி இதற்கு முன்னரும் பல தடவைகள் இலங்கைக்கு வந்து ஆட்சியாளர்களைச் சந்தித்துவிட்டுச் சென்றிருக்கிறார். ஆனால் அவரது தற்போதைய வருகை பல வழிகளிலும் இங்குள்ள அதிகார பீடத்தினருக்கு உபயோகமாக இருக்குமென்பதில் ஐயமே இல்லை. ஏனென்றால் தற்போது சுப்பிரமணிய சுவாமி வெறும் சுவாமியாக இங்கு வரவில்லை. இந்திய அரசின் பிரதிநிதி என்ற செருக்குடன் அவர் வந்துள்ளார். இலங்கை வெளியுறவு அமைச்சின் ஆதரவுடன் கொழும்பில் பன்னாட்டு உறவுகள் தொடர்பான ஆய்வை மேற்கொண்டுவரும் பண்டாரநாயக்கா சர்வதேச கல்வி மையம் மோடியின் கீழான இந்தியா - உலகுக்கும் தெற்காசியாவுக்கும் தேவை என்ற தலைப்பிலான கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்திருந்தது. அதில் இந்தியாவின் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் பிரதிநிதியாக சுப்பிரமணிய சுவாமி பங்குபற்றியிருந்தார். அங்கு அவர் இலங்கை அரசுக்குச் சார்பான கருத்துக்களையே தெரிவித்திருந்தார்.

இலங்கையில் இனப் பிரச்சினை என ஒன்றும் இல்லவே இல்லை. மேலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகப் பல்வேறு நாடுகள் தீர்மானம் கொண்டு வந்தாலும் அந்த நாட்டுக்கு இந்தியா எப்போதுமே துணையாக இருக்கும் எனவும் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்தியா ஏற்கனவே இலங்கை மீதான சர்வதேச விசாரணைகளுக்கு ஆதரவு தெரிவிக்காது எனத் தெரிவித்துள்ள நிலையில் அதனை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் சுப்பிரமணிய சுவாமியின் கருத்துக்கள் அமைந்துள்ளன.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்; தமிழ்நாட்டில் ஆளும் அரசும் சில அரசியல்வாதிகளும் இலங்கைக்கு எதிராகக் குரல் கொடுத்து வருகின்றனர். இதன் காரணமாகவே கடந்த காலங்களில் இலங்கைக்கு எதிரான கொள்கையில் திடமான முடிவை முன்னைய மத்திய அரசுகளால் எடுக்க முடியவில்லை. ஆனால் தற்போது இந்தியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. அனைத்தையும் விட தேசிய நலன்களுக்கே முதலிடம் என்ற உறுதியான கொள்கை முடிவை பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு எடுத்துள்ளது. மேலும் இலங்கை அரசுக்கு எதிராகக் குரல்கொடுத்து அரசியல் பிழைப்பை நடத்திக் கொண்டிருந்த பலர் கடந்த மக்களவைத் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளனர். மோடியின் பதவியேற்பு நிகழ்வில் இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்பதற்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த பலர் ஆட்சேபம் தெரிவித்தனர். ஆனால் இவற்றையெல்லாம் நிராகரித்து இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை உலகுக்கு மோடி வெளிக்காட்டினார். இலங்கையுடன் இந்தியாவுக்கு அடிப்படையில் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது. நட்புறவைப் பேணவே இரண்டு நாடுகளும் ஆவலாக உள்ளன. இவ்வாறு தாமே இந்திய வெளிவிவகார அமைச்சர் என எண்ணிக் கொண்டு சுவாமி தமது வாயில் வந்ததையெல்லாம் கூறி இலங்கையின் ஆளும் வர்க்கத்தினரைக் குளிரச் செய்துள்ளார்.

> சுப்பிரமணிய சுவாமி இலங்கையில் கூறிய வார்த்தைகளை வெறுமனே அவரது தனிப்பட்ட கருத்தெனப் புறமொதுக்கி விட முடியாது. ஏனென்றால் அவர் இப்போது இந்தியாவை ஆளும் கட்சியின் ஓர் உறுப்பினர்.



மேலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரையும் சுப்பிரமணிய சுவாமி சந்திந்து மனம் விட்டு உரையாடியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நரேந்திரமோடி பதவியேற்றவுடன் இலங்கைத் தமிழர் தொடர்பான விடயங்களில் இந்திய மத்திய அரசு காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென்ற நம்பிக்கை இங்கு நிலவியது. ஆனால் பீரிஸ், சுஷ்மா சந்திப்பும், சுப்பிரமணிய சுவாமியின் கருத்துக்களும் அந்த நம்பிக்கைகள் பொய்யானவை என்பதை எடுத்துக் காட்டிவிட்டன. கச்சதீவு விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தில் இந்திய மத்திய அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையும், இலங்கை மீதான சர்வதேச விசாரணைகளுக்கு இந்தியா ஒருபோதுமே ஆதரவு தெரிவிக்காது என்ற இந்தியாவின் அறிவிப்பும், தற்போது சுப்பிரமணிய சுவாமியினால் வெளியிடப்பட்ட கருத்துக்களும் இந்திய அரசு மாறவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றன. இதற்கு மேலாக ராஜிவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கான விடுதலை தொடர்பாகவும் இந்திய அரசு முன்னைய காங்கிரஸ் அரசின் கொள்கைகளையே வெளிப்படுத்தியுள்ளது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது மோடியும் 'ஒரே குட்டையில் ஊறிய மட்டைதான்' என்ற கூற்று நினைவுக்கு வருகின்றது.

இன்னும் எத்தனை காலம்தான் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக கதைத்துக் கொண்டிருப்பார்களோ தெரியவில்லை. ஏற்கனவே நீர்த்துப்போயுள்ள நிலையில் காணப்படும் அதனைப் பற்றிக் கதைப்பதில் பயன் கிடைக்கவே கிடைக்க மாட்டாது என்பதை இனியாவது இந்திய அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்.

இலங்கை மீதான சர்வதேச விசாரணை நடக்குமானால் இந்திய அரசின் பொய் முக மூடியும் கழற்றப்பட்டு விடும் என்ற ஐயம் மோடி அரசுக்கு ஏற்பட்டிருக்கலாம். ஏனென்றால் இறுதிப் போரின்போது தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அட்டூழியங்களுக்கு இந்தியாவும் துணை நின்றதை எவருமே மறுக்க முடியாது. இந்தியா ஆயுதங்களை மட்டுமே வழங்காது போரில் நேரடியாக ஈடுபட்டதாகவும் வலுவான குற்றச்சாட்டுக்கள் தெரிவிக் கப்பட்டுள்ளன. சோனியா குடும்பத்தின் பழி தீர்க்கும் படலத்துக்கு அப்போதைய காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு சகல வகையிலும் உதவிகளை நல்கியது. விடுதலைப் புலிகளை அழிக்கின்றோம் என்று கூறிக்கொண்டு ஒட்டு மொத்த இலங்கைத் தமிழர்களையும் அழித்து ஒழிக்கும் செயற்பாடுகளில் இந்திய அரசின் கரங்களும் நீண்டு கறைகளைத் தாங்கி நிற்கின்றன.

எனவேதான் சுப்பிரமணிய சுவாமி இலங்கையில் கூறிய வார்த்தைகளை வெறுமனே அவரது தனிப்பட்ட கருத்தெனப் புறமொதுக்கி விட முடியாது. ஏனென்றால் அவர் இப்போது இந்தியாவை ஆளும் கட்சியின் ஓர் உறுப்பினர். அவரது தமிழர் விரோதப் போக்கினை அறிந்தும் இந்திய அரசு அவரை இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளமை சாதாரண விடயமல்ல. சுப்பிரமணிய சுவாமி மூலமாகத் தனது கொள்கையைத் தெரிவித்துள்ள இந்திய அரசை இலங்கைத் தமிழர்கள் இனியும் நம்பி நிற்பதென்பது முட்டாள்தனமாகும்.

அன்று சோனியாவின் ஏவல் பிள்ளையான மன்மோகன், இன்று நரேந்திர மோடி. ஆட்கள்தான் மாறியிருக்கிறார்கள். கொள்கையில் மாற்றம் என்பதே இல்லை.

கட்டுரை

# வேறுபாடுகளின் மையமான புயல்கள்

கே.என். ராமச்சந்திரன்

பெண்கள் துன்புறுத்தப்படும் சம்பவங்கள் அண்மையில் நம் நாட்டில் அதிக அளவில் நிகழ்ந்து உலகின் கவனத்தை ஈர்த்திருக்கின்றன. பெண்ணிய அமைப்புகள் குற்றவாளிகளை ஆண்மை நீக்கம் செய்வது முதல் தூக்கில் போடுவது வரையான பல தண்டனைகளைப் பரிந்துரைக்கின்றன.

இந்த மாதிரியான மனோ பாவங்களுக்கு மதம், சாதி, சமூகம் சார்ந்த காரணங்கள் சொல்லப்பட்டாலும் ஓர் ஆணின் மனதுக்கு அடியில் குடியிருக்கும் ஆழ்மன உணர்வே முதன்மையான காரணமென்று அண்மை ஆய்வுகள் காட்டுகின்றன.

பாகிஸ்தானில் பெண்களுக்காகப் போராடி வரும் அஸ்மா ஜஹாங்கீரை உலகமே பாராட்டுகிறது. ஆனால் பெரும்பாலான பாகிஸ்தானியர்கள் அவர் பெண்களின் மனதைக் கெடுத்துத் தீய வழியில் செலுத்துகிறார்!' என்று குற்றம் சாட்டுகிறார்கள். அங்கு முல்லாக்களின் ஆதரவில் ஆதாயம் காணும் அரசியல்வாதிகளும், இராணுவ சர்வாதிகாரிகளும் அதை வழிமொழிகிறார்கள்.

ஜீன்ஸ் அணிந்தது, ஜன்னல் வழியாக வேடிக்கை பார்த்தது, சினிமாப் பாட்டை முணுமுணுத்தது, பெண் குழந்தை பெற்றது போன்ற செயல்களால் குடும்ப மானத்தைக் குலைத்துவிட்டதாக இளம் பெண்கள் கொல்லப்படுகிறார்கள். கல்வி கற்க வேண்டும் என்ற ஆசை காரணமாக மலாலா என்ற சிறுமியைத் தலிபான்கள் சுட்டுக் கொல்ல முயன்றிருக்கிறார்கள். இளம்பெண்ணைக் கௌரவக் கொலை செய்வது குடும்பத்துக்குள் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டிய விடயமாகிவிட்டது.

அமெரிக்காவில் ஆண் பெயரிடப்பட்ட புயல்களை விடப் பெண் பெயரிடப்பட்ட புயல் கள் இரு மடங்கு அதிகமான சேதத்தை ஏற்படுத்துவதாகப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. இல்லினாய் மற்றும் அரிசோனாப் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் அண்மையில் வெளியிட்ட ஓர் ஆய்வுக் கட்டுரையில் ஆண்கள் தம்மையுமறியாமல் தமது ஆழ்மனதில் பெற்றிருக்கிற பாதகமான எண்ணங்களே அதற்குக் காரணம் என்று கூறுகிறார்கள்.

இயல்பாகவே பல ஆண்கள் பெண்களுக்குரிய மதிப்பையும் மரியாதையையும் தருவதில்லை. பெண் பெயருள்ள புயல்களைக் கூட அதே கண்ணோட்டத்துடன் பார்க்கிறார்கள். ஆண் பெயருள்ள புயல்கள் அதிகமான ஆக்ரோஷத்துடன் வீசி அதிக சேதத்தை உண்டாக்கும் என எண்ணி அதற்கேற்றவாறு உயிரையும் உடைமைகளையும் பத்திரப்படுத்திக் கொள்கிறார்கள்.

பெண் பெயருள்ள புயல்கள் நளினமாக ஒய்யார நடை போட்டுக் கொண்டு போய் விடும் என்று எண்ணுகிறார்கள். பெண்களே கூடப் பெண் பெயருள்ள புயல்களை எச்சரிக்கையுணர்வுடன் எதிர்கொள்வதில்லை.

பெண் பெயருள்ள ஒரு புயல் மணிக்கு நூறு கிலோ மீற்றர் வேகத்தில் வீசப் போகிறது என்று எச்சரிக்கை விடுத்தால்கூட பயம் கொள்ளாமல் ஏனோதானோ என்ற அலட்சிய பாவத்துடனேயே பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். இதுவே பெண் பெயருள்ள புயல்களால் அதிகமான ஆட் சேதம் ஏற்படுவதற்குக் காரணமாகிறது.

1950 முதல் 2012ஆம் ஆண்டுவரை அமெரிக்காவில் வீசிய புயல்களில் பெண் பெயருள்ள புயல்கள் ஆண்டுக்குச் சராசரியாக 45 பேரையும் ஆண் பெயருள்ளவை அதில் பாதிப் பேரையும் பலி வாங்கியிருக்கின்றன. 2005ஆம் ஆண்டில் வீசிய காத்ரீனாப் புயலால் ஏற்பட்ட பெரும் சேதத்துக்கு அதற்கு ஓர் அழகான பெண் பெயரைச் சூட்டியதுதான் காரணமென ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

கிஜு யங் என்ற ஆய்வாளர் நடத்திய கருத்துக் கணிப்பில் ஆண் பெயருள்ள புயல்களே அதிக சேதம் விளைவிக்கும் என்ற கருத்து மிகப் பெரும்பான்மையானவர்களிடம் இருப்பது தெரிந்தது.

அலக்சாந்தர், விக்டர் போன்ற அதிகமான ஆண்மைத் தனமுள்ள பெயர்கள் சூட்டப்பட்ட புயல்களைப் பற்றி அதிகமான அச்சம் தோன்றியது. அதன் காரணமாகவே தம் இருப்பிடங்களை விட்டு வெளியேறிப் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விடும் நாட்டமும் அதிகமாகத் தென்பட்டது.

இவ்வாறான இனப் பாகுபாடு, பாலினப் பாகுபாடு போன்றவை கோணல் மனதினரின் குறுகிய சிந்தனைகளால் ஏற்படுவதாகச் சொல்ல முடியாது. கடந்த இருபதாண்டுகளாகச் செய்யப்பட்ட ஆய்வுகள் நல்ல உள்ளமும் எண்ணமும் கொண்டோரிடம்கூட இத்தகைய ஆழ்மனத்து ஆணியப் போக்கு அவ்வப்போது தலைதூக்கி விடுவதைக் காட்டுகின்றன.

தேர்தலில் நிற்கிற வேட்பாளர், தலைமை அதிகாரி, வேலை கோரி வருபவர், விற்பனைப் பிரதிநிதிகள் போன்றவர்களிடம் ஒருவர் காட்டும் அணுகுமுறையும் அவர் எடுக்கும் முடிவுகளும் எதிராளி ஆணா பெண்ணா என்பதைச் சார்ந்தே அமைகின்றன.

அமெரிக்காவில் ஹிலாரி கிளிண்டன் போன்ற திறமையான பெண்மணியை விடக் கறுப்பராக இருந்தபோதிலும் ஒபாமா என்ற ஆணே அதிபர் பதவிக்கு ஏற்றவர் என்றே மக்கள் கருதினார்கள். இதுவரை ஒரு பெண்கூட அமெரிக்க அதிபராக ஆக முடியவில்லை. எதிர்காலத்தில் ஆக முடியும் என்றும் தோன்றவில்லை.

பெண்ணுக்கு எதிரான பாகுபாட்டுக்குப் பெண்ணின வெறுப்பு மட்டுமே காரணமாக முடியாது என பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தின் உளவியல் பேராசிரியரான சூஸன் ஃபிஸ்கி கூறுகிறார். எல்லாரிடமுமே அவர்களது ஆழ்மனதில் பிறவிக் குணமாக, தானே தோன்றியதாக, அனிச்சையானதாக, அர்த்தமற்றதாக அமைந்த பெண்ணின வெறுப்பு உள்ளது.

ஆண் பெயருள்ள புயல்கள் அதிகமான ஆக்ரோஷத்துடன் வீசி அதிக சேதத்தை உண்டாக்கும் என எண்ணி அதற்கேற்ற வாறு உயிரையும் உடைமை களையும் பத்திரப்படுத்திக் கொள்கிறார்கள். பெண் பெயருள்ள புயல்கள் நளினமாக ஒய்யார நடை போட்டுக் கொண்டு போய் விடும் என்று எண்ணுகிறார்கள்.

எனக்குப் பெண்களைப் பிடிக்காது என்று யாரும் வெளிப்படையாகவோ தமக்குத் தாமே இரகசியமாகவோகூட ஒப்புக் கொள்வதில்லை. பெண்களுக்குத் திறமை குறைவு என்றாலும் அவர்களுக்குப் பாதுகாப்பு தேவைப்படுகிறது என்றாலும் அவர்கள் இனிமையானவர்கள் என்பதால் அவர்களை விரும்பித் தொலைக்க வேண்டியிருக்கிறது என்றே பெரும்பாலான ஆண்களும் மிகப் பல பெண்களும் எண்ணுகிறதாக ஃபிஸ்கி கூறுகிறார்.

யேல் பல்கலைக்கழக ஆய்வாளர் குழுவொன்று பல பல்கலைக்கழகங்களில் அறிவியல் துறைத் தலைவர்களாக உள்ள பேராசிரியர்களுக்கு தலா இரண்டு விண்ணப்பங்களை அனுப்பியது. புதிதாகப் பட்டம் பெற்ற ஒரு நபர் ஆராய்ச்சிப் பணி வழங்கக் கோரும் விண்ணப்பங்கள் அவை.

இரண்டிலும் ஒரே மாதிரியான கல்வித் தகுதிகளும், தன் விவரங்களும் அமைந்திருந்தன. ஆனால் ஒரு விண்ணப்பத்தில் ஆணும் மற்றதில் பெண்ணும் பணி கோருவதாகக் கையொப்பமிடப்பட்டிருந்தது. இருவருமே கற்பனையான நபர்கள்தான்.

அந்த விண்ணப்பங்களைப் பரிசீலித்து தகுதியான நபரைப் பரிந்துரைக்குமாறு அந்தத் துறைத் தலைவர்களிடம் கோரப்பட்டது. அவர்கள் ஆண் விண்ணப்பதாரருக்கு அதிக மதிப்பெண்களை வழங்கியதுடன் அதிகமான ஊதிய விகிதத்தையும் பரிந்துரைத்தனர்.

அந்தத் துறைத் தலைவர்களில் எல்லா வயதினரும் எல்லா இனத்தினரும் இருந்தனர். அவர்களில் ஆண்களும் உண்டு, பெண்களும் உண்டு. அவர்கள் தேர்வு செய்த விதத்துக்கும் அவர்களது வயது, இனம், பாலினம் போன்ற அம்சங்களுக்கும் எந்த விதமான தொடர்பும் இருப்பதாகத் தோன்றவில்லை.

இதேபோலப் பல வர்த்தக நிறுவனங்களுக்கும், அரசு அலுவலகங்களுக்கும் வேலை கோரும் விண்ணப்பங்கள் ஆண் பெயரிலும் பெண் பெயரிலும் அனுப்பப்பட்டன. அவற்றின் தலைமை அதிகாரிகளும் ஆண் விண்ணப்பதாரருக்கே அதிக தகுதியிருப்பதாக மதிப்பிட்டனர்.

ஸ்டான்போர்டு வர்த்தகப் பள்ளியின் மாணவர்களிடம் அதே போன்ற விண்ணப்பங்களைக் காட்டிக் கருத்துக் கேட்டபோது அவர்களும் ஆண் விண்ணப்பதாரருக்கே அதிக ஆதரவு அளித்ததுடன் பெண் விண்ணப்பதாரர் அதிகமான அதிகார ஆசையும், சுய தம்பட்டம் அடிக்கும் போக்கும் உள்ளவராகத் தோன்றுகிறார் என விமர்சித்தனர்.

வென்டர்பில்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த செசிலியாமோ என்ற ஆய்வாளர் சில தொகுதிகளில் மாதிரி கருத்துக் கணிப்பு மேற்கொண்டபோது ஒரு தேர்தலில் தகுதிமிக்க ஒரு பெண், வேட்பாளராக நின்றால் அவருக்கே வாக்களிக்க ஆயத்தமாக இருப்பதாகப் பெரும்பாலான வாக்காளர்கள் தெரிவித்தனர். ஆனால் தேர்தல் முடிவில் பல தகுதி வாய்ந்த பெண் வேட்பாளர்கள் வெற்றி பெற முடியவில்லை. வாக்காளர் வாக்குச்சாவடிக்குள் நுழைந்து வேட்பாளர் பட்டியலைப் பார்வையிடும் போது அவரது ஆழ்மனம் ஆண்கள் தான் தலைமைப் பதவியை வகிக்க முடியும் என்று தூண்டிவிட்டு அவரை ஆண் வேட்பாளருக்கு வாக்களிக்குமாறு செய்து விடுகிறதாக மோ கூறுகிறார்.

இத்தகைய பட்சபாதமான ஆழ்மனப் பதிவுகள் ஆண்களைவிட பெண்களுக்குக் குறைவான ஊதியங்களை நிர்ணயிக்கின்றன. பெண்கள் ஆண்களால் கொடுமைப்படுத்தப்படும்போது ஆண்களின் பங்களிப்பைக் குறைத்துப் பேசவும், மூடி மறைக்கவும், பூசி மெழுகவும் முயலுகின்றன.

பெரும் நிறுவனங்களின் தலைவர்கள் நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் போன்ற பதவிகளில் பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைவான சதவீதமாக இருப்பதற்கும் இதுவே காரணம். இத்தகைய ஆழ்மனத் துவேஷங்கள் கண்ணுக்கும் உணர்வுக்கும் புலனாகாதவை. ஆனால் அவை பெரும் தீங்கிழைப்பவை. அவற்றைப் போக்க ஆண்களைவிட பெண்களுக்குத் தான் அதிகக் கடமையும் பொறுப்பும், கட்டாயமும் உள்ளது.

ஏனெனில் பெண்களின் ஆழ்மனதிலும் அத்தகைய துவேஷங்கள் உண்டு.





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: புத்துணர்ச்சியுடன் எதையும் எதிர்கொள்வீர்கள். நீங்கள் சந்திக்கும் ஒவ்வொரு பிரச்சினைகளையும் மிகச்சாதுரியமாகக் கையாளுவீர்கள். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர்.

**இடபம்**: எதிர்பார்த்த இடங்களில் வெற்றியை அடைய முடியும். எடுத்த காரியத்தை எளிதில் முடிக்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கும். சில திண்டாட்டங்களும் வந்து வந்து போகும்.

**மிதுனம்**: நண்பர்களுக்குள் விரோதம் ஏற்பட வாய்ப்பிருப்பதால் கவனம் தேவை. உங்களது யோசனைகளை மற்றவர்கள் கேட்டும் அனுசரித்தும் செல்வார்கள். உத்தியோகத்தர்கள் கவனம் தேவை.

**கடகம்**: உங்களை உதாசீனப்படுத்தியவர்கள் மீண்டும் திரும்பி வருவார்கள். எதையும் ஆலோசனை செய்து முடிவெடுங்கள். உங்களின் செயற்பாட்டினால் உங்கள் குடும்பத்துக்கு நன்மை ஏற்படும்.

**சிங்கம்**: குடியிருக்கும் வீட்டை மாற்றவும் சிலருக்கும் வாய்ப்புண்டு. சுப காரியங்களுக்கான வாய்ப்புகள் தேடி வரும். கொடுக்கல் வாங்கலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். நோய்கள் ஏற்படலாம். கவனம் தேவை.

**கன்னி**: குடும்பப் பிரச்சினைகள் முடிவுக்கு வரும். வெளிவட்டாரப் பழக்கங்கள் நன்மையைத் தரும். உடன்பிறப்புகள் அனைவரும் சந்தோஷமாக இருப்பார்கள். அவர்களுக்காக சில தியாகங்களையும் செய்வீர்கள்.

**துலாம்**: குழந்தைகளின் கல்வி, நடத்தை மிகவும் நன்றாக இருக்கும். வியாபாரிகள் வெளிநாட்டுப் பயணம் செல்வார்கள். பிள்ளைகளுக்காக செலவுகள் செய்ய வேண்டி வரும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும்.

**விருச்சிகம்**: ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். கடந்த தினங்களில் நடைபெறாத சில காரியங்கள் முக்கியஸ்தர்கள் மூலமாக இனிதே நிறைவேறும். மேலிடத்தில் உள்ள அதிகாரிகள் உங்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்வார்கள்.

**தனுசு**: வேலை செய்யும் இடத்தில் உள்ள பிரச்சினைகளை நிதானமான அணுகுமுறையுடன் சமாளித்து வெற்றி காண்பீர்கள். ஊழியர்கள் அமைதியாகப் போவார்கள். வரவேண்டிய பண மிகுதிகள் கிடைக்கும்.

**மகரம்**: உறவுகள் மற்றும் நண்பர்களுடன் உறவு சிறக்கும். உடன்பிறந்தவர்களுக்கு உயர் பதவி கிடைக்கும். மன உறுதி அதிகரிக்கும். பயணத்தில் ஆர்வம் அதிகரிக்கும். பாராட்டுகளும் விருதுகளும் கிடைக்கும்.

**கும்பம்**: மத நம்பிக்கை அதிகரிக்கும். ஆன்மிக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். புதிய உத்தியோகம் கிடைக்கும். உங்கள் தொழில் மூலம் பணவரவு அதிகரிக்கும். எதிரிகள் உங்கள் முன் அடங்குவர்.

**மீனம்**: வெளிநாடு பயணங்களால் பணவரவு அதிகரிக்கும். தைரியம் அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் கவனத்தை செலுத்த வேண்டியது அவசியம். நற்பெயரும் கீர்த்தியும் வந்து சேரும்.

## நாளை

**ஆடி-13 செவ்வாய்க்கிழமை | 29.07.2014**

திதி: துதியை மு.ப.8.32 வரை
நட்சத்திரம்: மகம் மு.இ.11.59 வரை
சுபநேரம்: 10.33-12.03 வரை
இராகுகாலம்: 03.03-04.33 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## கடவுள் இருக்கிறாரா? இல்லையா?

பௌத்தர்கள் மிகச் சிறந்த தர்க்கவாதிகள். கடவுள் இருக்கிறாரா? இல்லையா? என்பது பற்றி அவர்கள் கவலை கொள்வதில்லை. சூனியவாதம், பரம்பொருள் வாதம் என்னும் இருமுனைகளுக்கிடையில் உண்மையாக நிற்கவே இடமில்லை. தீவிரமாகத் தர்க்கம் செய்து, அறிவுபூர்வமாக அனைத்தையும் பௌத்தர்கள் அழித்துவிட்டார்கள். அத்வைதிகள் தர்க்க ரீதியில் தத்துவ ஆராய்ச்சி செய்து, இறுதியில் பரம்பொருள் ஒன்று உண்டு என்ற முடிவுக்கு வந்தனர். நிலையான ஏகமான ஒரு பொருள் உண்டு என்றும், அதிலிருந்தே அனைத்தும் தோன்றுகின்றன என்றும் அவர்கள் கூறினர். தன்னிலையுண்மை, தன்னிலையின்மை என்ப இரு, கருத்துகளும் ஒரே சமயத்தில் இருக்கக் கூடும் என்பதைப் பௌத்தர்களும் அத்வைதிகளும் ஏற்றுக் கொண்டனர். இவற்றுள் ஒன்று சரியாகவும், மற்றொன்று தவறாகவும் இருக்க வேண்டும். சூனியவாதியான பௌத்தர்கள் தன்னிலையின்மை அதாவது நிலையான ஒன்று இல்லை என்பதையும், அத்வைதிகள் தன்னிலையுண்மை அதாவது நிலையானதாக ஒன்று உள்ளது என்பதையும் கூறுகின்றனர். இரு கருத்துக்களுக்கும் இடையில் போரும் வாதப் போரும் நிகழ்ந்து உலகையே ஆட்டுவித்துள்ளன.

உண்மைவாதி, 'தன்னிலையுண்மை என்றும் கருத்து சூனியவாதிக்கு எவ்வாறு தோன்றியது?' என்று கேட்கிறான். சுழலும் ஒளி எப்படி வட்டமாகத் தோன்றுகிறது? அசையாத புள்ளியைக் கொண்டுதான் அசையும்நிலையை விளக்க முடியும்.

அடிப்படையான பொருள் ஒன்று இருக்கிறது என்று கூறும் மயக்கத்துக்கு ஆரம்பம் எது என்பதைச் சூனியவாதியால் விளக்க முடியாது.

# பிறப்பிலேயே காது கேளாத சிறுவன் சரி செய்து மருத்துவர்கள் சாதனை



கனடாவில் பிறப்பிலேயே காது கேளாத சிறுவனை அறுவைச் சிகிச்சை மூலம் கேட்க வைத்து மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

கனடாவின் மொன்றியல் மாகாணத்தைச் சேர்ந்த அகஸ்டீ மாஜ்கொஸ்கீ என்ற 3 வயது சிறுவன் பிறப்பில் இருந்தே காது கேளாமல் பாதிக்கப்பட்டுள்ளான்.

இந்த விடயம் இவன் பிறந்து 6 மாதங்கள் வரை இவனது பெற்றோருக்கு தெரியாமல் இருந்துள்ளது. அதன்பின் சில தினங்களில் இவன் தாய் சோபிகயூ என்ன கூறினாலும் அதன்படி இந்தச் சிறுவன் நடக்காததால் அவருக்கு சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த நிலையில் சிறுவனை மருத்துவரிடம் அழைத்து சென்று பரிசோதித்து பார்த்த பின், அவனுக்கு காது கேளாது என்ற உண்மை அவருக்குத் தெரியவந்துள்ளது.

இதனை அடுத்து சிறுவனிடம் மருத்துவர்கள் மேற்கொண்ட அறுவை சிகிச்சையில், அவனது மூளைத் தண்டில் கேட்கும் சாதனம் ஒன்றை பொருத்தியுள்ளனர்.

இதுகுறித்து மருத்துவர் ஜெனிவாவ் பாடிக் கூறுகையில்; இவ்வாறு ஒரு சிறுவன் இருப்பது எனக்கு வியப்பளிக்கிறது என்றும் எனது சேவைக்காலத்தில் இது வரை நான் யாரையும் பார்த்ததில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | 3 | 6 | | | 7 | |
| 1 | 4 | 3 | | | 5 | 6 | 8 | |
| | | | 2 | | | 9 | | |
| | 2 | 1 | | | | 3 | | |
| 3 | | | | | | | | 6 |
| | | 9 | | | | 1 | 5 | |
| | | 5 | | | 4 | | | |
| | 3 | 6 | 8 | | | 5 | 9 | 4 |
| | 8 | | | 9 | 6 | | | 1 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 2 | 7 | 9 | 8 | 6 | 3 | 5 |
| 6 | 7 | 8 | 1 | 5 | 3 | 2 | 4 | 9 |
| 9 | 5 | 3 | 4 | 6 | 2 | 1 | 7 | 8 |
| 2 | 8 | 9 | 3 | 7 | 4 | 5 | 1 | 6 |
| 7 | 4 | 6 | 5 | 8 | 1 | 3 | 9 | 2 |
| 5 | 3 | 1 | 6 | 2 | 9 | 4 | 8 | 7 |
| 3 | 2 | 7 | 9 | 1 | 5 | 8 | 6 | 4 |
| 8 | 6 | 4 | 2 | 3 | 7 | 9 | 5 | 1 |
| 1 | 9 | 5 | 8 | 4 | 6 | 7 | 2 | 3 |

## வென்றது நவாலி சென்.றொக்

யாழ்ப்பாணம், ஜூலை 28
யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடத்தும் 18 ஆவது தாச்சி சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் கைதடி விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

அவற்றில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் கைதடி விநாயகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவாலி சென்.றொக் விளையாட்டுக்கழக அணி மோதியது.

அதில் நவாலி சென்.றொக் விளையாட்டுக் கழக அணி 8:6 என்ற பழங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (ற-23)

## இளம்பறவை வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 28
முல்லைத்தீவு முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

அவற்றில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் இளம்பறவை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனந்தம் விளையாட்டுக் கழக அணி மோதியது.

அதில் இளம்பறவை விளையாட்டுக் கழக அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)



மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 49 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தப்பட்ட யாழ்.மாவட்ட ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் சம்பியனாகத் தெரிவாகிய ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி வீரர்கள், இறுதியாட்டத்தில் கலந்துகொண்டிருந்த விருந்தினர்களுடன். (ற-23)

# சென். நீக்கிலஸ் வி.க. இறுதிக்கு நுழைந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 28
அரியாலை சனசமூக நிலையத்தின் 65ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் அரையிறுதியாட்டம் ஒன்றில் வெற்றிபெற்று நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதியது.

அதில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது அரையிறுதி யாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்த போது, பார்வையாளர்கள் மைதானத்துக்குள் புகுந்து குழப்பம் விளைவித்ததை அடுத்து ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. (ற-23)

## சந்திரோதயம் சம்பியன்

மாங்குளம், ஜூலை 27
வவுனியா பகலவன் விளையாட்டுக் கழகத்தின் 4ஆவது ஆண்டுநிறைவுதினத்தைமுன்னிட்டு அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் சந்திரோதயம் அணி சம்பியனாகியது.

கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் சந்திரோதயம் அணியை எதிர்த்து விடிவெள்ளி அணி மோதியது.

இதில் சந்திரோதயம் அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக ஜம்பா 18 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் விடிவெள்ளி அணி சார்பாக இன்பா, கண்ணா ஆகியோர் தலா 2 இலக்குகளையும், ஜோன் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விடிவெள்ளி அணி 6 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பாக இன்பா 22, தர்சன் 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சந்திரோதயம் அணி சார்பாக சதீஸ், கமல் தலா 2 இலக்குகளையும், ஜம்பா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். இரு அணிகளும் சமமான ஓட்டத்தைப் பெற்றதால் சுப்பர் பந்துப் பரிமாற்றம் வழங்கப்பட்டது.

இதில் சந்திரோதயம் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 2 இலக்குகளை இழந்து 8 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜம்பா 6 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் இன்பா 2 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய விடிவெள்ளி அணி ஜம்பாவின் பந்து வீச்சைச் சமாளிக்க முடியாமல் இரு ஓட்டத்தை மாத்திரம் பெற்றது.

இதனால் சந்திரோதயம் அணி 6 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இதில் சந்திரோதயம் அணியைச் சேர்ந்த ஜம்பா சிறந்த ஆட்ட நாயகனாகவும், தொடர் ஆட்ட நாயகனாக இன்பா, சிறந்த பந்து வீச்சாளராக கமல் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (த-422)

## மத்தியஸ்தர் சங்க கூட்டம்

கரணவாய், ஜூலை 27
பருத்தித்துறை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 10ஆம் திகதி கொற்றாவத்தை அ.த.க.பாடசாலையின் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சங்கத் தலைவர் பா.முகுந்தன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் உதைபந்தாட்ட நடுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளன.

சங்க உறுப்பினர்கள் ஏதாவது பிரேரணைகள் இருப்பின் எதிர்வரும் 2ஆம் திகதிக்கு முன்னர் தலைவர் அல்லது செயலாளரிடம் எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு சங்கச் செயலாளர் ச.கருணானந்தன் கேட்டுள்ளார். (த-108)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 28
தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுத் தொடரின் 2ஆம் சுற்று ஆட்டங்கள் றெஜின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. அவற்றில் இன்று திங்கட்கிழமை நடைபெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு. பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம் பன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நெடியகாடு விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

பி.ப. 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் செந்தமிழ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ற-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 28
முல்லைத்தீவு முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான ஆட்டங்கள் முள்ளியவளை வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

அவற்றில் இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் இளம்பறவை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாரதிதாசன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யங்கஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சந்திரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றோயல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ற-23)

* * *



யாழ்ப்பாணம், ஜூலை 28
முல்லைத்தீவு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் இன்று திங்கட்கிழமை விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன.

மு.ப. 9.15 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் மன்னார் கண்டல் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மத்தளன் ஒற்றுமை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஆனந்தம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வட்டுவாகல் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் சூப் பாறங் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து செந்தமிழ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது . (ற-23)

# சமனிலையை நோக்கி 2ஆவது டெஸ்ட்



இலங்கை மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இறுதிநாளான இன்று தென்னாபிரிக்க அணி வெற்றி பெறுவதற்கு 9 இலக்குகள் கைவசம் உள்ள நிலையில் 331 ஓட்டங்களைப் பெறவேண்டியுள்ளது. ஒருநாளில் இவ் ஓட்ட எண்ணிக்கையைப் பெறுவது கடினமாகையால் போட்டி சமனிலையில் முடியவோ அல்லது 9 இலக்குகளையும் கைப்பற்றும் பட்சத்தில் இலங்கை அணி வெற்றி பெறவோ வாய்ப்புக்கள் உள் ளன.

இரண்டாவது இன்னிங்ஸில் இலக்குகள் இழப்பின்றி 11 ஓட்டங்களுடன் நேற்றைய நாள் ஆட்டத்தை தொடர்ந்த இலங்கை அணி 8 இலக்குகளை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்திருந்தது. அவ்வணி சார்பாக இரண் டாவது இன்னிங்ஸில் சங் கக்கார 72 ஓட்டங்களையும் அணித் தலைவர் அஞ்சலோ மத்தியுஸ் ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் தென்னாபிரிக்காவின் மோர்னி மோர்க்கல் 4 இலக்குகளையும், ஸ்ரெய்ன், தாகிர் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றிக் கொண்டனர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸில் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி நேற்றைய நாள் நிறைவின் போது 1 இலக்கினை இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. தொடக்க வீரர் பீற்றர்சன் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழக்க, எல்கர் 13 ஓட்டங்களுடனும், டி கொக் 21 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். வீழ்த்தப்பட்ட இலக்கினை ரங்கண ஹேரத் வீழ்த்தியிருந்தார்.

# இஸ்ரேல் உதைபந்து அணியை தாக்கிய ஆர்ப்பாட்டக்காரர்கள்



இஸ்ரேலிய இராணுவத்தினர் காஸாவில் நடத்தும் தாக்குதலுக்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆஸ்திரியாவில் நடைபெற்ற நட்பு ரீதியிலான உதைபந்து போட்டியில் விளையாடிய இஸ்ரேல் அணி வீரர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

ஆஸ்திரியாவின் சல்ஸ்பேர்க் மாகாணத்தின் பிசொப்சொபென் நகரில் நடைபெற்ற ஒஸ்ரியாவின் லில்லி கழகத்துக்கும் இஸ்ரேலின் மக்காபி ஹைபா கழகத்துக்கும் இடையிலான நட்புரீதியான உதைபந்து போட்டியின்போதே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

போட்டி முடிவடைவதற்கு 5 நிமிடங்களுக்கு முன்பாக காஸா பற்றி சுலோகங்களை கோஷமிட்டவாறு மைதானத்துக்குள் பலஸ்தீனக் கொடியுடன் நுழைந்த சுமார் 20 பேர் இஸ்ரேலிய வீரர்களைத் தாக்கினர்.

ஆனால் இதன்போது எவரும் காயமடையவில்லை எனவும் விரைவாக பொலிஸார் நிலைமைகளைக் கட்டுப்படுத்தியதாகவும் சல்பேர்க் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு ஆஸ்திரியா அதிபர் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

'விருந்தினராக ஆஸ்திரியாவில் தங்கியுள்ளவர்களுக்கு மதம் மற்றும் பிறப்பினைத் தாண்டி பாதுகாப்பின் கீழ் இருப்பதற்கு உரிமை உண்டு' என ஆஸ்திரியா அதிபர் வேர்ணர் பாயமன் தெரிவித்துள்ளார்.

காஸாவில் இடம்பெறும் இஸ்ரேல் இராணுவத்தினரின் தாக்குதலில் இதுவரையில் சுமார் 700 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் பல்லாயிரக்கணக்கானோர் இடம் பெயர்ந்துள்ளனர். (த)

## மைதானத்தில் ரசிகரை காப்பாற்றிய ரோட்ரிக்ஸ்

தனது ரசிகர் தன்னை கட்டித்தழுவ வந்ததையடுத்து அவரை காவலாளியிடம் இருந்து காப்பாற்றினார் கொலம்பிய அணியின் நட்சத்திர வீரர் ஜேம்ஸ் ரோட்ரிக்ஸ்.

சமீபத்தில் நடந்து முடிந்த உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் அதிரடி காட்டிய ரோட்ரிக்ஸ் ரசிகர்களின் மனதில் ஹீரோவாக விளங்கினார். அதைதொடர்ந்து பணக்கார அணியாக விளங்கும் ரியல் மட்ரிட் அணியில் ரூபா 605 கோடிக்கு ஒப்பந்தமாகியுள்ளார்.

இந்நிலையில் அவர் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கும் போது கொலம்பிய அணியின் உடையை அணிந்து கொண்டு ஒரு ரசிகர் ரோட்ரிக்ஸை நோக்கி ஓடி வந்து அவரை கட்டியணைத்தார்.

இதைப் பார்த்த பாதுகாப்பு காவலாளிகள் அவரை பிடித்து அடிக்க ஆரம்பித்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் ரோட்ரிக்ஸ் அந்த ரசிகரை அவர்களிடன் இருந்து மீட்டு ஒரு உதை பந்தை வழங்கி அவரை வழியனுப்பி வைத்தார்.

இதை பார்த்த இன்னொரு ரசிகர் பறந்து வந்து ரோட்ரிக்ஸை கட்டியணைக்க அவருக்கும் ஒரு பந்தை வழங்கி அனுப்பி வைத்தார். (த)



## எத்தனை தடவை தான் எனது தேசாபிமானத்தை நிரூபிப்பது



எனது தேசாபிமானத்தை எத்தனை தடவை நிரூபிப்பது என இந்திய டென்னிஸ் நட்சத்திரமான சானியா மிர்ஸா கண்ணீருடன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தெலுங்கானா மாநிலத்துக்கான கௌரவ தூதுவராக சானியா மிர்ஸா நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்த தெலுங்கானா பி.ஜே.பி தலைவரான கே. லக்ஷ்மன், சானியாவைப் 'பாகிஸ்தானின் மருமகள்' என விமர்சித்திருந்தார்.

இது தொடர்பாக சானியா மிர்ஸா இன்று என்.டி.டி.வி. தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியின்போது, இந்தியாவுக்காக தான் பல பெருமைகளைப் பெற்றுக்கொடுத்த போதிலும் தனது இந்தியத் தன்மையை நிரூபிக்க நிர்ப்பந்திக்கப்படுவது முறையற்றது எனத் தெரிவித்துள்ளார்.

நான் மிக கவலையடைந்தேன். மற்றொரு நாட்டில் இவ்வாறு நடக்குமா என்று தெரியவில்லை. எனது இந்தியத் தன்மையையும் தேசாபிமானத்தையும் எத்தனை தடவை நிரூபிக்க வேண்டியிருக்கும் எனத் தெரியவில்லை எனக் கண்ணீருடன் கூறினார்.

நான் ஒரு பெண்ணாக இருப்பதாலும் மற்றொரு நாட்டவரைத் திருமணம் செய்ததாலும் இப்படி நடக்கிறதா?

எனது திருமணத்தின் பின்னரும் இந்தியாவுக்காக நான் பதக்கங்களை வென்றேன். நான் விளையாடும் போது தெலுங்கானாவையும் இந்தியாவையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறேன். இனியும் அதை நான் தொடர்வேன் எனவும் சானியா மிர்ஸா கூறினார். (த)

## பொதுநலவாய விளையாட்டு விழாவில் இலங்கை வீரருக்கு வெள்ளிப் பதக்கம்

ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெறும் பொதுநலவாய விளையாட்டு விழாவில் பளுதூக்குதல் போட்டியொன்றில் இலங்கை வீரர் சுதத் பீரிஸ் வெள்ளிப்பதக்கமொன்றை வென்றுள்ளார்.

62 கிலோகிராம் எடைக்குட்பட்ட ஆண்களுக்கான பளு தூக்குதல் போட்டியில் சுதேஷ் இந்தப்பதக்கத்தை வென்றார். இந்த முறை பொது நலவாய விளையாட்டு விழாவில் இலங்கைக்கு கிடைத்த முதல் பதக்கம் இதுவாகும்.

இந்தப் போட்டியில் தங்கப் பதக்கத்தை சைப்பிரஸ் வீரர் திமித்ரஸ் மினாசிடிஸும் வெண்கலப்பதக்கத்தை சமோவா வீரர் வைபனா இயோனேயும் வென்றனர். (த)



# விஸ்வரூபமாகும் ஜடேஜா விவகாரம்

அண்டர்சனுடன் ஏற்பட்ட மோதலில் ரவீந்திர ஜடேஜாவுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தை ஏற்க இந்திய கிரிக்கெட் சபை மறுத்துள்ளது.

நாட்டிங்காமில் நடந்த முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் போது இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சனுக்கும், இந்திய வீரர் ரவீந்திர ஜடேஜாவுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு, மோதலாக வெடித்தது.

இதன் விளைவாக இரு அணியினரும் ஒருவரையொருவர் மாறி மாறி ஐ.சி.சியிடம் முறைப்பாடு செய்தனர்.

இந்த முறைப்பாடு குறித்து போட்டி நடுவர் அஸ்திரேலியாவைச் சேர்ந்த டேவிட் பூன் சவுதம்டனில் விசாரணை நடத்தினார்.

அண்டர்சன், ஜடேஜா மற்றும் இரண்டு தரப்பு வழக்கறிஞர்கள், ஐ.சி.சி.யின் வழக்கறிஞர், சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் விசாரணையின்போது முன்னிலையானார்கள். 2 நிமிட மணி நேரம் விசாரணை நீடித்தது. சம்பவம் தொடர்பான காணொலிக் காட்சியையும் போட்டுப் பார்த்தனர்.



நாட்டிங்காமில் நடந்த முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின்போது இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சனுக்கும், இந்திய வீரர் ரவீந்திர ஜடேஜாவுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு, மோதலாக வெடித்தது.

விசாரணை முடிவில் போட்டி நடுவர் டேவிட் பூன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இருவரும் நேருக்கு நேர் எதிர்கொண்டு மோதல் போக்கில் ஈடுபட்டது உண்மை தான். அதில் எந்த சந்தேகமும் 'இல்லை. இது போன்ற நடவடிக்கைகள் உண்மையான விளையாட்டின் உத்வேகத்துக்கு உகந்தது கிடையாது. இந்தச் சம்பவம் அந்த இடத்தில் நடந்திருக்கக்கூடாது.

என்றாலும் விதியை மீறியதாக ஜடேஜா மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டு எனக்கு திருப்திகரமாக இல்லை. சாட்சியங்களை விசாரித்து பார்த்ததில், அவர் நடத்தை விதியை மீறி தவறு செய்திருக்கிறார் என்பது தான் சரி. இதன் அடிப்படையில் அவருக்கு முதலாவது டெஸ்ட் போட்டி கட்டணத்தில் இருந்து 50 சதவீதம் அபராதமாக விதிக்கப்படுகிறது என்று தெரிவித்துள்ளார்.

ஆனால் ஐ.சி.சியின் இந்தத் தீர்ப்பு இந்திய கிரிக்கெட் சபைக்கு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்ய இந்திய கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது. (த)

# டிக்வெல்லவுக்கு அபராதம்



நடைபெற்றுவரும் தென்னாபிரிக்க அணிக்கெதிரான ஆட்டத்தில் அறிமுக வீரராக களமிறங்கி விளையாடிவரும் இலங்கை அணியின் இலக்குக் காப்பாளரான நிரோசன் டிக்வெல்லவுக்கு ஐ.சி.சியினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவின் முதல் இன்னிங்ஸில் அவ்வணி வீரரான டி வில்லியர்ஸ் சுரங்க லக்மலின் பந்தினை எதிர் கொண்ட போது அது துடுப்பில் படாமல் இலக்குக் காப்பாளரின் கையைச் சென்றடைந்தது. ஆனால் டிக்வெல்ல பந்தை மேலே எறிந்து ஆட்டமிழப்புக் கோரிக்கையை முன் வைத்தார். இதனை அடுத்து கள நடுவர்கள் மூன்றாவது நடுவரின் உதவியை நாடி காணொளியை மீள ஆராய்ந்து பார்த்ததில் பந்து துடுப்பில் படாமல் சென்றமை தெளிவாகத் தெரிந்தது.

இதனையடுத்து ஐ.சி.சியின் ஆட்டவிதிமுறைகளை மீறியமைக்காக ஆட்ட ஊதியத்திலிருந்து 10 வீதம் அபராதமாக விதிக்கப்பட்டது.

அறிமுக ஆட்டத்தில் விளையாடிய டிக்வெல்ல இரு இன் னிங்ஸ்களிலும் முறையே 72, 16 ஓட்டங்களை குவித்திருக்கின்றமையுடன் தென்னாபிரிக்காவின் முதல் இன்னிங்ஸில் ஒரு பிடியெடுப்பினையும், ஒரு ஸ்டெம்ப்பினையும் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இந்திய இங்கிலாந்து அணிகளில் மாற்றம்

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 3வது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணியின் இசாந்த் சர்மா காயம் காரணமாக விளையாடவில்லை. இவ் ஆட்டத்திற்காக விளையாடும் பதினொரு வீரர்களுக்கான பட்டியலில் இரு அணிகளும் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளன.

இரண்டாவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணியின் விக்கெட்டுக்களைத் தகரத்தெறிந்து இந்திய அணியின் வெற்றிக்கு வித்திட்டதன் மூலம் அவ் ஆட்டத்தின் ஆட்டநாயகன் விருதை வென்றிருந்த இசாந்த் சர்மா, கணுக்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக இவ் ஆட்டத்தில் விளையாடவில்லை. அவருக்குப் பதிலாக முதற்தர ஆட்டங்களில் 300 இலக்குகளைக் கைப்பற்றியுள்ள பங்கஜ் சிங் அறிமுக போட்டியில் விளையாடுகிறார். அத்து டன் பந்து வீச்சில் பிரகாசிக்காத ஸ்டுவர்ட் பின்னி நீக்கப்பட்டு, துடுப்பாட்ட வீரரான ரோகித் சர்மா இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து அணியில், இலக்குக் காப்பாளரான மாட் பிரையருக்குப் ப்திலாக ஜோஸ் பட்லர் அறிமுக ஆட்டத்திலும், வேகப்பந்து வீச்சாளர்களான லியம் பிளங்கெற், பென் ஸ்ரோக்ஸ் ஆகியோருக்குப் பதிலாக கிறிஸ் ஜோர்தான், கிறிஸ் வோக்ஸ் ஆகியோரும் விளையாடுகின்றனர்.

5 போட்டிகளைக் கொண்ட இத் தொடரில் 1-0 என்ற ரீதியில் இந்திய அணி முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### தருபவர்களுக்கு சன்மானம்

ஆடி அமாவாசையன்று கீரிமலை தீர்த்தக் கரையில் எனது கைத்தொலைபேசி 077 675 1512 தவறிவிட்டது. சிம்காட், மெறிகாட் என்பவற்றை தருபவர்களுக்கு 5000/= சன்மானம் வழங்கப்படும்.

N.மோகன்,
205, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 077 994 5765
(50430)(3.6.4)

### மரண அறிவித்தல்



**சின்னையா இராஜேஸ்வரி**

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் கண்டாவளை பிரதான வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா இராஜேஸ்வரி நேற்று (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னைபூபதி(கண்டாவளை), காலஞ்சென்ற குலநாயகம் மற்றும் தவயோகம்(கனடா), காலஞ்சென்ற தங்கராசா மற்றும் தவபாலன் (கரைச்சிப் பிரதேச சபை, கௌரவ உறுப்பினர்), தனபாக்கியம் (உத்தியோகத்தர் கரைச்சிப் பிரதேசசபை, கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28.07.2014 பி.ப. 2.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்டாவளை பொதுமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர். மகன்: சி.தவபாலன்
கௌரவ உறுப்பினர், கரைச்சிப் பிரதேசசபை, கிளிநொச்சி
(41334)(4.6.3)

### மரண அறிவித்தல்

**அல்பிறெட் புஸ்பராசா**



ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அல்பிறெட் புஸ்பராசா நேற்று (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அல்பிறெட்-மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், குண்டுமணி, விமலா, ரவி, வினிதா, அனோயா ஆகியோரின் அன்பு சகோதரனும், குணரெத்தினம், ஜோச், நவரட்ணம், சுரேஷ், ஜெனோ ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.07.2014) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணியளவில் புனித மரியாள் தேவா லயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உப்புக்குள வீதி,
ஊர்காவற்றுறை.
(50431)(7.6.3)
தகவல்: சகோதரர்கள்,
மச்சான்மார்,
மச்சாள்மார், மருமக்கள்.

### தவறி விட்டது

ஐயாத்துரை சிவகுமார் இல.591243330V கொண்ட தேசிய அடையாள அட்டை யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியிலிருந்து சுதுமலைக்கு செல்லும் வழியில் தவறிவிட் டது. கண்டெடுத்தவர்கள் அண்ணாகோப்பி நிலையங்களில் அல்லது 0772961285 தொலைபேசி மூலமோ தொடர்பு கொண்டு தந்துதவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

### கண்ணீர் அஞ்சலி



ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவின் கிராம உத்தியோகத்தராக கடமையாற்றி வரும் தேவராஜாசர்மா பாலச்சந்திரசர்மா அவர்களின் அன்பு தாயார்.

**தேவராஜாசர்மா சரஸ்வதியம்மா**

26.07.2014 இல் மரணமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தார், உறவினர்களுக்கு எமது கண்ணீர்க் காணிக்கையை செலுத்துவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கிறோம்.

நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை
பிரதேச செயலரும், உத்தியோகத்தர்களும்
ஊழியர்களும்.

### கண்ணீர் அஞ்சலி

சிறந்த சமூக சேவையாளரும், கௌரவ கரைச்சி பிரதேசசபை உறுப்பினருமான சின்னையா தவபாலன் அவர்களின் அன்புத் தாயார்



**சின்னையா இராஜேஸ்வரி**

அவர்களின் மறைவையிட்டு கண்ணீரால் அஞ்சலி செய்கின்றோம்.

கண்டாவளை மண்ணதனில் காலடி வைத்தவரே!
கண்டவர் அனைவரையும் கலங்காமல் காத்தவரே!
நீர் - கண்மூடியதேன் - எம்மைக் கலங்கவைத்ததுமேன்

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கண்டாவளை.
(41335)(4.6.3)
சி.தயானந்தன்,
சி.பிரகாஸ், த.பகிந்தன்

### தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபலமான உணவகத்திற்கு Delivery boys தேவை.
பகுதிநேரம்/முழுநேரம் (Motorbike உடன் Driving Licence உள்ளவர்கள் விரும்பத்தக்கது.)
தொடர்பு:077 873 6700/077 201 7824
(50429)(3.6.4)

### கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம். அழையுங்கள்;
077 908 6737 Computer Repair
GUNAA BEST PC 52, Hospital Road, Jaffna.

### மரண அறிவித்தல்

**தம்பு இராசையா**



(ரயில் நிலைய ஓய்வுநிலை ஊழியர்)


அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு இராசையா நேற்றுமுன்தினம் (26.07.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற த்ம்பு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்துக்குமாரு - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கிருஸ்ணவேணியின் அன்புக் கணவரும் மஞ்சுளா, நிமலன், நகுலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகராசா, சுபாசினி, மீரா ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற செல்லம்மா, தங்கரத்தினம் மற்றும் இராசம்மா, காலஞ்சென்ற இராசதுரை மற்றும் சிவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சீவரத்தினம், இராசம்மா, சரஸ்வதி காலஞ்சென்ற இராசதுரை, சோமசுந்திரம், சின்னத்துரை குலசேகரம் ஆகியோரின் மைத்துனரும் மற்றும் கலைமகள், காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் இராசதுரையின் சகலனும் பத்மாகரன், கிருபராணி ஆகியோரின் சிறிய தந்தையும் றொபின்சி, அபிராமி, யஸ்வின், கிரிஸ்னி, விஜுஸ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.07.2014) செவ்வாய்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

A.V.றோட், அரியாலை, யாழ்ப்பாணம்.
(50414)
தகவல்: குடும்பத்தினர்.

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு
18.03.1936

உதிர்வு
28.06.2014

அமரர்

**ஆறுமுகம் துரைராசா**

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (28.07.2014) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்திகேட்டு நேரில்வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மூலமாக உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும், எம்மோடு நின்று உதவியவர்களுக்கும் மற்றும் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

புதுமடம், உடுவில் தெற்கு,
மானிப்பாய்.
(50432)(7.6.3)
குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
செல்வி சசிகலா சரவணை
அவர்களின் அன்புத் தந்தை

**சின்னட்டி சரவணை**

அவர்கள் 24.07.2014 வியாழக்கிழமை
சிவபதமடைந்தார்.
அன்னாரின் மறைவால் துயர்
அடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை
நீர்வேலி.
(49715)(4.8.3)
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**அமரர் மரியாம்பிள்ளை அருளேஸ்வரன்**



தோற்றம் 06.04.1954 — மறைவு 28.06.2014

யாழ். கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும்,
இந்தியாவில் திருச்சியை வதிவிடமாகவும்
கொண்டிருந்த அமரர் மரியாம்பிள்ளை
அருளேஸ்வரனின் 31ஆம் நாள் நினைவு

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - ராசமணியின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சூரியநாராயணப்பிள்ளை - திருப்பதியின் அருமை மருமகனும், மாலதியின் அன்புக் கணவரும், வருணன் - நித்தியாதேவி, சஞ்சீ - திலீப் அன்ரனி, தீபிக்கா ஆகியோரின் அன்புத்தந்தையும் - மாமனும், யோசிக்காவின் அருமைத் தாத்தாவும், பற்றிக் - சரோஜினி, பேர்சி - வாலாம்பிகை, ஜோய்ஸ் - காலஞ்சென்ற வென்டக்கோன், Rev.Frரெஜி ராஜேஸ்வரன், யோகேஸ்வரன் - சாந்தகுமாரி, அமிர்தினி - கிறிஸ்டிராஜ், ஷாமினி - செந்திநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் - மைத்துனனும், சியாமளா, நிலானி, மைதிலி, மார்க், வதனி, சுதர்சினி, பெனிட்டோ, சுவிவினி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், சுரேஸ், நிரஞ்சன், நிர்மலன், பவானி, அஜந்தா, அகிலன், ரமணன், நிறோஜன், வினோதன் ஆகியோரின் பாசமிகு மாமாவும் ஆவார்.

அன்னாரின் அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு வந்து உதவிகள் செய்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், மலர் மாலை சாத்தி, மலர் வளையம் அனுப்பியவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களிற்கும் மற்றும் எல்லா வழிகளிலும் உதவி செய்தவர்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேர்த்தி.
(50418)(45.3.6)

ஓம் விராட் விஸ்வ் ப்ரம்மனே நமஹ

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**செல்லையா நடராசா**
(பத்தர்)

தோற்றம் 07.02.1929
மறைவு 28.07.2012

திதி: தசமி (06.08.2014)

ஈராண்டுகள் சென்றதுவே வெகு விரைவில் மாறாது நின்றது உங்கள் நினைவுகள்
உங்கள் இழப்பினை ஈடுசெய்யவார்த்தைகள் இன்றித் தவிக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடையஇறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நாகலிங்க சுவாமிகள் வீதி,
சங்கானை.
குடும்பத்தினர்.
(49698) (45.6.3)

ஈரவிழிகளுடன்
ஆண்டுகள் ஐந்து..



**செல்வி. அமலின் குயிலினி மங்களதாஸ்**

துளிராய் 1986.04.05 — விதையாய் 2009.07.29

அன்புச் செல்வமே குயிலி
உன் அமைதிக்காகப் பறந்து
சென்றாயோ அம்மா!
நாம் எல்லோரும்
உன் நினைவில்
எம் அமைதி இழந்து
நித்தம் கலங்குகின்றோம்!
நாம் ஆறுதல் பெற நீ தரிசனம்
தரமாட்டாயோ அம்மா..

அன்னாரின் ஆத்மா என்றும் இறைவனோடு
மகிழ்ந்திருக்கவேண்டி 29.07.2014
செவ்வாய்க்கிழமை மு.ப. 7.00 மணிக்கு
புனித திரேசாள் ஆலயத்தில் திருப்பலி
ஒப்புக்கொடுக்கப்படும்.

இ.மங்களதாஸ்
இல.5, மருதடி வீதி, யாழ்ப்பாணம்
-குடும்பத்தினர்-

# பன்முக கட்டுமான தொகுதி பண்டத்தரிப்பில் திறப்பு விழா

பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் சமூக அபிவிருத்திக்கான பன்முக கட்டுமானத் தொகுதியின் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை பி.ப 3 மணியளவில் மறுமலர்ச்சி மன்றத்தின் புதிய உள்ளக கலை அரங்கில் இடம்பெறவுள்ளது.

மறுமலர்ச்சி மன்றத்தின் தலைவர் சு.யாதவன் தலைமையில் இடம்பெற வுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக சபாபதி அழகரத்தினமும் திருமதி தியாகராசா இராசதங்கமும் கலந்துகொள்வதுடன், வாழ்த்துரைகளை செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், பொறியியலாளர் மா. இராமதாசன், குழந்தை ம. சண்முகலிங்கம் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வின் பிரதான வைபவமாக மறுமலர்ச்சி மன்றத்தில் புதிதாக அமைக்கப்பட்ட சமூக அபிவிருத்திக்கான பன்முக கட்டுமானங்களான நவீன வசதிகளுடன் கூடிய உள்ளக கலை அரங்கம், திறந்தவெளி அரங்கம், சர்வ தேச தரம்வாய்ந்த பாலர் பாடசாலை, சிறுவர் விளையாட்டுத்திடல், விளை யாட்டு மைதானம், நீர்த்தாங்கி ஆகியன பிரதேச மக்களின் பயன்பாட்டுக்காக திறந்துவைக்கப்பட வுள்ளன. தொடர்ந்து மாண வர்களின் கலை நிகழ்வுகளும் மறுமலர்ச்சி மன்றத்தின் காத்தவராயன் சிந்துநடைக் கூத்தும் இடம்பெற வுள்ளன. (ஓ)

# முன்பள்ளி விளையாட்டு விழா

உரும்பிராய், ஜூலை 28

உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலைய முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நிலையத் தலைவர் த.பேரின்பநாயகம் தலைமையில் முன்பள்ளி புதிய மைதானத்தில் இடம்பெறும்.

இந்த விழவுக்கான பிரதம விருந்தினராக சர்வதேச லயன்ஸ் கழக மாவட்ட உப ஆளுநர் வைத்திய கலாநிதி வைதியாகராசா கலந்து கொள்வார். (ஓ)

# புதிய தலைவர்



இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வடக்குப் பிரிவுக்கான புதிய தலைவராக மல்லாகத்தைச் சேர்ந்த செல்லையா செல்வரட்ணம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (க)

# புதிய உதவிப் பொது முகாமையாளர்



இலங்கைவங்கி வட மாகாண புதிய உதவி பொது முகாமையாளராக வவுனியா அதிமேந்தரக் கிளையின் பிரதான முகாமையாளராகக் கடமை புரிந்த பாலரட்ணம் நந்தகுமார் பதவி உயர்வு பெற்று நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யாழ்/மத்திய கல்லூரியின் பழைய மாணவராவார்.

2004 இல் இலங்கை வங்கி தனது அனைத்துக் கிளைகளையும் ஒரே வலையமைப்பில் உருவாக்கப்பட்ட விசேட ஆளணியின் குழுத் தலைவர்களுள் ஒருவராகச் செயற்பட இவர், சிறந்த வளவாளருமாவார். விசேடமாக தமிழ், , ஆங்கில , சிங்கள மொழி மூலமான ஊழியர் உள்ளக பயிற்சி நெறிகள் விரிவுரையாளராகவும் விளங்குகின்றார். (க)

# சமய சந்நிதிகளில்

தென்மராட்சி, ஜூலை 28

மறவன்புலோ கலையாபரணன் கோட்டை ஸ்ரீ வள்ளி வேலவன் ஆலய அலங்காரத் திருவிழா நாளை மறுதினம் புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் இடம்பெறும். ஓகஸ்ட் 11 ஆம் திகதி திருக்கல்யாணத் திருவிழாவுடன் நிறைவுபெறும். சிவஸ்ரீ கு.காண்டீபக் குருக்கள் தலைமையில் திருவிழா கிரியைகள் இடம்பெறும். (ஓ-9)

◆◆◆

பனிப்புலம் ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலய மஹோற்சவம் கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. 16 தினங்கள் நடைபெறும் மஹோற்வசத்தில் நாளை தேர்த்திருவிழா நடைபெறும். மறுநாள் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்த உற்சவத்துக்காக சுவாமி சுழிபுரம் சம்புத்துறை கடற்கரைக்கு எழுந்தருளி தீர்த்தம் நடைபெறும். எதிர்வரு ம் ஓகஸ்ட் முதலாம் திகதி இடம்பெறும் பூங்காவனத் திருவிழாவுடன் உற்சவம் நிறைவு பெறும். (க-28)

# மாடுகளை கால்நடையாக கொண்டு சென்ற நபருக்கு அபராதம்

தென்மராட்சி, ஜூலை 28

வீதியில் மாடுகளை சித்திரவதைப்படுத்தும் வகையில் கால்நடையாக கொண்டு சென்ற நபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09.05.1967 — மறைவு 28.07.2011

**அமரர் கதிரவேலு கிறிஸ்ரோப்பர்**
(அரசினர் வைத்தியசாலை ஊழியர் - குருநகர்)



மூன்று ஆண்டுகள் ஆனதுவோ
உங்கள் இனிய முகம் கண்டு
ஆறவில்லை எம் இதயம்.
நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் இனிய முகம் காணாமல்

பிரிவால் வாடும்: மனைவி - தேவமரி,
பிள்ளைகள் - சோழன், இலக்ஷன், நிஸ்சாந்,
தாய் - இராசம்மா,
சகோதரர்கள் - இந்திராணி, ஜெனிட்டா, விஜேந்திரன்
மற்றும் - மருமக்கள் உறவினர்கள்.

நாவற்குழி சந்தி, நாவற்குழி.

## 16 ஆம் வருட நினைவு நாள் கவிதாஞ்சலி

தோற்றம் 05.05.1968
தோற்றம் 10.04.1950
மறைவு 25.07.1998



அ.இந்துமதி
திதி: துதியை
கி.சிவகெங்கா

கடல்நீர் அலைகளில் சென்றீர்கள் எம் நெஞ்சலைகளோ ஓயவில்லை.
காலங்கள் பதினாறு கடந்தன–எம் காயங்கள் இன்னும் ஆறவில்லை
விதியென நொந்து கொள்வோம் உங்கள் ஆத்மா சாந்தியடைக!

என்றும் உங்கள் நினைவில் வாழும்
ஆ.தி.அருணகிரிராஜா
குடும்பத்தினரும்

கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.
(50402)(க.6.4)

## மரண அறிவித்தல்கள்

### கிருஸ்ணர் சிவகுரு



உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணர் சிவகுரு 26.07.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.07.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்திலிருந்து பி.ப.3.00 மணியளவில் புனித மிக்கேல் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு, இரங்கல் திருப்பலியின் பின்னர் புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
(50423)(4.6)

தகவல்:
ஜெயறாஜினி (பவுண்-மகள்),
நவரத்தினராசா (சொக்கன்- மருமகன்)

### திருமதி இரத்தினவடிவு நல்லையா



மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினவடிவு நல்லையா நேற்று (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னு நல்லையாவின் அன்பு மனைவியும், சிவனேஸ்வரி (சாந்தி), ஞானேஸ்வரி(ஈஸ்வரி), தேவமனோகரி (ஜெயா), யோகேஸ்வரன் (மோகன்), யோகமலர் (நந்தினி), லிங்கேஸ்வரன் (கண்ணன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.07.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(50424)(4.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்துக்கு உதவி

அம்பாறை மாவட்டத்திலுள்ள, புனர்வாழ்வு பெற்ற விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி கேணல் பி.எச்.என். சிறிசாந்த பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கமைய வாழ்வாதார உதவிகள் வழங்குவது தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றுள்ளது.

காரைதீவு, ஆலையடிவேம்பு, திருக்கோவில் ஆகிய பிரதேசங்களில் உள்ள புனர்வாழ்வு பெற்ற முன்னாள் விடுதலைப் போராளிகள் நன்மை பெறும் வகையில் அம்பாறை விகாராதிபதி கிந்திந்திரிய தேரரின் வேண்டுகோளுக்கமைய இந்த நடவடிக்கைகள் இராணுவத்தின் 242 ஆவது படைப்பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மீன்பிடி தொழிலில் ஈடுபடும் முன்னாள் விடுதலைப் போராளிகளுக்கு மாத்திரம் இதுவரை பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இவர்களுக்கான மின்பிடி உபகரணங்கள் எதிர்வரும் நாள்களில் மட்டக்களப்பில் வைத்து வழங்கப்படவுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)



களுவாஞ்சிக்குடி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவத்தின் இறுதி நாள் ஆடி அமாவாசை தீர்த்தம் களுவாஞ்சிகுடி சமுத்திரத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் பெருந்தொகையான பக்தர்கள் கலந்துகொண்டு அருள் பெற்றனர். (ற)



கட்டாக்காலிகளாக திரியும் கால்நடைகள்

## கட்டாக்காலிகளை பிடிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்

மட்டக்களப்பு, ஜூலை 28

மண்முனை தென் எருவில் பற்றுப் பிரதேசத்தில் கட்டாக்காலியாகத் திரியும் மாடுகளைப் பிடிக்கும் செயற்பாடு நேற்றுமுன்தினத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபையின் செயலாளர் திருமதி.யோகேஸ்வரி வசந்தகுமாரன்.

மண்முனை தென் எருவில் பற்றுப் பிரதேச எல்லையினுள் இரவு மற்றும் பகல் வேளைகளிலும் கட்டாக்காலியாக மாடுகள் திரிகின்றன என்றும், அவற்றால் வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன என்றும் தொடர்ச்சியாக தனக்கு முறைப்பாடுகள் கிடைத்த வண்ணமுள்ளன என்றும், அதையடுத்தே இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை மூலம் கட்டாக்காலியாகத் திரியும் மாடுகள் களுவாஞ்சிக்குடி பொலிஸாரின் ஒத்துழைப்புடன் பிரதேச சபை ஊழியர்களின் உதவியுடன் பிடிக்கப்படுகின்றன.

இவ்வாறு ஒரு மாடு பிடிப்பவருக்கு 500 ரூபாய் வழங்கப்படவுள்ளதோடு, ஒரு மாட்டுக்கு 3,000 ரூபாய் அபராதம் மாட்டு உரிமையாளரிடமிருந்து அறவிடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# மக்களின் பங்கேற்பை வலியுறுத்தி பயிற்சிகள்

### உள்ளூராட்சி மன்ற நடவடிக்கைகளில்

திருகோணமலை, ஜூலை 28

உள்ளூராட்சி மன்ற நடவடிக்கைகளில் மக்களின் பங்கேற்பையும், பங்குபற்றுதல்களையும் வலியுறுத்தும் முகமாக விழிப்புணர்வுப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன என்று குச்சவெளிப் பிரதேச சபையின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரும் வளவியலாளருமான வசந்தி ஜெயராஜா தெரிவித்துள்ளார்.

திருகோணமலை, மாவட்ட சர்வோதய பயிற்சி நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பயிற்சி நெறியின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

**பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் தொடர்பாக ஏற்படும் வன்முறைகளுக்கு சுமுகத் தீர்வு கண்டு வன்முறைகளைக் குறைப்பதற்கு ஏற்ற வகையிலமைந்த, பெண்கள் விழிப்புக் குழு பற்றிய விடயமும் பயிற்சி நெறியில் பயிற்சிவிக்கப்படுகின்றது.**

உள்ளூராட்சியின் விசேடத்துவம், பங்கேற்பின் அவசியம், சட்டமும் ஒழுங்கும், வினைத்திறனும் விளைதிறனும், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக் கூறல், சமத்துவம், அனைவரையும் உள்வாங்கும் தன்மை, மக்கள் பங்கேற்பிற்கான தடைகள் போன்ற விடயதானங்களிலேயே இந்தப் பயிற்சிகள் இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்;

"அபிவிருத்தித் திட்டங்களில் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் தொடர்பாக ஏற்படும் வன்முறைகளுக்கு சுமுகத் தீர்வு கண்டு வன்முறைகளைக் குறைப்பதற்கு ஏற்ற வகையிலமைந்த, பெண்கள் விழிப்புக் குழு பற்றிய விடயமும் பயிற்சி நெறியில் விசேடமாக பயிற்சிவிக்கப் படுகின்றது"- என்று தெரிவித்தார். (ற)

## மாணவருக்கு மூக்கு கண்ணாடி

திருகோணமலை, ஜூலை 28

கல்வி அமைச்சு சுகாதார அமைச்சுடன் இணைந்து 'அனைவருக்கும் பார்வை' என்னும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்தத் திட்டத்தின் கீழ், திருகோணமலை கல்வி வலயத்தில் பரிசோதிக்கப்பட்ட முதல் தொகுதி மாணவர்களுக்கு கடந்த வெள்ளிக்கிழமை மூக்கு கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு திருகோணமலை வலயக்கல்வி அலுவலகத்தால் ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

அமெரிக்க தொண்டு நிறுவனமொன்றின் அனுசரணையில் நாட்டிலுள்ள அரச பாடசாலை மாணவர்களுக்கு இலவச கண்பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு பார்வை குறைப்பாடுடையவர்களுக்கு இலவசமாக மூக்கு கண்ணாடிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்வின் போது சல்லி அம்பாள் வித்தியாலயம், சாம்பல் தீவு தமிழ் வித்தியாலயம், பெருந்தெரு விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம், ஸ்ரீசண்முகா இந்துமகளிர் கல்லூரி என்பனவற்றைச் சேர்ந்த 102 மாணவர்களுக்கு மூக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன. (ற)

## பொலிஸ் உத்தியோகத்தருக்கு வைத்திய பரிசோதனைகள்

மட்டக்களப்பு, ஜூலை 28

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமையாற்றிவரும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் உடல் நிலையை அறிந்து கொள்ளும் பொருட்டு நடத்தப்பட்ட வைத்திய பரிசோதனை நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மாநகர சபையின் நகர மண்டபத்தில் நடைபெற்றது.

பொலிஸ் வைத்தியசாலையால் நடத்தப்பட்ட இந்த வைத்திய பரிசோதனை நடவடிக்கையை கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நந்தன முனசிங்க ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது, பொலிஸ் வைத்திய சாலையின் வைத்திய அதிகாரிகளால் பொலிஸாரின் இரத்த மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டதுடன் ஏனைய வைத்திய பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. அதில் சுமார் 1500 பொலிஸார் கலந்துகொண்டனர். (ற)

## விபத்தில் இருவர் காயம்

மட்டக்களப்பு மாவட்டம் ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள தன்னாமுனையில் இடம்பெற்ற வீதி விபத்தில் பெண்ணொருவர் உட்பட இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

அவர்கள் இருவரும் தற்போது மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமடைந்த பெண் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பதுளை வீதி - கோப்பாவெளியில் வசிக்கும் முருகுப் பிள்ளை வள்ளிப்பிள்ளை (வயது- 48) என்ற பெண்ணே படுகாயமடைந்தவராவார். (ற)

## சிரமப்படும் பெண்களுக்கான பயிற்சிப்பட்டறை மட்டக்களப்பில்



பயிற்சிப் பட்டறையில் விளக்கமளிக்கும் போது

மட்டக்களப்பு, ஜூலை 28

அகில இலங்கை பெண்கள் சங்கமும் மெதடிஸ்த பெண்கள் திருச்சபையும் இணைந்து ஏற்பாடு செய்த சிரமப்படும் பெண்களுக்கு உதவிசெய்யும் முகமாக பயிற்சிப்பட்டறை கடந்த வெள்ளிக்கிழமை முதல் நேற்றுவரை நடைபெற்றது.

மட்டக்களப்பு பிள்ளையாரடியிலுள்ள மன்றேசா தியான இல்லத்தில் நடைபெற்ற இந்தப் பயிற்சிப் பட்டறை பெண்களது மனப்பாங்குகளை பகிர்ந்து கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்து.

இந்தப் பட்டறையில் ஜேர்மனி, ருவாண்டா ஆகிய நாடுகளிலிருந்தும், இலங்கையின் கொழும்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்தும் 55 பெண் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

'இலங்கையில் இடர்களால் பாதிக்கப்பட்டு சிரமங்களை அனுபவிக்கும் பெண்களையும் அவர்களது சிரமங்களையும் இனங்கண்டு அவற்றுக்கான ஆறுதல்களை உருவாக்குவது இந்தச் செயற் திட்டத்தின் நோக்கமாகும்' என அகில இலங்கை பெண்கள் சங்கத்தின் மேற்பார்வையாளர் ஜெயந்தி டேவிட், செயலாளர் ராஜினி ஜெகசோதி ஆகியோர் தெரிவித்தனர். (ற)

## கிருமி தொற்று; மாத்தளை வைத்திசாலையின் பிரிவு மூடப்பட்டது

கொழும்பு, ஜூலை 28
விஷக் கிருமி தொற்று காரணமாக மாத்தளை ஆதார மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவை தற்காலிகமாக மூடுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். அதனை அடுத்து மாத்தளை மருத்துவமனையில் சத்திரசிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நோயாளர்கள் கண்டி, பேராதனை, கம்பளை மற்றும் தம்புள்ளை மருத்துவமனைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். மாத்தளை மருத்துவமனையின் பணிப்பாளர் அர்ஜுன திலகரட்ன இந்தத் தகவலைத் தெரிவித்தார்.
அதேவேளை, சத்திரசிகிச்சை பிரிவில் உள்ள உபகரணங்களை செயற்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும் ரசாயன திரவங்கள் தீர்ந்தமை காரணமாகவே அவசர சிகிச்சை பிரிவு மூடப்பட்டது என்று சுகாதார தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக அகில இலங்கை தாதியர் சங்கத்தின் தலைவர் காமினி குமாரசிங்க தெரிவித்துள்ளார். (ற)

## யுவதி துஷ்பிரயோகம் சந்தேக நபர்கள் கைது

கொழும்பு, ஜூலை 28
முந்தல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடப்பு பகுதியில் சில வாரங்களுக்கு முன்னர் யுவதி ஒருவர் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
குறித்த யுவதி தமது காதலனை சந்திப்பதற்காக உடப்பு பகுதிக்கு சென்றிருந்தபோது இந்த மாதம் இரண்டாம் திகதி துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டார் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
இந்த துஷ்பிரயோக சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவந்த பொலிஸார் உடப்பு பிரதேசத்தில் நான்கு சந்தேகநபர்களை நேற்றுக் கைது செய்துள்ளனர்.
இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரண்டு சந்தேகநபர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.
சந்தேகநபர்கள் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ற)

## தொடர்ச்சிகள்

### பொதுவேட்பாளர்

அரசு உத்தேசித்துள்ளது. இந்நிலையில், இந்தத் தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்க எதிர்க்கட்சிகள் தயாராகி வருகின்றன.
இதன் ஒரு கட்டமாக 'நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்கவேண்டும்' என்ற பெயரில் கடந்த வியாழக்கிழமை கொழும்பு புதிய நகர மண்டபத்தில் கோட்டை நாகவிகாராதிபதி வண. மாதுலுவாவே சோபித தேரரின் தலைமையில் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது. அதில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா உட்பட எதிர்க்கட்சிகளின் முக்கியஸ்தர்களும், முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவும் கலந்து கொண்டனர்.
இந்தக் கூட்டத்தின் பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக முன்னாள் பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவின் பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. பொதுவேட்பாளர் பட்டியலில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இருந்தனர். எனினும் ஷிராணி பண்டாரநாயக்கா எவ்வித அரசியல் பிரவேசமும் இன்றி பக்கச்சார்பற்ற வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்படுவது உசிதம் எனவும், அவரது பதவி நீக்கத்துக்குப் பிறகு இதுவரை அவர் எந்தவொரு அரசியல் கட்சியிலும் சேராமல் இருப்பது அவருக்குரிய சாதகமான நிலைமை எனவும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பலரும் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர் என்றும் கூறப்படுகின்றது. (ற-சி)

### அகதிகள்

சிறுவர்கள், தாடி வைத்த ஆண்கள், சாரியணிந்த பெண்கள், ஆகியோர் வரிசையாக செல்கையில் பாதுகாப்பு அதிகாரிகளும், குடிவரவுத் திணைக்கள அதிகாரிகளும் அவர்களை மற்றவர்கள் பார்க்க முடியாதபடி மறைக்க முயற்சித்தனர்.
ஆஸ்திரேலிய விமான நிலையத்தில் புகலிடக் கோரிக்கையாளர்கள் 17 பேருடன், சுமார் 140 பேர் இருந்துள்ளனர். இவர்கள் எங்கு அழைத்துச் செல்லப்படுவார்கள் என்பது தெளிவில்லை.
மூன்றாவது விமானம் ஓடுபாதையின் ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த விமானத்தின் வால் பகுதியில் ஆஸ்திரேலிய கொடி பொறிக்கப்பட்டிருந்தது. இந்த விமானம் மாலை 5.30 அளவில் புறப்பட உள்ளதாக தெரிய வருகிறது. இந்தப் புகலிடக் கோரிக்கையாளர்கள் ஓசன் புரடெக்டர் கப்பலில் இருந்து சிறிய சுங்கப்படகுகள் மூலம் காலை 7.30 அளவில் கரைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்த மக்களின் உடைமைகள் பிளாஸ்டிக் பைகளில் இடப்பட்டு அருகிலுள்ள இறங்குதுறையில் குவிக்கப்பட்டிருந்தன. பைகளுக்குள் இருந்த துவாய்களும், ஆடைகளும் தெளிவாகத் தெரிந்தன.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

### ஜனாதிபதி

அதற்கு ஆலோசனை வழங்கவென சர்வதேச நிபுணர்கள் மூவரை நியமித்தது. அதையடுத்தே எரிக் சொல்ஹெய்ம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
"போர்க்குற்றச் செயல்கள் மற்றும் காணாமற்போதல் தொடர்பிலான உள்நாட்டு விசாரணைகளில், தேவை ஏற்படின் என்னால் பங்களிப்புச் செய்யமுடியும்"- என்று சொல்ஹெய்ம் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

### தீவிரவாதக்

டதோ, அவ்வாறே இதுவும் மேற்கொள்ளப்படும்.
இலங்கையிடம் உண்மைகளைக் கண்டறியும் திறன் உள்ளது. இங்கு மீண்டும் பயங்கரவாதம் ஏற்படுத்தப்பட்டால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.
வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புகள் இலங்கையில் செயற்படுவது தொடர்பில் இராணுவமோ அல்லது பாதுகாப்புப் புலனாய்வுப் பிரிவுகளோ எந்தத் தகவல்களையும் பெறவில்லை"- என்று தெரிவித்துள்ளார். (ற)

### தரமற்ற

வன்கூவர் விமான நிலையங்கள் முன்னிலை வகிக்கின்றன. ஐரோப்பாவில் கோப்பன்ஹேகன் விமான நிலையமும் ஆசியாவில் தென்கொரிய விமான நிலையமும் முன்னிலை வகிக்கின்றன.
ஆசியாவின் திறமையற்ற விமான நிலையங்களாக ஜப்பானின் ஹனசாய் விமான நிலையம் நகோயா விமான நிலையம், இலங்கையின் பண்டாரநாயக்க விமான நிலையம் ஆகியன மதிப்பிடப்பட்டுள்ளன. (ஐ)

### சு.கவை

தற்கு காரணமான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களை பலப்படுத்துவது அவசியம் என அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.
குறிப்பிட்ட குழுவினர் அடுத்த நாடாளுமன்ற தேர்தலிற்கு முன்னர் வெளிப்படையாக செயற்படுவார்களா என்பது தெரியாத அதேவேளை இவர்கள் குறித்த விபரங்கள் ஜனாதிபதிக்கு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### அடிக்கடி

இதற்கு பதில் கூற வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.
இதன்படி வவுனியா மாவட்ட மின்சார சபை தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்தியவேளை, பிரதான பொறியியலாளர் தற்போது அலுவலகத்தில் இல்லை என்று அங்கு கடமையிலிருந்த ஒருவர் பதில் அளித்தார். கடந்த 3 தினங்களாக வவுனியா மின் பொறியியலாளருடன் தொடர்பை ஏற்படுத்த முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-14)

### இரண்டு

வருகின்றன - என்றார்.
மத்திய கல்லூரி அதிபர் மு.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-18)

### ஊடகவியலாளர்

வெளிக்கொண்டுவருவதில் ஊடகவியலாளர்களின் பங்கு அரசுக்கு பேரதிர்ச்சியாக உள்ளது எனவே அவர்களை முடக்குவதன் ஊடாக உண்மைகளை மறைக்க முடியும் என்று அரசு எண்ணுகிறது.
இது எக்காலத்திலும் சாத்தியமாகாது உண்மைகள் எப்படியாவது வெளிவந்தே தீரும். எனவே ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறைக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புச் சார்பாக நான் வன்மையான கண்டனத்தைத் தெரிவிக்கிறேன்.
ஒரு நாட்டின் ஜனநாயக குரலாக செயற்படும் ஊடகக் குரலை அடக்க முற்படுபவர்களுக்கு எதிராக தமிழ் தேசியக் கூட்டமைப்பு சர்வதேசத்துடன் இணைந்துகுரல் கொடுக்கும் - என்றுள்ளது. (ஐ -56)

### வைத்தியசாலை

யில் நோயாளர்களைப் பார்வையிடச் சென்றவர்களைத் தாக்கி காயமேற்படுத்திய குற்றச்சாட்டில் வைத்தியசாலையில் பணியில் ஈடுபட்டிருக்கும் எல்.ஆர்.டி.சி நிறுவனத்தைச் சேர்ந்த 6 பேர் பொலிஸாரால் யாழ். நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களில் காயமடைந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் உள்ளடங்குவர். ஆரம்ப விசாரணையின் பின்னர் அவர்களை ஆள்பிணையில் விடுவித்தது நீதிமன்று.
வைத்தியசாலை பாதுகாப்பு ஊழியர்கள் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில் இவை குறித்து வைத்தியசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டபோது:
சிலர் உரிய முறையில் நோயாளர்களுடன் நடந்து கொள்ளவில்லை என்று முறைப்பாடுகள் கிடைக்கின்றன. அதனை ஏற்றுக் கொள்கிறோம். வைத்தியசாலையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக உள்ளவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி குறித்த பாதுகாப்பு நிறுவனத்துக்கு ஏற்கனவே அறிவித்துள்ளோம்.
வைத்தியசாலையில் பாதுகாப்புப் பணியில் உள்ளவர்களை நியமிப்பது குறித்து நிறுவனத்தினூடான் முடிவு செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)


**புலமைச்சுடர் நடத்தும் விசேட இலவசக் கருத்தரங்கு**

இடம்: வலி.தென்மேற்குப் பிரதேசசபை கலாசார மண்டபம், மானிப்பாய்.
காலம்: நாளை (29.07.2014) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி
வளவாளர்: து.திலீப்குமார்
ஏற்பாடும் அனுசரணையும்
வலி.தென்மேற்குப் பிரதேச இளைஞர்கழகச் சம்மேளனமும் யாழ். றோட்டரிக் கழகமும்
குறிப்பு: இறுதிப் பரீட்சையையொத்த மாதிரி வினாத்தாள் மாணவர்களுக்கு பரீட்சையாக நடத்தி வழிகாட்டல் வழங்கப்படும்.
அனைத்து மாணவர்களையும் பங்குபற்றி பயனடையுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
தொடர்புகளுக்கு: 0772247419, 0714449447



பழைய மாணவர் சங்கம்
புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை

**அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு முடிவுகள்**

எமது கல்லூரி மாணவர்களின் கல்வி அபிவிருத்தி நிதிக்காக எமது சங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டு குலுக்கல் 26.07.2014 ஆம் திகதி நடைபெற்றது. சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு
1 ஆம் பரிசு ரூபா 50,000 -3586  2 ஆம் பரிசு ரூபா 25,000 -18870
3 ஆம் பரிசு ரூபா 15,000 -1660  ஆறுதல் பரிசுகள் - ரூபா 2,000 -
2546, 13265,14350, 11422, 1031
அதிர்ஷ்டசாலிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் 03.08.2014 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலையில் நடைபெறும்.
தலைவர்
பழைய மாணவர் சங்கம், புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை.


சிவமயம்

**தசாக கிருஹயக்ஞ அழைப்பிதழ்**



அன்புடையீர் !
நிகழும் ஜய வருஷம் ஆடி மாதம் 03 ஆம் நாள் (19.07.2014) சனிக்கிழமை இறைபதம் பற்றிய எமது குடும்பத் தலைவி ஸ்ரீமதி
மல்லிகாதேவி அம்மா நாகராஜசர்மா
அவர்களின் தசாதி கிருஹயக்கும் வரையிலான நிகழ்வுகள் பின்வரும் தினங்களில் அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளன.
* ஆடி 12 ஆம் நாள் (28.07.2014) திங்கட்கிழமை காலை 7.30 மணி தசாகம்
ஆடி 13 ஆம் நாள் (29.07.2014) செவ்வாய்க்கிழமை ஏகோதிஷ்டம் மாசிகம்
* ஆடி 14 ஆம் நாள் (30.07.2014) புதன் கிழமை சபிண்டிகரணம்
* ஆடி 15 ஆம் நாள் (31.07.2014) வியாழக்கிழமை கிருஹயக்கும் சமாராதனை (மதியபோசனம்)
மேற்படி தினங்களில் நடைபெறும் ஆத்மசாந்தி கிரியைகள், பிராத்தனை, சமாராதனை (மகேஸ்வரபூசை) நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.
வீரபத்திரர் கோவிலடி,
துன்னாலை மத்தி
கரவெட்டி.
பிரம்மஸ்ரீ யோ. நாகராஜசர்மா
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா சின்னத்துரை



மாசீசன்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும் மார்கம் ரொரண்ரோ கனடாவை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சின்னத்துரை நேற்று(27.07.2014) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அருமைப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் சோதீஸ்வரியின் (கனடா) அன்புக் கணவரும் வள்ளியம்மை, காலஞ்சென்ற வர்களான சின்னத்தம்பி, செல்வதி மற்றும் இரத்தினசிங்கம் (பரந்தன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற குணநேசன் மற்றும் ஜீவநேசன் (கனடா), சிவதர்சினி (கனடா), மயூரன் (கனடா), சுகந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் அகல்யா (கனடா), பிரதீபன் (கனடா), யாழினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், தங்கம்பிள்ளை, சகுந்தலா, வன்னி யசிங்கம் மற்றும் புனிதவதி (கனடா), அம்பிகாவதி (கனடா), தர்மநிதி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆத்மிகா, துவாரகா, யோசிதா, யோசிதா, அபினா, ஜஸ்சிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

14, ஐயனார் வீதி,
வண்ணார்பண்ணை.
தொ.பே.: 021 221 9916, 0777122084

தகவல்: Dr. சிவேந்திரன்
(மருமகன்).



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இந்து மாமன்றத்தால் விசேடமாக வெளியிடப்பட்ட ஆடி அமாவாசை சுவாமி விபுலானந்தர் நினைவுச் சிறப்பிதழாக செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் கீரிமலையில் அமைந்துள்ள இந்து மாமன்ற மண்டபத்தில் வெளியீடு நடைபெற்றது. முதல் பிரதியை க.திருநீலகண்டன் வெளியிட்டு வைக்க அதனை நல்லை குரு முதல்வர் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து சிறப்பு பிரதிகளை டாக்டர் எஸ்.தனபால, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர் தன், மாவை ஆதீன கர்த்தா பேரரசு எஸ்.இரத்தின சபாபதிக் குருக்கள், சு.பரமநாதன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். (வ-86)

# வடக்கில் உள்ளூரில் இறக்கப்பட்ட 11 லட்சம் போத்தல் கள்ளு அழிப்பு

## அதேசமயம் செயற்கைக் கள்ளின் விற்பனை அமோகம்

அச்சுவேலி, ஜூலை 28

வடக்கு மாகாணத்தில் உள்ளூரில் இறக்கப்பட்ட 11 லட்சத்து 36 ஆயிரத்து 443 போத்தல் கள் நிலத்தில் ஊற்றி அழிக்கப்பட்டுள்ளது. அதே வேளையில் வெளி மாவட்டங்களில் தயாரிக்கப்பட்ட செயற்கை கள் 30 லட்சத்து 53 ஆயிரத்து 11 போத்தல் யாழ்.மாவட்டம் தவிர்ந்த ஏனைய 4 மாவட்டங்களிலும் கடந்த வருடம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதனை பொருத்தமான முறையில் தவிர்த்து உள்ளூர் சீவல் தொழிலாளர் கள் உற்பத்தியை பாதிப்பில்லாத வகையில் மேம்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு கோரிக்கை விடுத்தார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி.

வடக்கு மாகாணத்தில் செயற்படும் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கள் உற்பத்தி மற்றும் வெளி மாகாண செயற்கை கள் விற்பனை தொடர்பாக மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி வெளியிட்டுள்ள சட்டபூர்வமான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு மாகாணத்தில் 38 பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்கங்கள் செயற்படுகின்றன. யாழ்.மாவட்டத்தில் 19 சங்கங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் 03 சங்கங்களும், வவுனியா மாவட்டத்தில் 03 சங்கங்களும், மன்னார் மாவட்டத்தில் 04 சங்கங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 09 சங்கங்களும் செயற்படுகின்றன.

இந்தச் சங்கங்களில் யாழ். மாவட்டம் தவிர ஏனைய சங்கங்கள் வெளி மாகாணங்களில் செயற்கையாக தயாரிக்கப்பட்ட கள்ளை பெருமளவில் விற்பனை செய்கின்றன. அதே நேரம் அந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் பனை, தென்னை மரங்களில் இருந்து இறக்கும் கள் அழிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில் கடந்த வருடம் 30 லட்சத்து 53 ஆயிரத்து 11 போத்தல் செயற்கை கள்விற்பனைசெய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் 13, 15, 197 போத்தல்கள் -
முல்லைத்தீவு மாவட்டத்தில் 699,399 போத்தல்கள் -
வவுனியா மாவட்டத்தில் 991, 171 போத்தல்கள் -
கிளிநொச்சி மாவட்டத்தில் 47, 244 போத்தல்கள் -
விற்பனை செய்யப்பட்டுள்ளது. இது உடல் நலத்துக்கு தீங்கானது . அத்துடன் அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் இயற்கையான கள் 11 லட்சத்து 36 ஆயிரத்து 443 போத்தல்கள் கடந்த வருடம் அழிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 39,12 37 போத்தல்கள் -
யாழ்.மாவட்டத்தில் 36,0774 போத்தல்கள் -
முல்லைத்தீவு மாவட்டத்தில் 29,8287 போத்தல்கள் -
மன்னார் மாவட்டத்தில் 86, 135 போத்தல்கள்
யாழ்.மாவட்டத்தில் • இந்த வருடம் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மூன்று மாதங்களில் மட்டும் 2 லட்சத்து 24 ஆயிரத்து 703 போத்தல் கள் அழிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-11)

# நாட்டுக்குள் வரும் படகு அகதிகளை தடுக்கவே நடுக்கடலில் விசாரணை

## ஆஸ்திரேலிய பிரதமர் விளக்கம்

சட்டவிரோத அகதிகள் நாட்டுக்குள் வருவதைத் தடுப்பதற்காகவே 157 இலங்கை அகதிகளையும் நடுக்கடலில் தடுத்து வைத்து, விசாரணை செய்ததாக ஆஸ்திரேலிய பிரதமர் டொனி அபாட் தெரிவித்துள்ளார்.



டொனி அபாட்

இதுதொடர்பில் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை தாம் ஏற்கப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் சர்வதேச மற்றும் தமது நாட்டு சட்ட முறைகளின் அடிப்படையிலேயே படகு அகதிகள் விடயத்தை அணுகுவதாக அபாட் இன்று ஊடகவியலாளர்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

நடுக்கடலில் தடுக்கப்பட்ட படகில் இருந்த 157 பேரில் பெரும்பாலானோர் இலங்கை தமிழர்களாக இருக்கலாம்.

தற்போது கென்பராவுக்கு அழைத்து வரப்படும் அவர்கள், அங்கு தங்க வைக்கப்படுவர் என்று அபாட் கூறினார்.

மனித கடத்தல்காரர்களால் ஆஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலம் அழைத்து வரப்படும் அகதிகள், தாம் சட்ட விரோதமாகவே அழைத்து வரப்படுவதை உணர வேண்டும்.

இந்தநிலையில் படகுகள் மூலம் சட்டவிரோதமாக வரும் எவரும் ஆஸ்திரேலியாவில் நிரந்தரமாகத் தங்க வைக்கப்படமாட்டார்கள் என்றும் அபோட் குறிப்பிட்டார்.

கடந்த செப்ரெம்பரில் பதவிக்கு வந்த அபோட், அகதி படகுகளை நிறுத்தப்போவதாக உறுதியளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## படகு மூலம் அகதிகளை ஆஸிக்கு அனுப்பிய மேலும் இருவர் கைது

சென்னை, ஜூலை.28

இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை ஆஸ்திரேலியாவுக்கு கடத்திய சந்தேகத்தின் பேரில் இருவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுச்சேரி பொலிஸ் சீ.பி.-சீ.ஐ.டி. பிரிவினர் குறித்த இருவரையும் கைது செய்துள்ளனர். புதுச்சேரியிலிருந்து படகு மூலம் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு 157 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை படகு மூலம் அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுத்தவர்களே கைது செய்யப்பட்



டுள்ளனர்.

குறிஞ்சிப்பாக்கத்தைச் சேர்ந்த ராஜீ மற்றும் வாம்பாகீர் பாளையத்தைச் சேர்ந்த மான் ஜினி ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் படகு உரிமையாளர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆஸ்திரேலிய குடிவரவு குடியகல்வு அதிகாரிகளின் தகவல்களுக்கு அமைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நீதிமன்றில் முன்னிலை செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கை அகதிகள் சென்ற படகின் உரிமையாளர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் முன்னதாகவும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (வ)

# தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும்

## இலங்கையிடம் இந்தியா வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 28

இருதரப்பு வர்த்தகத்தில் முன்னேற்றம் ஏற்படுவதற்கு, முதலில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண் டும் என்று இலங்கையிடம் இந்தியா கூறியுள்ளது.

சிங்கப்பூரில் நடைபெற்ற 'பிரதமர் மோடி அரசின் கட்டாயங்களும் சவால்களும்' என்ற தலைப்பிலான கருத் தரங்கில் கலந்து கொண்ட பாரதீய ஜனதா கட்சியின் வெளிவிவகாரக் கொள்கைப் பிரிவின் தேசிய அமைப்பாளர் கலாநிதி சேஷாத்ரி சாரி, பிரிஜ செய்தி நிறுவனத்திடம் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையிலான வர்த்தகத்தில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்று விரும்பினால், தமிழர் பிரச்சினைக்கு முதலில் தீர்வு காண வேண் டும் என்று நாம் இலங்கைக்கு கூறியுள்ளோம் என்று தெரிவித்துள்ளார். (வ)

# இலங்கைக்கு எதிரான விசாரணை முறையாக நடைபெற இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும்

## முன்னாள் அமைச்சர் வாசன் வலியுறுத்து

இலங்கைக்கு எதிரான விசாரணை முறையாக நடைபெற இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்னாள் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:-

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல் குறித்து கடந்த ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் போது ஐ.நா. சபையில் கடந்த மார்ச் மாதம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விசாரணைக் குழு அமைக்கப்பட்டது.

ஐ.நா. சபையின் அதிகாரி தலைமையில் அமைக்கப்பட்ட இந்த குழுவை இலங்கையில் விசாரணை நடத்த அனுமதிக்க முடியாது என்று இலங்கை அரசு அறிவித்திருந்தது ஏற்புடையதல்ல.

இலங்கைக்கு எதிரான மனித உரிமை மீறல் குறித்த விசாரணையை இந்தியாவில் நடத்தும் நோக்குடன் இந்திய அரசுக்கு ஐ.நா. விசாரணைக் குழு வேண்டுகோள் விடுத்திருந்தது. இதனை மத்திய அரசு நிராகரித்திருப்பதாக ஊடகங்களிலும், பத்திரிகைகளிலும் செய்திகள் வெளியாகி உள்ளன. இந்த செய்தி தமிழக மக்கள் மத்தியில் பெருத்த ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்துவதோடு ஒட்டுமொத்த தமிழக மக்களின் உணர்வுகளை பா.ஜ.க. அரசு புறக்கணிப்பதாக அமைகிறது.

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல் குறித்து விசாரிக்க வருகை தர இருக்கும் ஐ.நா. விசாரணை குழுவுக்கு மோடியின் தலைமையிலான பாரதீய ஜனதா அரசு விச வழங்கி விசாரணை மு றையாக, முழுமையாக நடைபெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இலங்கை கடற்படையினரின் தவறான அணுகுமுறையால் தமிழக மீனவர்களின் வாழ்வாதாரம் மிகுந்த கவலைக்குரியதாகியிருக்கிறது. இதற்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது மத்திய அரசின் கடமையாகும்.

கடந்த ஐக்கிய முற்போக்கு ஆட்சியின் தொடர் முயற்சியால் இதுவரையில் இரு நாட்டு மீனவ பிரதிநிதிகள் இரண்டு முறை பேச்சு நடத்தியுள்ளனர்.

மீண்டும் தொடர்ந்து மீனவப் பிரதி நிதிகள் பேச்சு நடத்தி ஒரு உடன்படிக்கை ஏற்பட்டு அதன் மூலம் இந்தப்பிரச்சினைக்கு தீர்வு காண தற்போதைய பா.ஜ.க. அரசு வழிவகை செய்ய வேண்டும்.

தமிழக மீனவர்கள் அச்சமின்றி மீன் பிடிக்கவும் எல்லை தாண்டும் பிரச்சி னையைத் தவிர்ப்பதற்கும் மத்திய அரசு இலங்கை அரசோடு பேச்சு நடத்தி இதற்கு உடனடி நிரந்தர தீர்வு காண வேண்டும்- என்றுள்ளது. (வ)

# மழைநேரத்தில் குரங்கு கூடு கட்டுவதை போன்றதே அரசுடைய செயற்பாடுகள்

## கடுமையாகச் சாடுகின்றது ஜாதிக ஹெல உறுமய கட்சி

கொழும்பு, ஜூலை 28
மழை நேரத்தில் குரங்குகள் கூடு கட்டுவதைப் போன்று அரசின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன என்று தெரிவித்துள்ளது ஜாதிக ஹெல உறுமய கட்சி.

பிரச்சினைகள் தொடர்பில் அரசின் தீர்மானங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்று தெரிவித்துள்ள அந்தக் கட்சியின் மேல் மாகாணசபை உறுப்பினர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தேசிய பிரச்சினைகள் தொடர்பில் அரசு ஒரு தலைப்பட்சமான தீர்மானங்களை எடுத்து வருகின்றமை வருத்தமளிக்கின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கூட்டணிக் கட்சிகளிடம் கருத்து கோராமல் அரசு தீர்மானங்களை எடுத்துள்ளது என்றும், அரசிடம் தெளிவான கொள்கைகளோ அல்லது தந்திரோபாயமோ கிடையாது என்பதே இதன் மூலம் தெளிவாகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதியின் விசாரணைக் குழுவுக்கு ஆலோசனை வழங்க நிபுணர்களை நியமித்தல் மற்றும் தென்னாபிரிக்க ஜனாதிபதி ரமபோசவை இலங்கை வருமாறு அழைப்பு விடுத்தமை போன்ற தீர்மானங்கள் இவ்வாறான தன்னிச்சையான முடிவுகள் என்று குறிப்பிட்ட அவர், அரசின் இவ்வாறான முடிவுகள் வீழ்ச்சிகே வழிகோலும் என்றும் தெரிவித்துள்ளார். (ற)

## தரமற்ற எண்ணெய் விற்பனை கண்டுபிடிப்பு



கொழும்பு, ஜூலை 28
தரம் குறைந்த உராய்வு நீக்கி எண்ணை மற்றும் கழிவு எண்ணை விற்பனை செய்யும் சட்டவிரோத நடவடிக்கை களனி பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. களனி குற்றத் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே இந்த சட்டவிரோத நடவடிக்கை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

களனி நாரம்மினிய அபேயாராம வீதியில் அமைந்துள்ள குறிப்பிட்ட இடத்தில் தரம் குறைவான எண்ணையை விற்பனை செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் அனுமதிப்பத்திரங்கள் அவர்கள் வசம் காணப்பட்டவில்லை.

குறித்த இடத்தில் இருந்து 33 பீப்பாய் உராய்வு நீக்கி எண்ணை மற்றும் 24 பீப்பாய் கழிவு எண்ணை உள்ளிட்ட ஹைட்ரோலிக் எண்ணை 4 பீப்பாய்கள் காணப்பட்டன. அத்துடன் 97 வெறும் பீப்பாய்களும் கெப்ரக வாகனமொன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள இரண்டு சந்தேக நபர்களும் மஹர நீதவான் முன்னிலையில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர். (ற-10)

## சமாதான யாத்திரைக்கு தடை

கொழும்பு, ஜூலை 28
ஐக்கிய சோசலிசக் கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்ற சமாதான யாத்திரை பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அளுத்கம, பேருவளை, தர்கா நகர் என்பற்றூடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமாதான யாத்திரையே பொலிஸாரால் தடுக்கப்பட்டுள்ளது. அளுத்கம, பேருவளை, தர்கா நகரைச் சேர்ந்த பிக்குகள் உள்ளிட்ட சிலர் சமாதான யாத்திரைக்கு எதிர்ப்புத் தெரிவித்த நிலையில் மேற்படி யாத்திரை இடம்பெற்றால் மோதல் நிலை உருவாகலாம் என்பதாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆயினும் அந்தக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தலைமையில் கொழும்பு நாரஹேன்பிட்டியவில் இருந்து வஸ்கடுவ வரை யாத்திரை நடத்தப்பட்டுள்ளது. (ற-10)



சிங்களவர்கள், முஸ்லிம்கள், தமிழரிடையே சகோதரத்துவத்தை- ஒற்றுமையை வலியுறுத்தி ஜே.வி.பி.யினரால் வவுனியாவில் கடந்த வெள்ளிக்கிழமை கையெழுத்து பெறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (ற-421)

# அகதிகளை இந்திய அதிகாரிகள் சந்திப்பதற்கு கிளம்பியது எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 28
தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களை இந்திய தூதரக அதிகாரிகள் சந்திப்பதற்கு அனுமதி வழங்கும் ஆஸ்திரேலிய அரசின் தீர்மானத்தை அந்த நாட்டு எதிர்க்கட்சி விமர்ச்சித்துள்ளது.

இந்தியாவிலிருந்து 157 தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களுடன் ஆஸ்திரேலியாவை நோக்கி பயணித்த படகொன்றை ஆஸ்திரேலிய அதிகாரிகள் சில வாரங்களுக்கு முன்னர் கைப்பற்றியிருந்தனர். அவர்கள் தற்போது ஆஸ்திரேலிய நிலப்பரப்புக்குள் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இந்த நிலையில் அவர்களை சந்திப்பதற்கு இந்திய தூதரக அதிகாரிகளுக்கு சந்தர்ப்பமளிக்கப்படும் என்று அந்த நாட்டு குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்திருந்தார்.

ஸ்கொட் மொரிசன் அண்மையில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டு, இந்திய உள்துறை மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர்களை சந்தித்தித்து புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் கலந்துரையாடியிருந்தார். குறித்த படகில் உள்ள 157 புகலிடக் கோரிக்கையாளர்களை இந்திய தூதரக அதிகாரிகள் சந்திப்பதற்கு அனுமதி வழங்குமாறு இதன்போது இந்தியா சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. ஆஸ்திரேலிய அதிகாரிகளால் இடைமறிக்கப்பட்ட படகில் இந்திய குடியுரிமை உள்ளவர்கள் இருந்தால் அவர்களை பொறுப்பேற்பதற்கு தயார் என்றும் இந்தியா உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இதனிடையே, புகலிடக் கோரிக்கையாளர்களை இந்திய அதிகாரிகள் சந்திப்பதற்குஅனுமதி வழங்கப் படுகின்றமை சட்டபூர்வமற்றது என்று ஆஸ்திரேலிய பசுமைக் கட்சியின் செனட்டர் சாரா ஹேன்சன் யங் கூறியுள்ளார்.



பசுமைக் கட்சிய[illegible] செனட்டர் சாரா ஹேன்சன் யங்

ஆஸ்திரேலியமண்ணில் உள்ள தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களை சந்திப்பதற்கு இலங்கை அரசுக்கும் எதிர்காலத்தில் சந்தர்ப்பம் வழங்கப்படுமா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். புகலிடக் கோரிக்கையாளர் களை அரசியல் உதைப்பந்துகளாக கருதி இலகுவில் நகர்த்துவதற்கு பிரதமர் டோனி அபாட் தலைமையிலான அரசு முயற்சிக்கின்றது என் றும் சாரா ஹேன்சன் யங் குற்றம் சுமத்தியுள்ளார். (ற)

விளம்பரம் செய்திட தொடர்பு கொள்ளுங்கள்
advt@uthayan.com
021 567 1111

## மரண அறிவித்தல்

### திருமதி றீற்றம்மா பேதுருப்பிள்ளை



பழைய வாய்க்கால் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் இல.19,மாட்டீன் வீதியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி றீற்றம்மா பேதுருப்பிள்ளை நேற்று (27.07.2014) ஞாயிற்றுக்கிழமை இயற்கை மரணம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும்,காலஞ்சென்ற பேதுருப்பிள்ளையின் பாசமிகு மனைவியும்,அன்ரன் கியோமர் மரியதாஸ்,தவச்செல்வநாயகி (மங்களம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சூசையம்மா, யூட் ஆகியோரின் மாமியாரும்,சாள்ஸ் எனோச், எமில்டன், றொசாயினி,றொசாளினி,சதாசகாயம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (28.07.2014) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
நேரடியான உரையாடற்பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் 50000 இற்கும் அதிகமான சொற்களுடன் சுயமாக ஆங்கிலம்பேச பயிற்றுவிக்கும் "சாம்சனின்" புதிய நேரடி SPOKEN ENGLISH பயிற்சிநெறி.
அரச, தனியார் ஊழியர்கள், பல்கலை ,உயர்கல்வி மாணவர்கள் இளைஞர், யுவதிகள்,வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
புதிய பயிற்சிநெறி ஆரம்பம் 02.08.2014 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
பயிற்சியில் சுயமாகவசனம் உருவாக்கல்,பிரயோகங்கள்,50000சொற்கள் என்பன நேரடி உரையாடற் பயிற்சியின் மூலம் சாம்சனினால் கற்பிக்கப்படும்
பயிற்சியில் இணைய அடிப்படை ஆங்கில அறிவு அவசியமில்லை.
SAAMSON LANGUAGE SCHOOL
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567
021 320 3313

வாகனம் வாடகைக்குத் தேவை
3 கியூப் ரிப்பர் வாகனங்கள்.
தொடர்பு:
077 371 3513, 077 866 6841
(60428)(7.6.3)

hp நளினின் DELL
hp Authorized Parterner
Mega Offer
முந்துங்கள் ! கையிருப்பு உள்ளவரை மட்டுமே !
விசேட விலைகளில்
Loptop
HP Pavilion 15 i3 4th Gen 500/4GB/15.6"/BT/WIFI/CAM - 59,990/=
HP Pavilion 15 i5 4th Gen 500/4GB/15.6"/BT/WIFI/CAM - 76,990/=
HP Pavilion 15 Dual Core 4th Gen 500/2GB/15.6"/BT/WIFI/CAM - 49,990/=
Dell i5 4th Gen 750/4GB/15.6"/BT/WIFI/CAM/WIN8/TUCH - 99,990/=
Dell i3 3rd Gen 500/2GB/15.6"/BT/WIFI/CAM/WIN8/TUCH - 58,990/=
hp Pavilion15
* Condition Apply
Lap - 1 year parts Warranty, 2 years service free
T.P.: 021 222 1121, 021 224 2222, 0777 66 7975
No. 195/4, Parameswara Junction, Palaly Road, Jaffna.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.